www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JUDE
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஆக.24-30,1997
11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 219

## 'றிவிரச' முதல் 'ஜயசிக்குறுய்' வரை



## போரின் பரிமாணம்



## கவர்ச்சி அரசியல்

## "கலராக இருந்தால் இளம் பெண்களுக்கு பிடிக்கிறது"

## அப்பாஸ் பற்றி விஜய்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கிரிக்கெட்டும் கால்பந்தாட்டமும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இலங்கை கிரிக்கெட் அணி
உலக சாதனை படைத்தது.
உலகமெய்வல்லுநர் போட்டியில்
சுசந்திகா என்ற வீராங்கனை
வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கிறார்.

அடுத்தடுத்து இரண்டு
மகிழ்ச்சியான செய்திகள்,
விளையாட்டரங்க வாயிலாக
எட்டியிருக்கின்றன!

புரிந்துணர்வுடன் கைகோர்த்து
திறமையுடன் களமிறங்கி
கட்டுக் கோப்பாகச் செயற்பட்டு
இலங்கை கிரிக்கெட் அணி
உலகை வியக்க வைக்கிறது.

ஒவ்வொரு வீரரும்
தமக்காக ஆடாமல்
அணிக்காக, நாட்டுக்காக
என்ற உணர்வுடன்
விளையாடுவதைக் காண்கிறோம்!

அரசியல் கட்சிகளும்
கிரிக்கெட் அணியை
நான் முந்தி, நீ முந்தி என்று
விழுந்தடித்து பாராட்டியுள்ளன!

பாராட்டுவதைவிட
இலங்கைக் கிரிக்கெட் அணியிடம்
அரசியல் கட்சிகள்
கற்றுக்கொள்ள வேண்டியவற்றை
கற்றுக்கொள்ளல் நன்று.

எதிரேவரும் பந்தைக்கண்டு
துடுப்பாட்ட வீரர்கள்
தப்பி நழுவிச் செல்வதில்லை!
எதிர்த்தாடுகிறார்கள்.
சமயத்தில் விளாசுகிறார்கள்!

எதிர்நோக்கியுள்ள
பொதுப் பிரச்சனைகளை
துணிச்சலோடு எதிர்த்தாடி
விளாசித்தள்ளுவதற்கு
அரசியல்வாதிகள் எத்தனைபேர்
தயாராக இருக்கிறார்கள்?

நம்நாட்டு அரசியல்வாதிகள்
கிரிக்கெட் வீரர்களைப்
பாராட்டினாலும்கூட
கால்பந்தாட்டத்தில்தான்
ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்!

எதிர்த்தரப்பின்
எல்லைக் கோட்டுக்குள்
பந்தை வைத்திருக்கக்கூடிய
தற்காப்பு ஆட்டத்துக்கு
கால்பந்தாட்டமே பொருத்தம்!

அரசியல்வாதிகளுக்கு
தற்காப்பு ஆட்டத்தில்தான் நாட்டம்.
காரணம்: தம் நலமே முக்கியம்.
பிரச்சனைகளை
விளாசி விரட்டியடிப்பதைவிட
பிரச்சனைகளை
மைதானத்துக்குள் வைத்திருக்கவே
விரும்புகிறார்கள்.

கிரிக்கெட்டில்
மைதானத்தைத் தாண்டிப் பந்து
பறந்தால்தான் அசத்தல்!

கால்பந்தாட்டத்தில்-
மைதானத்தின்
எல்லைக்கோட்டை பந்து
தாண்டினால் தப்பாகிவிடும்!

மைதானத்துக்குள்ளேயே
பந்தை வைத்துக்கொண்டு
விளையாடிக் கொண்டிருக்கலாம்!
அதிலும் ஒவ்வொரு தரப்பும்
மறுதரப்பின் எல்லைக்குள்
பந்தை வைத்திருக்கவே
பாடுபட்டுக் கொண்டிருக்கும்!

எனவே- கிரிக்கெட்டைவிட
கால்பந்தாட்டத்தில்தான்
நம நாட்டு அரசியல்வாதிகளுக்கு
ஆர்வம் அதிகமிருக்கும்!

இனப்பிரச்சனை மட்டுமல்ல,
எந்தவொரு பிரச்சனையையுமே
துணிச்சலோடு எதிர்த்தாடி
விரட்டியடிக்கும் வேகம் இன்றி
தீர்த்து வைக்கப்பட முடியாது!

அரசியல்வாதிகள்
இங்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய
வெற்றிக்கிண்ணம்
நீதியான அரசியல் தீர்வுதான்!

அதற்கு,
தற்காப்பு ஆட்டம் உதவாது.
பிரச்சனைகளை
உண்டு, இல்லையென்றாக்கும்
துணிச்சலான விளாசல் தேவை!

கிரிக்கெட் அணியின்
வெற்றிக்குக் காரணம்
விளாசல்தான்!

வெற்றியைப் பாராட்டும்
அரசியல்வாதிகள்
கிரிக்கெட் அணியிடமிருந்து
கற்றுக் கொள்வார்களாக!
கால்பந்தாட்டத்தை
கைவிடுவார்களாக!

தமிழ்க் கட்சிகளுக்கும்
ஒரு வார்த்தை:
தயவு செய்து
'சேம் சைட் கோல்' போடுவதை
நிறுத்துங்கள்!

தடுத்தாடவும் தெரியாமல்
அடித்தாடவும் முடியாமல்
எல்லாவற்றையும்
கவிழ்த்து விடாதீர்கள்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## பொருளாசை

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. பொருளாசையை விக்கிரகம் என்று வேதம் எச்சரிக்கிறது.

இன்றைக்கு அநேக அரசாங்க அலுவலகங்களில் நுழைந்தால் கிறிஸ்தவர்களும், வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் லஞ்சத்தை எதிர்பார்ப்பதைக் காணலாம். காரணம் கைகளில் சுத்தம் இல்லை. பணத்துக்காக நியாயத்தைப் புரட்டுகிற மக்களைப் பார்க்கும் போது நம் இதயம் வேதனைப்படுகிறதல்லவா?

அநேகர் பண ஆசையினால் தங்களை உருவக் குத்திக் கொள்கிறார்கள். அநியாயமாய் சேர்க்கிற பொருள்கள் அநியாயமாய் கடந்து போகும்; லஞ்சம் வாங்குகிறவனுடைய வீட்டை விட்டு வியாதி விலகாதிருக்கும். ஒரு ரூபாய் லஞ்சம் வாங்கினால் பத்து ரூபாய் நஷ்டப்படுவான். அவன் ஆத்துமாவும் நரகத்திலே தள்ளப்படும். அவனுடைய குடும்பத்தில் அமைதி இருப்பதில்லை. தேவ ஆசீர்வாதம் அங்கு தங்குவதில்லை. பிரியமானவர்களே! பொருளாசையாகிய விக்கிரகத்தை விட்டு வெளியே வாருங்கள். அப்போது நீங்கள் ஜெயங்கொண்டவர்களாய் விளங்குவீர்கள். "பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான்." (நீதி.28:16)

தி.பெஞ்சமின் தேவபாலன், மட்டுநகர்

## பெற்றோரை மதித்து நடவுங்கள்

அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு வேறு எதையும் இணைவைக்காதீர்கள். அத்தோடு உங்கள் பெற்றோருக்கு நன்மையே செய்யுங்கள். உங்களது பெற்றோருக்கு சீ என்ற வார்த்தையைக் கூட பேசிவிடாதீர்கள். அவர்களில் இருவருமோ அல்லது ஒருவரோ முதியவயதை அடைந்துவிட்டால் அவர்களுக்கு பணிவிடை செய்து இரக்கமாக நடந்து கொள்ளுங்கள். அவர்களோடு பேசும்போது சங்கையாக பேசுங்கள். அவர்களை விரட்டிவிடாதீர்கள்!

(அல்குர்ஆன்)

தாயின் பாதத்தின் கீழேயே சுவர்க்கம் இருக்கிறது.

(அல் ஹதீஸ்)

ஒருமுறை நபியவர்களிடம் தந்தையும் மகனும் ஒன்றாக உபதேசம் பெற வரும் போதே நபியவர்கள் அவதானித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மகனை அழைத்து "நீயும் உமது தந்தையும் ஒன்றாகச் செல்ல நேரிட்டால் தந்தைக்கு முன்னால் செல்லாதே! உமது தகப்பனை பெயர் சொல்லி அழைக்காதே! நீ உட்காரும் போது தந்தைக்கு முன் உட்காராதே" என்று போதித்தார்கள்.

(அல் ஹதீஸ்)

எம்.எம்.எம்.ஸாமித், கிண்ணியா-03.

## கவிதைப் போட்டி இல.216



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

### தொடர் கதையோ?

இருளகலும், பரிதி வரும்,
உயிரினங்கள் உவகை கொள்ளும்;
போரகலும், தீர்வு வரும்
மக்கள் மனம்- அமைதி பெறும்!
வெண்புறா முதல் காட்டி,
தீர்வுப் பொதி பின் காட்டி,
எதுவுமில்லை என்றாகி
துன்பங்கள் தொடர் கதையோ?

பெரியண்ணா- தவசிகுளம், வவுனியா.

### மறைவதென்ன?

செய்திகளைச் சேகரிக்க
செவ்வாய்க்கும் சென்றுளரே!
செத்து மடியும் மனிதத்தை
செப்பளிட மறந்தனரே!
கரம் கிட்டும் தூரமதில்
சமாதானப் புறாவிருந்தும்
தீர்வுக்குள் எட்டாமல்
பார்வைக்குள் மறைவதென்ன?

தெ. ரஞ்ஜனா- வவுனியா.

### வரவே வராதா?

வெண் புறாவே உனக்கு
பொன் சிறகை தானொடித்தார்!
விண்சமரால் இன்றுனது
கருவையுமே தானழித்தார்!
புதுமுறையில் கருத்தரித்து
இனியமைதிப் புறாவருமா?
எட்டி நாம் தேடுகிறோம்-எம்
கிட்டே நீ வருவாயா?

தர்ஷிக்கா கனகசிங்கம்-
கல்லடி, மட்டக்களப்பு.

### சமாதானம் மலரட்டும்.

வெண்புறாவை அழைக்கின்றாள்,
தேசமாதாவும் கரமுயர்த்தி!
பொன்விழா காணப்போகும்
பொழுதிலேனும் நலம் பயக்க
நிழலாயன்றி வெண்புறாவும்
நிஜமாகத் தோன்றாதோ?

பூ. இதயரெத்தினம்- ஆரையம்பதி-03.

### பிரார்த்தனை!

நம் தேச வெளிகளில்
'புக்காரா'க்கள் மறைந்து
புறாக்கள் பறக்கட்டும்!
மக்கள் மனங்களில்
நேயம் நிறைந்து
மனிதம் மலரட்டும்!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-2.

### காலம் கலியுகம்!

வெண்புறா வந்தென்ன...
வெண்டாமரை மலர்ந்தென்ன..
கண்ணெதிரே கலியுகம்
கடமைதனைப் புரிகையிலே!


செ. அக்னேஸ்வரி-
மடுக்கோவில், மடு.

### சித்திரத்தில் வெண்புறா!

சித்திரத்தில் வெண்புறா
சிரித்திருந்தால் போதுமா?
நித்திலத்தில் எம்முயிர்
நிலைத்திருக்கும் நாளெதுவோ??

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம்.

## கவிதைப் போட்டி இல.219



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 30.08.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.219
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### தண்ணொளிக் காலமிது...!

அர்த்தமுள்ள அமைதியை
இத்தரையில் உதிக்கச்செய்து
வெண்புறாவை விடுவிக்கும்
தண்ணொளிக் காலமிது...!

அ. சந்திரபோஸ்-வஞ்சியன்குளம்,
நானாட்டான்.

### நிம்மதி

அன்று கொல்லும் குண்டுகளால்
அல்லலுறும் எங்களுக்கு
நின்று கொல்லும் தெய்வமேனும்
நிம்மதியை தந்திடுமா?

சி.மு. சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### தொடமுடியாதூரம்..!

வெண்புறாக்களும்
கரங்களும்
மிக மிக அருகில்தான்...!
மனங்கள் மட்டும்
தொட்டு விடமுடியாத
தொலைவில்...!

மெய்யன் நடராஜ்-பூண்டுலோயா.

# வாசக(ர்)சாலை

## கண்ணாமூச்சி விளையாட்டு!

மலையகத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையாகச் செயல்பட்டாலேயே அரசு திக்கு முக்காகி விடும், தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையின்மை அரசுக்கு சாதகமாக அமைந்து விடுகின்றது. முதலில் ஆதரிப்பது-பின்னர் மறுப்பது தமிழர் விடுதலை கூட்டணிக்கு கைவந்த கலையாகிவிட்டது! மக்களுக்காக இவர்களா.... இவர்களுக்காக மக்களா? நல்ல பிரதிநிதித்துவம் அய்யா....!

இரா.விமலேஸ்வரன், டிக்கோயா.

□□

முரசில் இடம்பெறும் இரண்டு தொடர்கதைகளும் முரசுக்கு மகுடம் சூடும் இரண்டு முத்துக்கள்! அத்துடன் நடிகர்/நடிகைகளின் பழைய புகைப் படங்களை பிரசுரிப்பதில் பலே கில்லாடியய்யா நீங்கள்!

கலைப்பிரியன் ம.மு.ரஞ்சன் துரைசிங்கம்,
நோட்டன் பிரிட்ஜ்.

□□

## நன்றி கெட்டவர்கள் நாமல்ல!

அன்பின் முரசு,

தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக ஒரு கண்டனம் ஏனும் தெரிவிக்காத தமிழ்க் கட்சிகளின் செயலினை கண்டித்தாக வேண்டும்.

வாக்குப் போட்ட மக்களையே மறந்த கட்சிகள் வாழ இடம் கொடுத்த மீனவர்களையா ஞாபகம் வைத்திருக்கப்போகின்றன?

'நன்றி கெட்ட சாதியில்லை
நாம் தமிழினம்
தமிழரின் பிரதிநிதிகள் நாமே'-என
கூறிக் கொள்ளும்
தமிழ்க் கட்சிகளே!
நன்றி கெட்டவை-இதை
தமிழக மீனவர்களே
இன்று உணர்ந்திருப்பர்.

ம.பிரேம்குமார், அம்மன் கோயில் வீதி,
திருகோணமலை.

□□

தித்திக்கும் தினமுரசே!

நீ சுமந்து வரும் கவிதைகளில் பஹீமா ஜஹானின் கவிதையில் ஒரு தனி இன்பம்- தனி சோகம். அவரின் மனதிலுள்ளதை கவியாய் வடிக்கிறார் போலும். அவர் தொடர்ந்து எழுத வேண்டும் என்றும், நீ அதை சுமந்து எங்களுக்குத் தரவேண்டும் என்றும் பிரார்த்திக்கிறேன்.

மண்முனை சிபா, காத்தான்குடி-6.

## நண்பர்களே தேவை

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரின் விஜயம் பற்றி முரசத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். அழுதும் பிள்ளையை அவள்தான் பெறவேண்டும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மருத்துவச்சி போன்றதே என்ற கருத்து கச்சிதம். உலக அரங்கில் தேவை நண்பர்களே தவிர எஜமானர்களல்ல என்ற கருத்தும் அவ்வாறே. வெளிநாட்டார் கருத்தென்றதும் ஜால்ரா போடாமல், தேவையான உண்மை உரைத்த முரசுக்கு பாராட்டுக்கள்.

சி.விவேகராசா, பெரியகல்லாறு.

## ஓநாய்கள் அழுதால்....

அன்பு முரசே!

அமெரிக்க அரசாங்கத்தின் இரட்டை வேடத்தையும், பாசாங்கையும் தோலுரித்துக் காட்டினாய். எங்கு விமோசனம் பெறுவதற்கு மனிதகுலம் விரும்புகிறதோ அங்கெல்லாம் சகுனி வேலை செய்வதும், குழி பறிப்பதும் அமெரிக்க அரசுதான். அமெரிக்கா எப்போதுமே நம் பிரச்சனையில் நியாயமான பார்வை செலுத்தியதும் இல்லை. ஆடு நனைகிறது என்று ஓநாய்கள் அழுவதை யார் நம்புவர்?

எம்.புவனராஜ், வவுனியா.

## அமெரிக்கா அமெரிக்காதான்!

வியட்நாமில் பல்லாயிரம் உயிர்களை பலியெடுத்த வல்லரசு, இப்போது உலக மக்கள்மீது பரிவுடன் பேசத் தொடங்கியுள்ளது. வடக்கு-கிழக்கில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகியுள்ளனர். பல்லாயிரம் தமிழ் மக்கள் அகதிகளாகியுள்ளனர். பொருளாதாரத் தடையால் அவதிப்படுகின்றனர். குடியிருப்புக்களை நோக்கி குண்டுகள் பறக்கின்றன. இதனையெல்லாம் கண்டிக்க மட்டும் மனம் வராதோ? அமெரிக்கா அமெரிக்கா தான்!

பூ.உமாதேவி, கொழும்பு-08.

## பதில் எங்கே?

அவுஸ்திரேலிய அமைச்சர் முன்பாக விஷயம் வெளியே வராது என்ற நம்பிக்கையில் பேசிவிட்டார் கூட்டணித் தலைவர். புலிகளைப் பலவீனப்படுத்துமாறு கேட்கும் இவர்கள் தங்கள் பலம் என்ன என்று அறிவார்களா? அப்படிப் பேசவில்லை என்று மறுத்தால் அதன் பிரதியை அவுஸ்திரேலிய அமைச்சருக்கும் அனுப்பத் தயார் என்று 'முரசு' தெரிவித்தமை மிகச் சரி. அப்போதுதான் உள் ஒன்று பேசி புறமொன்று பேசும் இவர்களின் இலட்சணத்தை அவர்களும் உணருவர். ஆனால் தலைவர் மறுப்பே விடவில்லையே!.

எஸ்.சங்கரப்பிள்ளை, திருக்கோணமலை.




என் இனிய முரசுக்கு!

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக படித்து வருகிறேன்.

முரசே! நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் அருமை. அதிலும் என்னை மிகவும் கவர்ந்தவை-அற்புதனின் அரசியல் தொடர். நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட், பிரபஞ்சனின் கனவு மெய்ப்பட வேண்டும், ராஜேஸ்குமாரின் உடைந்த இரவுகள், ரசிகனின் இலக்கியநயம் என்பன. முக்கிய குறிப்பு:- 214வது முரசில் வெளிவந்த முத்தமிழனின் 'கூட்டணியினருக்கு ஒரு மடல்' மிகவும் அருமை.

முரசே! இந்த அன்பனின் ஒரு சிறிய வேண்டுகோள். அது உம்மால் முடியுமாயின் தயவுசெய்து நிறைவேற்றிவைக்கவும். என்னவென்றால் தமிழில் வெளிவருவதுபோல் சகோதர மொழியான சிங்களமொழியிலும் வரவேண்டும் என்பதுதான் எனது அவா.

நடேசு மகிந்தன், ஜெர்மனி.

## திமிர் பிடித்து அலைதல் அல்ல

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன் என்பதுகூட பரவாயில்லை, கயவனானாலும் புருசன் என்பதுதான் பெரிய கொடுமை. அந்தக் கயவனை சகித்துக்கொண்டு இருப்பதை யார் நியாயப்படுத்தினாலும் அவர்கள் வக்கிர மனம் கொண்டவர்கள்தான். பெண்ணைக் கேவலமான பூச்சியாகக் கருதும் ஆண் மக்கள் சிலர் பெண் விடுதலை என்பதை கொச்சைப்படுத்தும் ஜோக்குகளை எழுதுகிறார்கள். கதைகளை வெளியிடுகிறார்கள். 'முரசு' அவற்றை தவிர்த்து வருவதை நாம் அறிவோம். 'கனவு மெய்ப்படவேண்டும்' கதை மூலம் பெண் விடுதலை என்பது திமிர் பிடித்து அலைதல் அல்ல என்பதை தெளிவான உணர்ச்சிகளுடன் பிரபஞ்சன் நிலை நிறுத்துகிறார். சிறந்த படைப்பை தரும் முரசுக்கு பாராட்டுக்கள்.

செல்வி சி.லோகேஸ்வரி,
செல்வி பி.லாவண்யா, கொழும்பு-09.



படிப்பகம்

www.padippakam.com

# 'றிவிரெச' முதல் 'ஜயசிக்குறுய்' வரை புலிகளின் நிலை!

## விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள பட்டியல்

மூன்றாம் கட்ட ஈழப்போரை 1995 ஏப்ரல் மாதம் தாம் தொடங்கிய பின்னர் படையினருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் தொடர்பாக புலிகள் பட்டியல் வெளியிட்டுள்ளனர். அரச படைகளுடனான கடந்தகாலப் போர்களைவிட கடந்த ஒருவருடப் போரில் படைத்தரப்புக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக புலிகள் கூறியுள்ளனர்.

புலிகள் இயக்கத்தின் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' வெளியிட்டுள்ள அப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு:

"மூன்றாம் கட்ட ஈழப் போர் தொடங்கி சரியாக ஒருவருட காலத்தில் (1995 ஏப்-1996 ஏப்) யாழ் குடாநாட்டை படைகள் ஆக்கிரமித்தன. குடாநாடு கைப்பற்றப்பட்ட பின்னர் தற்போதுவரை படையினர் 3800 பேரை பலிகொடுத்துள்ளனர்.

'ஓயாத அலைகள்' நடவடிக்கையில் 1400 படையினரும், 'சத்ஜய'வுடனான எதிர்ச் சமரில் சுமார் 650 படையினரும், கிழக்கில் புளுக்குணாவ முகாம் தகர்ப்பில் 50 படையினரும், பரந்தன், ஆனையிறவு மீதான பெரும் தாக்குதலில் சுமார் 300 படையினரும், வவுணதீவு முகாம் தகர்ப்பில் 150 படையினரும், 'ஜயசிக்குறுய்'க்கு எதிரான சமரில் இதுவரை சுமார் ஆயிரம் படையினரும் பலியாகி உள்ளனர்.

இவை தவிர வடக்கிலும், கிழக்கிலும் நடந்த பல்வேறு பதுங்கித் தாக்குதல் மற்றும் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவங்களில் 250க்கு மேற்பட்ட படையினர்வரை பலியாகியுள்ளனர்.

புலிகள் இயக்கத்துக்கும் சிறீலங்கா படையினருக்கும் இடையேயான எந்தவொரு ஒருவருட போரை ஆய்வுக்காக எடுத்தாலும் அவை எல்லாவற்றையும்விட 1996-1997ஐக் கொண்ட ஓர் ஆண்டுப் போரில் படையினர் சந்தித்த ஆள் இழப்பு மிக அதிகமாகும். ஆள் இழப்பு மட்டுமல்ல, 'றிவிரெச'வின் பின்னர் நடந்த இந்த ஒருவருடப் போரில் சிறீலங்கா படையினர் சந்தித்த படைக்கல இழப்பும் பாரியதாகும்.

### படைக்கல இழப்பு

வான்படை 14 வான்கலங்களை (விமானங்கள், ஹெலிகள் உட்பட) இழந்துள்ளது. வான்கல இழப்புக்கு பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டாலும், இந்தப் போராண்டில் அவை அழிந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் நான்கு கடற்கலங்களை கடற்படை இழந்துள்ளது.

அத்துடன் 16 டாங்கிகளையும், (சத்ஜயவில் 4, பரந்தனில் 2, ஜயசிக்குறுய்யில் 10) மற்றும் 16 ஆட்டிலெறிகளையும், (ஆனையிறவில் 9, நொச்சிமோட்டையில் 3, முல்லைத்தீவில் 2, புளுக்குணாவவில் 1, ஓமந்தையில்1) இந்தப் போராண்டில் படையினர் இழந்தனர். இதில் முல்லைத்தீவிலும், புளுக்குணாவவிலும், ஓமந்தையிலும் ஆட்டிலெறிகளை புலிகள் கைப்பற்றினர்.

சிறீலங்கா படையினர் படைக்கல சக்தியை இழந்துள்ளபோது, புலிகள் மூன்று 120 எம்.எம். ஆட்டிலெறிகளையும், ஒரு 81 எம்.எம். ஆட்டிலெறியையும் கைப்பற்றியுள்ளதுடன், 120 எம்.எம். ஷெல்களையும், 120 எம்.எம். மோட்டார்களையும், அதற்கான ஷெல்களையும் கைப்பற்றியுள்ளனர். தமது படைக்கலச் சக்தியை பெருக்கியுள்ளனர்.

இதேவேளை ஆட்பல உயர்விலோ, ஆயுத தளபாட உயர்விலோ படைத்தரப்பினர் பெரிதாக எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் புலிகள் இயக்கம் ஆட் தொகை அதிகரிப்பில் மேன்மை கண்டுள்ளது. படையினரிடமிருந்து ஆயுத வளங்களை கைப்பற்றுவதிலும் சாதனைகள் படைத்துள்ளது.

போர்த்திறனிலும் புலிகள் அபார வளர்ச்சி பெற்றுள்ளனர். தலைவர் பிரபாகரனின் நுட்பமான திட்டமிடலும், தாக்குதல் தந்திரோபாய ஆலோசனைகளும், பயிற்சிகளுக்கான அறிவுரைகளும்தான் இந்தப் போர்த்திறன் வளர்ச்சிக்கு பிரதான காரணிகளாகும்.

அத்துடன் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் புலிகள் இயக்கத்தின் மரபுவழிப் போர் பலம் அதிகரித்துள்ளது. ஆட்டிலெறி உபயோகமும், 120 மி.மீட்டர் மோட்டார்களின் பயன்பாட்டையும் புலிகள் இயக்கம் அதிகரித்தமை முக்கியமானதாகும்"

இவ்வாறு விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

# தொடர் அணிமீது இரண்டாவது தாக்குதல்!

## இரு கடற் புலிகள் பலி என்று தெரிவிப்பு!

முல்லைக் கடலில் கடற்புலிகளுக்கும் கடற் படையினருக்கும் இடையே கடந்த 14.08.97 அன்று மோதல் ஒன்று ஏற்பட்டது.

கடற்படையினரின் தொடர் அணிமீது கடற்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். கடற்புலிகளின் தாக்குதலில் ஒரு டோராப் படகு சேதமடைந்தது.

கடற்புலிகளின் அணிகளை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் தொடுத்தனர். அதனால் கடற்புலிகளின் படகுகள் தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பிச் சென்றன.

கடற்புலிகள் தரப்பில் இரண்டுபேர் பலியானார்கள். கப்டன் வசிந்தன் (நடராஜா மனோகராசா-யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் செல்வன் (அருந்தவராசா அருனேஸ்வரன்-யாழ்ப்பாணம்) ஆகியோரே பலியானவர்கள் ஆவர்.

இதற்கு முன்னரும் கடலில் கடற்படையினரின் தொடர் அணிகள்மீது கடற்புலிகள் தாக்குதல்கள் நடத்தியிருந்தனர். அவை பாரிய ஊடறுப்பு தாக்குதல்களாகும். அச் சண்டைகளில் கடற்புலிகளும், கடற்கரும் புலிகளும் பங்கெடுத்துள்ளனர்.

14.08.97ல் நடைபெற்ற கடற்சமரை பாரிய முதல் சமர் என்று சில செய்திகளில் தெரிவிக்கப்பட்டது. கடற்படைத் தொடர் அணிமீது கடற்புலிகள் தாக்குதல் நடத்தியது இதுவே முதற்தடவை என்றும் அச் செய்திகளில் கூறப்பட்டிருந்தது. அவை தவறானதாகும்.

23.03.97 அன்று பாரிய கடற்படைத் தொடர் அணிமீது கடற் புலிகள் பாரிய ஊடறுப்பு தாக்குதல் நடத்தியிருந்தனர். 'பராக்கிரமபாகு' என்னும் யுத்தக் கப்பல், மற்றும் ஜகத்தா, ரணவீர ஆகிய பீரங்கிப் படகுகள், அத்தோடு நான்கு அதிவேக டோராப்படகுகள் தொடர் அணியாக சென்ற போதே முல்லைக் கடலில் வைத்து கடற்புலிகளின் பாரிய தாக்குதலுக்கு உள்ளாகியது.

அந்தக் கடற்சமரும் கடற்படையினரால் முறியடிக்கப்பட்டது. நான்கு கடற்கரும் புலிகள் உட்பட ஐந்து பேர் புலிகள் தரப்பில் பலியாகினர். கடற்படையினர் தரப்பில் ஒருவர் பலியானார். ஒரு டோராப் படகும் செயல் இழந்தது. பராக்கிரமபாகு கப்பல் சிறு சேதத்துக்கு உள்ளானது. 1997மார்ச் 23ல் நடைபெற்ற அச் சமர்தான் கடற்படை தொடர் அணிமீது கடற்புலிகள் நடத்திய முதல் பெரும் தாக்குதலாகும்.

கடந்த 14.08.97ல் நடைபெற்ற கடற்சமர் முன்னைய கடற்சமர்போல பாரியதாக இருக்கவில்லை. கடற்கரும்புலிகளும் சமரில் பங்குகொள்ளவில்லை. எனினும் இச் சமர் பாரியது என்றும், கடற்புலித் தளபதி சூசை தலைமையில் கடற்புலிகள் வந்தனர். 15 கடற்புலிகள் பலியாகினர் என்று படைத் தரப்பின் செய்திகள் தெரிவித்திருந்தன.

# தரைநகர்வும் கடும் மோதலும்

'ஜயசிக்குறுய்' படையினர் புளியங்குளத்தை கைப்பற்றும் தரைநகர்வில் ஈடுபட்ட போது, புலிகளும் கடுமையான பதிலடித் தாக்குதலில் ஈடுபட்டனர். 18.08.97 அன்று இரவு புலிகளின் நிலைகளை நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன. புலிகளும் பதிலடியாக ஷெல் வீச்சுக்களில் ஈடுபட்டனர்.

புளியங்குள ஷெல் அதிர்வுகள் வவுனியா நகர்வரை கேட்டவண்ணமிருந்தன. விமானப் படையினரும் குண்டுவீச்சு நடத்தினார்கள். மோதல்கள் செவ்வாய் பகல்வரை தொடர்ந்தது.

மோதலில் பலியான காயமடைந்த துருப்புக்கள் வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து வான் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

புளியங்குளத்தில் புலிகளால் நிறுவப்பட்டுள்ள பாரிய பாதுகாப்பு அரண்களை நெருங்குவது படையினருக்கு இயலாமல் உள்ளது. அதனால் விமானக் குண்டுவீச்சு மூலம் அவற்றை அழித்தொழித்துவிட்டு தரைநகர்வை மேற்கொள்ள கடும் முயற்சியில் படையினர் இறங்கியுள்ளனர். தரை நகர்வு முயற்சி தமது கடும் பதிலடித் தாக்குதலை சந்தித்துள்ளது என்று புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

# பூவரசங்குள பாதைத் திறப்பு-புலிகளின் அனுமதி கிட்டுமா?

வவுனியாவில் இருந்து வன்னி பெரு நிலப்பரப்புக்கான தரைப்பாதையை திறக்க படையினர் அனுமதி அளித்துள்ளனர். இது வரை மன்னார் உயிலங்குளம் வழியாகவே வன்னி பெரு நிலப்பரப்புக்கான போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

பூவரசங்குளம் ஊடாக பாதையை திறந்தால் பயணிகளின் சிரமங்கள் பெரிதும் குறையும் என்று கூறப்படுகிறது. இப்பாதைத் திறப்புக்கு படையினர் சம்மதம் தெரிவித்திருப்பினும், புலிகள் தரப்பில் இதுவரை சம்மதம் தெரிவிக்கப்படவில்லை.

புலிகள் சம்மதம் தெரிவிக்கப் பின்நிற்பதற்கு சில காரணங்கள் கூறப்படுகின்றன. இப் புதிய பாதை திறக்கப்பட்டால் பயணிகள், மற்றும் தகவல் கொடுப்போர் ஊடாக அன்றாடத் தகவல்களை படையினர் பெற்றுக் கொள்வார்கள். புலிகளின் வன்னி நிலைகள், நடவடிக்கைகள் தொடர்பாக உடனுக்குடன் படையினருக்கு தகவல்கள் கிடைத்துவிடலாம் என்று புலிகள் நினைப்பதாகக் கூறப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பமான பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு நேரடிப் போக்குவரத்தும் தடைப்பட்டது. இதனால் வவுனியாவில் உள்ள படையினரின் தகவல் திரட்டும் மையத்துக்கு கிடைத்துவந்த தகவல்களும் தடைப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது.

வவுனியாவில் இருந்து தடைசெய்யப்பட்ட பொருட்களை அனுப்ப இடைத் தரகர்களாக இருந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சிங்களத்தில் குடியிருப்பாளர் அட்டவணை

மட்டக்களப்பு மாவட்டத்தில் புளியந்தீவு பகுதியில் குடியிருப்போருக்கு படையினரால் புதிய கட்டுப்பாட்டு விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் வசிப்பவர்களுக்கு சிங்களத்தில் வழங்கப்படும் புதிய குடியிருப்பாளர் அட்டவணை வழங்கப்பட்டபின்னர் முன்னர் இருந்துவந்த குடியிருப்பாளர் அட்டவணைகள் செல்லுபடியற்றதாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புதியகுடியிருப்பாளர் அட்டவணை வழங்குவதற்காக தற்போது புளியந்தீவு பகுதியில் கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

புளியந்தீவு பகுதியில் தற்காலிகமாக குடியிருக்க விரும்புவோர் 14 நாட்கள் மட்டுமே தங்க அனுமதிக்கப்படுவர். அவ்வாறு தங்க விரும்புவோர் தமது நன்னடத்தை பற்றி தாம் வசிக்கும் பகுதியின் கிராம சேவகரின் சிபாரிசுக்கடிதம் பெற்றுவரவேண்டும். அத்தோடு புளியந்தீவு கிராமசேவகரின் சிபாரிசுக் கடிதமும் பெறவேண்டுமாம்.

தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பாக ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவுகளை பிறப்பித்துள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. புளியந்தீவில் குடியிருக்கும் தமிழ் மக்களுக்கு சிங்களத்தில் புதிய குடியிருப்பாளர் அட்டவணை வழங்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# சப்-இன்ஸ்பெக்டரின் மனிதாபிமானம்

மட்டக்களப்பு- இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு எதிரில் உள்ள சோதனைச் சாவடியில் ஆத்திரம் கொண்ட பொலிஸ்காரர் ஒருவர் 4 இளைஞர்களையும், 2 யுவதிகளையும் தனக்கு முன்னால் அவர்கள் சைக்கிளில் சென்றார்கள் என்ற ஆத்திர மேலீட்டால் அவர்களைத் தெருவோரத்தில் நீண்டநேரம் குந்தியிருக்க வைத்தார்.

குறித்த பொலிஸ்காரர் இவ்விதம் நடந்து கொண்டது அவ்விடத்தால் போவோர் வருவோருக்கு விசனத்தை உண்டு பண்ணியது. இவ்விடயம் எப்படியோ சப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரியவரவே அவர் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து இவ்வித வேண்டத்தகாத நடவடிக்கையிலீடுபட்ட பொலிசாரை வன்மையாகக் கண்டித்ததுடன் அந்த இளைஞர் யுவதிகளையும் அங்கிருந்து செல்லுமாறு பணித்தார். சப்-இன்ஸ்பெக்டரின் மனிதாபிமான நடவடிக்கை அங்கு நின்ற பொது மக்களால் பாராட்டப்பட்டது.

# 'அமெரிக்கா நிறுத்த வேண்டும்'-புலிகள் கோரிக்கை

வன்னியில் கிறிஸ்தவ தேவாலயம் மீதும், இந்துக் கோவில்மீதும் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சு தொடர்பாக விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

"15.08.97 அன்று வவுனிக்குள தேவாலயம் மீதான தாக்குதலில் ஒன்பதுபேர் பலியாகினர். பதினைந்துபேர் காயமடைந்தனர். புதுவிளாங்குளத்தில் சிவன் கோயில் அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் பத்துமாதக் குழந்தை ஒன்றும், ஒன்பது பொதுமக்களும் காயமடைந்தனர்.

இடம்பெயர்ந்து தங்கியுள்ள பொது மக்கள்மீதும், தேவாலயங்கள்மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த மனித அவலத்தை ஏற்படுத்தும் விமானங்கள் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை சிறீலங்காவுக்கு விற்பனை செய்வதை அமெரிக்கா அரசு அனுமதிக்கக்கூடாது. அத்தகைய ஆயுதங்களை பொதுமக்கள்மீது பாவிப்பதையும் அமெரிக்கா அரசு கண்டிக்கவேண்டும்" என்று புலிகள் கோரியுள்ளனர்.

கடந்த 11.08.97 அன்று திருமலையில் திரியாய் பகுதியிலும், வன்னியில் புளியங்குளம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. முல்லைத்தீவில் வீசப்பட்ட விமானக் குண்டொன்று வெடிக்காத நிலையில் புலிகளால் எடுக்கப்பட்டது. ஐந்தரை அடி உயரமும், 250 கிலோவும் உடையதாக அக் குண்டு காணப்படுகிறது.

15.08.97 அன்று வவுனிக்குளப் பகுதியில் நடந்த தாக்குதலில் அவ்வாறான குண்டுகள் பன்னிரண்டு வீசப்பட்டதாக புலிகளின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெனிவாவுக்கு மகஜர்

ஜெனிவாவில் உள்ள 'மனித உரிமை அமைப்பு'க்கு கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறது. இந்த வருடத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் போரால் ஏற்பட்ட இழப்புக்கள், சேதங்கள் தொடர்பாக அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி நிர்வாக எல்லைக்குள் 98 பொதுமக்களும், கண்டாவளைப் பகுதியில் 14 பொதுமக்களும், கரச்சிப் பகுதியில் 10 பொது மக்களும் பலியாகியுள்ளதாகவும், கிளிநொச்சியில் 73 பொதுமக்கள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாகவும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

# நால்வரைக் காணவில்லை!

கிளிநொச்சியில் முரசுமோட்டைப் பகுதியில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற ஐந்து பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்து வந்த இவர்கள் தமது வீடுகளைப் பார்வையிட்டுவருவதாகக் கூறிச் சென்றார்களாம்.

பரமு வசந்தகுமார் (25), வேலவன் ஐயாத்துரை (40), ரத்தினம் சற்குணநாதன் (32), தம்பிராசா தயாபரன் (25) ஆகிய பொதுமக்களே காணாமல் போயுள்ளனர். இவர்களைத் தேடிச் சென்ற உறவினர்கள் இவர்கள் சென்ற துவிச்சக்கர வண்டிகளையும், உடைகளின் பகுதியையும் கண்டெடுத்துள்ளனர்.

# கூக்குரலிட்டதால் குறி தவறியது!

கடந்தவாரம் மட்டக்களப்பு- கொம்மாதுறை படை முகாமுக்கு மிக அருகில் புலிகள் இயக்கத்தினர் மூவர் வந்து பதுங்கிக் கொண்டனர். கைகளில் உரப்பை.

இவர்கள் அப்பகுதியில் நடமாடும் இராணுவப் புலனாய்வுத் துறையினருக்குக் குறிவைத்தே காத்திருந்தனர். அப்பொழுது புலனாய்வுத் துறையினரும் புலிகள் இயக்கத்தினர் காத்திருந்த இடத்திற்குச் சற்று அப்பால் விசயம் புரியாது நின்றிருந்தனர். விபரீதம் நடக்கப் போவதையறிந்த பொதுமக்கள் ஓலமிட்டுக் கொண்டு ஓட ஆரம்பித்த சமயம் இதனையறிந்த படையினர் பதற்றப்பட்டு விழிப்படைந்த பொழுதுதான் விசயம் புரிந்தது.

புலிகள் இயக்கத்தினரும் தமது திட்டம் பொதுமக்களின் பதற்றத்தினால் சீர்குலைந்த பொழுது பொது மக்களுடன் மக்களாக ஓடி மறைந்தனராம். பின்னர் படையினர் தேடுதலில் ஈடுபட்டனர். எனினும் புலிகள் அகப்படவில்லை.

# ஓடியவர்களுக்கு சூடு

யாழ் குடாநாட்டில் கைதடிப்பகுதியில் படையினர் ரோந்து சென்றனர். படையினரைக் கண்டதும் பயத்தில் ஓட முயன்ற இரண்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கைதடி வடக்கைச் சேர்ந்த மயில்வாகனம் தவபாலன் (37) என்பவர் பலியானவர்களில் ஒருவர் என்று இனம் காணப்பட்டுள்ளார். இவர் தனது தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு சென்றவராவர்.

# அரசியல்வாதிகளால் ஆசிரியர் பற்றாக்குறை!

## பதுளை வலயக் கல்வியதிகாரி கவலை!

"அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளினால் ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்கு-ஆசிரியர்கள் மித மிஞ்சிய பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் செய்வது பெரும் நெருக்கடியாகவுள்ளது. பதுளை-லுனுகலை, மெட்டிகஹதென்ன போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை வெகுவாகக் காணப்படுகிறது. இதனைச் சமப்படுத்துவதற்காக நாம் ஆவன செய்து இடமாற்றத்தை வழங்கும்போது அரசியல்வாதிகள் விழுந்தடித்துக் கொண்டு அந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து விடுகிறார்கள். இது பின்தங்கிய மாணவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநியாயம்" என்று பதுளை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.டி.எம். பியசேன தெரிவித்தார்.

"பசறைப் பகுதி எனது சொந்த இடமாக இருந்தும் அங்குள்ள பல பாடசாலைகள் எதுவித வசதிகளுமின்றிக் காணப்படுகின்றன. ஆசிரியர் பற்றாக்குறையினாலும் மற்றும் ஏனைய பௌதீக வளங்கள் குறைவினாலும் இப்பகுதியிலுள்ள பாடசாலைச் சிறார்கள் சிறந்த கல்வியைப் பெறமுடியாது பரிதவிக்கிறார்கள். வளர்ந்தவர்களால் அரசியல்வாதிகளின் உதவியை நாடி பின் தங்கிய பகுதிகளுக்கு வழங்கப்படும் இடமாற்றத்தை இரத்துச் செய்யவும், புதிய இடமாற்றங்களைப் பெறவும் முடியும். ஆனால் இந்தப் பகுதிகளின் வறிய சிறார்கள் தங்கள் நலன்களுக்காக அரசியல்வாதிகளைப் பின்தொடர முடியுமா?

சமீபத்தில் தனது சம்பளத்தை நிர்ணயம் செய்து கொள்வதற்கான சகல ஆவணங்களையும் ஒரு ஆசிரியை தான் ஆறு மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பித்ததாகச் சொன்னார். ஆனால் சம்பந்தப்பட்ட இலிகிதர் எதுவுமே செய்யவில்லை. கல்வித் திணைக்களத்தில் நடக்கும் இத்தகைய குளறுபடிகளை முடிவுக்குக் கொண்டுவர நான் ஆவன செய்து வருகிறேன். திட்டமிட்ட கல்வித் திட்டத்தை மனதிற் கொண்டு வறிய பகுதிச் சிறார்களின் நலன்களுக்காக ஆசிரியர்கள் நீதியான சேவை வழங்க வேண்டும்."

இவ்வாறு சமீபத்தில் பசறை மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர்களுக்காக நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

# படையினர் தப்பினர்

உரும்பிராயில் புலிகளின் பாரிய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் இருந்து படையினர் தப்பினார்கள்.

கடந்த 15.08.97 அன்று காலை 9 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது. உரும்பிராய் இந்துக்கல்லூரி விளையாட்டு திடலுக்கு அருகில் பலாவி வீதியில் கண்ணிவெடி ஒன்றை புலிகள் புதைத்து வைத்திருந்தனர்.

அவ்வீதி வழியாகச் செல்லும் படையினரின் ரோந்து அணியை தாக்குவதே புலிகளின் குறியாக இருந்தது. ஆனால் கண்ணிவெடி தவறுதலாக முன்னரே வெடித்துவிட்டது. பாரிய சத்தத்துடன் கண்ணிவெடி வெடித்த பின்னர் அந்த இடத்தில் பெரிய கிடங்குபோல் தாக்கம் ஏற்பட்டிருந்தது. இதனால் அப் பகுதியில் போக்குவரத்துக்கள் தடைபட்டன. யாருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

# நிதிப் பொறுப்பாளரின் தலைமறைவும் கைதும்!

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பகுதிப் புலிகள் இயக்கத்தின் நிதிப்பொறுப்பாளராக இருந்தவர் என்று கூறப்படும் செல்வம் என்பவர் சில தினங்களாகத் தலைமறைவாகியிருந்த பின்னர், கடந்த ஜூலை 28ம் திகதி கொம்மாதுறைப் படை முகாமுக்குச் சமீபமாக உள்ள தீவு எனும் இடத்தில் வயல் வாடியொன்றில் வைத்துப் புலிகள் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். தேவா என்பவரின் வயல் வாடியில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் கைதாகும்போது பொது மக்களிடமிருந்து வசூலிப்புச் செய்த சுமார் பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை இவரது கைவசம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு-அம்பாறைப் பிராந்தியக் காரியாலயம் அமைந்துள்ள இலுப்படிச்சேனையில் புலிகளால் நடத்தப்படும் தேனீர்க் கடை, சில்லறைக் கடை என்பவற்றை இவரே பொறுப்பேற்று நடத்தி வந்தவராம். புலிகள் இவரைக் கைது செய்து உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லும்போது பொதுமக்கள் பார்த்து நின்றனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு தாந்தாமலை ஆலயத் திருவிழாவின்போது இவரும் இவரது நண்பர்களும் எடுத்துக் கொண்ட புகைப்படங்களையும் ஆதாரமாக வைத்தே புலிகள் மேலதிக விசாரணையை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

# போருக்குச் செல்ல விரும்பவில்லை!

## பிடிபடாமல் தப்ப தற்கொலை!

விடுமுறை பெற்று வீட்டுக்கு வந்த படை வீரர் ஒருவர், மீண்டும் போருக்குச் சென்று கடமையைப் பொறுப்பேற்க விரும்பாத நிலையிலும் அவ்வாறு கடமைக்குச் செல்லாவிட்டால் படையினரால் கைது செய்யப்படும் நிலையுள்ளதாலும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

களுத்துறை-கல்லெனமுல்ல பலாகெல்ல என்ற இடத்தைச் சேர்ந்த மானபகங்கணமாகே பிரியந்த என்ற 20 வயதுச் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராகும்.

"ஆனையிறவுப் படை முகாமில் கடமையாற்றிய எனது மூத்த மகனான காலஞ்சென்றவர் விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் மீண்டும் கடமைக்குச் செல்லவும் விரும்பவில்லை. அதே வேளை படையினரிடம் பிடிபடவும் விரும்பவில்லை. இந்நிலையிலேயே அவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஜூலை 22ம் திகதி இவர் மரணமானார்" என்று இவரது தாயான தயாவதி களுத்துறை சடுதி மரண விசாரணை அதிகாரி திரு.என்.டி. பத்மசிறியிடம் சாட்சியமளித்தார்.

www.padippakam.com

# தொப்பி அணியத் தடை
## முஸ்லிம் பிரமுகர்கள் வருத்தம்

(கண்டி நிருபர்)

12 வருடங்களுக்குப் பின்னர் பெரஹறா உற்சவ காலத்தின்போது தம்மைச் சந்திக்க வந்த கண்டி வாழ் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு தலதாமாளிகையின் தியவதன நிலமே திரு. நிரஞ்சன் விஜேரத்ன நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்.

கண்டி எசல பெரஹறா வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு கொண்டாட்டமாகும். இந்த நிகழ்ச்சியின் போது கண்டி வாழ் இந்துப் பெருமக்கள் ஆண்டு தோறும் தலதா மாளிகைக்குச் சென்று தியவதன நிலமேயைச் சந்தித்து உரையாடி பெரஹறாவின் உச்ச திருவிழாவான ரந்தோலி பெரஹறாவில் கலந்து கொண்டு மேளதாள வாத்தியங்களுடன் உலாவில் பவனி வருவது சம்பிரதாய பூர்வமான நிகழ்ச்சியாகிவிட்டது.

கண்டி நகரில் மூவின மக்களும் சரிசமமாக வாழ்வதுடன் வர்த்தக நிலையங்களையும் நடத்துகின்றனர். இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் நல்லுறவையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் கண்டியின் புதிய பிரதி மேயர் இஸட். எ.எம்.ராஸிக் அவர்கள் தியவதன நிலமேயுடனான சந்திப்பு ஒன்றை கடந்த 12 ஆம் திகதி தியவதன நிலமேயின் உத்தியோக அலுவலகத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் வர்த்தகப் பிரமுகர் பலரும் கலந்து கொண்டு சிங்கள-முஸ்லிம் பண்டைய உறவு பற்றியும் உரையாடி மகிழ்ந்தனர். தியவதன நிலமேயும் இவர்களின் வருகை குறித்து நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவித்துக் கொண்டார்.

என்றாலும் அங்கு சென்ற முஸ்லிம்களுக்கு தலையில் தொப்பி அணிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டது குறித்து தூதுக் குழுவில் கலந்து கொண்டோர் மத்தியில் சிறிது முறுகல் ஏற்பட்டது.

புனித தந்த சின்னம் உள்ளே இருப்பதால் தொப்பி அணிந்து உள்ளே செல்ல ஒருவரும் அனுமதிக்கப்படமாட்டார் என்ற உத்தரவு அங்குள்ள அதிகாரம் உடையவர் இடத்தில் இருந்து வந்ததால், எல்லோர் கைகளிலும் இருந்த தொப்பிகள் மீண்டும் அவர்களின் சட்டைப்பைக்குள் செல்லப்பட்ட காட்சி குறித்து சிலர் அழாக்குறையாக முரசு நிருபரிடம் கூறி கவலைப்பட்டனர்.

முஸ்லிம்களின் கலாசார உடையின் ஒரு பகுதிதான் தொப்பி என்பதையும் அதனை நாம் எங்கும் அணிய எமக்கு உரிமை உண்டு என்பதையும் கூறி அந்த சந்திப்பில் கலந்து கொண்ட முக்கிய வர்த்தகப் பிரதிநிதி ஒருவர் கவலைப்பட்டதுடன் இதுவும் எமக்கு ஒரு பாடமாகிவிட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின் தளபதி பற்றி விசாரணை
## கூட்டணிப் பிரமுகர் விளக்கம்

(திருமலை நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருக்கோணமலைக் கிளைத்தலைவர் திரு.செ. பத்மநாதன் (ஈழத்து நாதன்) ஆகஸ்டு 9ந் திகதி இரவு அவரது வீட்டில் வைத்து இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் 14ந் திகதி காலை விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான தினத்தன்று மாலை 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் வைத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்து தான் கைதானதுபற்றி விளக்கமளித்தார்.

அவரது விளக்கத்தின் சாரம் பின்வருமாறு:

"எனது கைது பற்றி தொடர்புச் சாதனங்கள் பலவிதமான ஊகங்களை வெளியிட்டுள்ளன. இது எனது அரசியல் பொது வாழ்க்கைக்கு ஊறு விளைவிக்கக் கூடுமென்பதால் உண்மை நிலையைத் தெளிவுபடுத்துகிறேன்.

தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் த.வி.கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினருமான நான் திருக்கோணமலைக் கிளையில் தலைவராகவும் இருந்தேன். என்னை அழைத்துச் சென்றவர்களோ விசாரணை செய்தவர்களோ என்னைப் பொறுத்தமட்டில் கண்ணியமாகவே நடந்து கொண்டுள்ளனர்.

அவர்களது விசாரணையெல்லாம் புலிகளின் தளபதி சொர்ணத்துக்கும் எனக்குமுள்ள தொடர்பு பற்றியதாகவே அமைந்தது.

புலிகளின் தளபதிகளில் ஒருவரான சொர்ணம் என்றழைக்கப்படும் யோசப் அன்ரனிதாஸ் எனது மனைவியின் இளைய சகோதரர். நான் அவரது தமக்கையாரை மணமுடிக்கும்போது அவருக்கு வயது எட்டு. 83 பிற்பகுதியில் அவர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டார்.

அதன்பிறகு தற்போதைய அரசு-புலிகள் பேச்சு வார்த்தைக் காலத்தில் உறவினர் ஒருவரின் சுகயீனம் காரணமாக நான் யாழ்ப்பாணம் சென்றபோது அவர் என்னை வந்து சந்தித்துப் பேசினார். இந்த ஒரு தடவை தவிர அவரை முன்னரோ பின்னரோ சந்தித்ததில்லை. தொடர்புகளும் வைத்ததில்லை.

நிலாவெளியில் வைத்து அண்மைக் காலத்தில் அவரை நான் சந்தித்ததுண்டா என்று விசாரணையின் போது கேட்டார்கள். தேர்தல் காலத்தில் திரு.சம்பந்தன், தங்கத்துரை சகிதம் பிரசாரத்துக்காக நிலாவெளி போனதன்றி பின்னர் போகவேயில்லை என்று தெரிவித்தேன்." இவ்வாறு ஈழத்துநாதன் கூறியிருக்கிறார்.

# காரைதீவு சுற்றிவளைப்பு

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு தமிழ்கிராமம் கடந்த 14.08.97 வியாழனன்று சுற்றிவளைக்கப்பட்டு எட்டுமணித்தியால தேடுதல் நடத்தப்பட்டது. சுமார் 8 வருடங்களுக்குப் பிறகு நடந்த முதல் சுற்றிவளைப்பு இது.

பிடிபட்டவர்களை கண்ணகி ஆலய முன்றலில் வைத்து விசாரித்து விடுவித்தனர் எஸ்.ரி.எஃப். படையினர். மூன்று வெளியூர் வாசிகள் மாத்திரம் தடுத்து வைக்கப்பட்டனர். புலிகள் நடமாடுவதாக படையினருக்கு தகவல் கிடைத்ததாம். அதுதான் இந்த 'ரவுண்ட் அப்.'

# முஸ்லிம் ஆசிரியர் பற்றாக்குறை
## கல்விக்கு ஏற்படும் பாதகம்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் 700 முஸ்லிம் ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவுகிறது. இதன்காரணமாக முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நிலை பாழ்பட்டுப்போகும் அளவுக்கு இருப்பதால் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்வது பற்றி மத்திய மாகாண சுகாதார, மகளிர் விவகார முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு அமைச்சர் ஜனாப் எம்.எச்.எ.ஹலீம் வலியுறுத்தியுள்ளார்.

கட்டுகஸ்தோட்டை ஸாஹிரா பாடசாலையை கண்டியில் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையாக அமைப்பது தொடர்பான மாநாட்டில் அமைச்சர் ஹலீம் மேற்கண்ட அச்சத்தையும் எழுப்பினார்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இயங்கும் 105 முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்வி வெகுவாகப்பாதிக்கப்பட்டிருப்பதை அமைச்சரே மிகவும் வேதனையுடன் அங்கு பிரஸ்தாபித்தார். ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், இது தொடர்பாக மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இருப்பது சரியல்ல எனவும் கூறினார்.

# திருமலைத் தாக்குதல்

திருமலையில் ரோந்துப் படையணி மீதான தாக்குதலில் தமது தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

09.08.97 அன்று திருமலை மாவட்டத்தில் உள்ள தாவிபை ஆற்றில் இருந்து குச்சவெளி நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ ரோந்து அணிமீதே புலிகள் தாக்குதல் நடத்தினர்.

காலை 8.55க்கு நடைபெற்ற இத்தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு தொடர்பு சாதனம், ஏ.கே.எல்.எம்.ஜி உட்பட சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

# சீரற்ற மின்சார சேவை

(காரைதீவு நிருபர்)

கடந்த ஒருவாரகாலமாக கல்முனை, காரைதீவு பகுதிகளில் மின்சார விநியோகம் சீரற்றிருப்பதாக பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

நேரகாலமற்று மின்சாரம் நிறுத்தப்படுவதால் தொழில் ஸ்தாபனங்களும், அச்சகங்களும், பொதுமக்களும் பலத்த அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

பெரும்பாலும், இரவு வேளைகளில் திடீரென மின்சாரம் கூடி குறைவதனால் பாவனையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

# வாகனம் வழங்க நடவடிக்கை

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண ஆயுள்வேதப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முதன்முறையாக வாகனமொன்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் கோரிக்கையையடுத்து மு.சந்திரகுமார் பா.உ. வின் நடவடிக்கைக்கிணங்க வடக்கு-கிழக்கு ஆளுநர் வாகனமொன்றை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலரைக் கேட்டுள்ளார்.

போதிய இட வசதியும் வாகன வசதியும் இல்லாமல் இயங்கிவரும் ஒரே மாகாண தலைமைத் திணைக்களம் ஆயுள்வேதப் பணிப்பாளர் அலுவலகமே என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதார அமைச்சின் வாகனங்களை இரவலாகப் பயன்படுத்தி வரும் இத்திணைக்களத்தின் பணிகள் வாகனம் கிடைக்காத நேரங்களில் தடைபட்டு நிற்பது சாதாரண நிகழ்வாகிவிட்டது.

வாகன வழங்கலைத் துரிதப்படுத்தும்படி மு. சந்திரகுமார் பா.உ.வும் பிரதம செயலருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

# "உடப்பூர் வரலாறும் மரபுகளும்"
## நூல் வெளியீடு

உடப்பூர் ஸ்ரீ பார்த்தசாரதி சமேத திரௌபதாதேவி ஆலய வருடாந்த மகோற்சவம், ஆகஸ்ட் 3ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் 20ம் திகதி தீமிதிப்புடன் நிறைவடைந்ததை முன்னிட்டு "உடப்பு வரலாறும் மரபுகளும்" என்ற தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

உடப்பூர் பூர்வீக வரலாறு, கலை, கலாசாரம், பாரம்பரியம், ஆலய, கல்விக்கூட வரலாறு போன்ற ஆவணக் குறிப்புக்களை கொண்ட இந்நூல் உடப்பூரை அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் ஏற்ற வகையில் பல ஆய்வாளர்களினாலும், எழுத்தாளர்களினாலும் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

-க.பொ.


'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்

INTERNATIONAL INDIAN CLINIC DIVINE MEDICAL SERVICES

APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

கர்ம-காலவலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கொழும்பில் ஆகஸ்ட் 19 முதல் 31 வரை

Dr. P. Arumugam, Ahamed Tourist inn, Bang Building No:10, Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.
கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

ஓட்டமாவடி செப்டம்பர் 6, 7 ம் தினங்களில்

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.

கல்முனையில் செப்டம்பர் 13,14,15,16, தினங்களில்

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் Dr. P. Arumugam No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218



சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை




ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411



சகலவிதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு



SAI SANGEETHA
L. G. 123, Peoples Park,
Colombo 11. Tel : 445102



தொழில் வாய்ப்புக்கள் நிறைந்த கம்ப்யூட்டர் பயிற்சி நெறி



தேசிய (NCCA, NIBM) சர்வதேச (ACS, IDPM) கம்பியூட்டர் பயிற்சி நெறிகளுக்கு இது ஓர் முன்பள்ளியாகும்.
மொழி மூலம் : தமிழ், ஆங்கிலம்.

Certificate In Computer Studies
காலம் : 3 மாதம் கட்டணம் : 1950.00
விண்ணப்ப முடிவு திகதி : 15-09-1997.

Certificate In Typesetting
காலம் : 3 மாதம் கட்டணம் : 4000.00

Internet & E-Mail Training Course
காலம் : 1 மாதம் கட்டணம் : 950.00

எமது ஏனைய சேவைகள் :-
- தவணைக் கட்டண வசதிகள் உள்ளன.
- கம்பியூட்டர் விற்பனை, பராமறித்தல், பழுது பார்த்தல்.

தரமான சேவை தயவான கட்டணம்

MICS 36, Second Cross Street, Puttalam.
☎ 032 - 65370. E-Mail : Infak@slt.lk




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# 'ஜயசிக்குறுய்'யும் – ஜெயசூரியாவும்

**"களநிலவர ஸ்கோரை நம்பாத மக்கள். கிரிக்கெட் கள ஸ்கோரை நம்புகிறார்கள்."**



நாரதர்

'ஜயசிக்குறுய்' படைகள் தொடர்ந்தும் முன்னேற முடியாத நிலையிலேயே உள்ளன. செவ்வாய் கிரகத்திற்கு சென்ற விண்கலத்தைப் பற்றி சொல்வதுபோல, 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தொடர்பாக தினம் ஒரு செய்தி சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வன்னியில் பௌத்த சின்னங்களை கண்டுபிடித்துவிட்டதாக கடந்தவாரம் அரச பிரசார சாதனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சிங்கள மக்களுக்கு இச் செய்தி மகிழ்வூட்டும் என்று நம்புகிறார்கள் போல் தோன்றுகிறது.

**'ஜயசிக்குறுய்' நடவடிக்கை தொடர்பாக கவலைப்படுவதைவிட, ஜெயசூரியா அவுட்டாகிவிடக்கூடாதே என்பதுதான் தென்னிலங்கை மக்களின் பெரிய கவலையாகிவிட்டது.**

**'ஜயசிக்குறுய்' சொல்லும் ஸ்கோர்கள் பற்றி நம்பிக்கையிழந்த மக்கள், ஜெயசூரியாவின் ஸ்கோர் என்னவென்று அறிவதில்தான் ஆர்வம் காட்டுகிறார்கள்.**

'ரிவிரெச' மூலம் யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றியபோது அவர்கள்தான் ஹீரோக்களாகக் கருதப்பட்டனர். சந்திர மண்டலத்தில் முதன் முதலாக காலடி வைத்த நீல் ஆம்ஸ்ரோங்குக்கு கிடைத்த மரியாதை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால்வைத்த படையினருக்கும் கிடைத்தது.

'ரிவிரெச'வில் பெற்ற 'இமேஜை' ஜயசிக்குறுய் நடவடிக்கையில் படையினர் கணிசமானளவு இழந்துள்ளனர். 'ரிவி ரெச' நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்த போது நாட்டு மக்கள் அனைவரது கவனத்தையும் 'ரிவிரெச' நோக்கித் திருப்பியது அரசு.

அமைச்சர்களது பேச்சுக்களில் பெருமிதம் நிரம்பிவழிந்தது. களியாட்டங்களை நிறுத்திவிடவேண்டும். நாட்டை யுத்தத்தில் வெற்றிபெறும் மனநிலையில் வைத்திருக்க வேண்டும் என்றுகூட ஒரு முக்கிய அமைச்சர் பாராளுமன்றத்திலேயே உரையாற்றியிருந்தார்.

அள்ள அள்ளக் குறையாத பிரசார கற்பகதருவாக 'ரிவிரெச' அப்போது இருந்தது. களியாட்டங்களில் கவனம் சென்றால் தமது போர்முனை வெற்றிகள் மக்களின் கவனத்தில் படாமல் போய் விடுமோ என்று அரச தரப்பு கவலைப்பட வேண்டியிருந்தது.

**ஆனால் இப்போது போர்முனை நிலவரம் திருப்திகரமாக இல்லை. அதனால் போர்முனையில் தமக்கான சாதக நிலைவரும்வரை மக்களின் கவனத்தை திருப்பிவைத்திருக்கும் வேறு காட்சிகளை அரசு நம்பியிருக்கிறது.**

அந்தவகையில் ஜெயசூரியாவுக்கும், சுசந்திகாவுக்கும் அரசு நன்றி சொல்லியாக வேண்டும். கிரிக்கெட் அணியின் தொடர் வெற்றிகளுக்கு தாமே காரணம் என்று பொதுஜன முன்னணியினர் பேசிவருவது சிரிப்பூட்டக் கூடியதுதான். ஆனால் இதனையும் சொல்லவில்லையென்றால் பிரமாதமாக சொல்லிக்கொள்ள வேறென்ன சாதனை இருக்கிறது.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையைப் பொறுத்தவரை முன்வைத்த காலை பின் வைத்தால் கௌரவக் குறைச்சல் என்ற நிலைதான் அரச தரப்புக்கும், படைத் தரப்புக்கும் ஏற்பட்டுள்ளது.

'ஜயசிக்குறுய்' தொடர்கிறது. நிலைகளைப் பலப்படுத்துகிறார்கள். என்று சொல்வதைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது.

சொல்லிச் சொல்லியும் வாய் புளித்து விட்டதால் பௌத்த சின்னங்களின் கண்டுபிடிப்புப் பற்றி இனிக்க இனிக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

**வவுனிக் குளத்தில் கிறிஸ்தவ தேவாலயம் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இந்துக் கோவில் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறது.**

**வவுனிக்குள் தேவாலயத்திலும், வன்னியில் புதுவிளாங்குளம் சிவன் கோவிலிலும் அகதிகள் புகலிடம் பெற்றிருந்தனர்.**

**அவற்றின்மீது நடைபெற்ற தாக்குதலில் அகதிகள் பலியாகி இருக்கின்றனர். தேவாலயத்தில் பலியான ஒன்பது பேரில் மூவரின் சடலங்கள் சிதறிப் போய் கிடந்தன.**

இச்செய்திகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல அமைந்திருக்க, அரச பிரசார சாதனங்களோ வன்னியில் சிதைந்து கிடந்த பௌத்த சின்னங்களை கண்டெடுத்த செய்தியை பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

தென்னிலங்கையில் 'ஜயசிக்குறுய்' படைகளை ஹீரோக்களாக காட்டும் அவசரத்தில், தமிழ் மக்களிடம் படைகளுக்கு வில்லத்தனமான தோற்றப்பாடு ஏற்படுவது பற்றி அரச தரப்பு கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

தீர்வு முயற்சிகளும், போர் முனைப்புகளும் சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் வகையில்தான் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை தொடர்பான சித்தரிப்புக்களும் அவ்வாறே அமைகின்றன.

சப்புமல்புர பெயர்ப் பலகையும், பௌத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய ஆரவாரமான பிரசாரங்களும் எதிரியால் கைப்பற்றப்பட்ட பௌத்த பூமியை படையினர் விடுவித்து சிங்கள மக்களின் கௌரவத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளாக கருதப்படச் செய்கின்றன.

ஆனால் தமிழ்க் கட்சிகள் நடைபெறும் யுத்தம் அரசுக்கும் புலிகளுக்குமிடையேயான பலப்பரீட்சை மட்டுமே என்று சொல்லிக் கொண்டிருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் சுய கௌரவம் சேதமாகிக் கொண்டிருப்பது பற்றியோ, படையினர் போர் முனைகளில் வெற்றி பெறும் சந்தர்ப்பங்களில் அவை பற்றிய சித்தரிப்புக்கள் இன்னொரு தேசத்தை வெற்றிகொள்ளும் மிதப்போடு அமைவதைப் பற்றியோ தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டத் தயங்குகின்றன.

தேவாலயங்கள் மீதான தாக்குதல்களையோ, கிராமங்களைச் சுற்றிவளைத்து நடத்தப்படும் துப்பாக்கிப் பிரயோகங்களையோ படையினருக்கும், புலிகளுக்கும் இடையிலான பலப்பரீட்சை என்று எப்படி சொல்ல முடியும்?

சமீபத்தில் திருமலையில் திருக்கடலூர் என்ற கிராமத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளனர். ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

கொல்லப்பட்டவர் ஒரு புலிதான் என்று சாதிக்க படைத்தரப்பு முயன்றிருக்கிறது. பின்னர் பொதுமக்கள் துணிச்சலாக கிளர்ந்தெழுந்த காரணத்தால் பலியானவர்களுக்கு புலி முத்திரை குத்த முடியாமல் போய் இருக்கிறது.

பலியானவர் புலிதான் என்று ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போட்டுவிட்டு உடலைக் கொண்டு செல்லுமாறு கூறினார்களாம். முடியாது என்று மறுத்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டம் செய்த மக்களை மிரட்டுவது போல படையினர் வானை நோக்கி சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். மக்கள் அசையவில்லை. மக்களை நோக்கி சுடுவதுபோல துப்பாக்கியை நீட்டினார்கள். மக்களோ சிறிதும் அஞ்சாமல் துப்பாக்கியை நீட்டிய படையினரை நோக்கித் திட்டியிருக்கிறார்கள்.

**திருக்கடலூர் மக்கள் காட்டிய நியாயமான துணிச்சல் பயனளித்திருக்கிறது. அரசியல்வாதிகளிடம் முறையிட்டால் அதனை அவர்கள் அரசியலுக்காக ஒரு அறிக்கைவிட பயன்படுத்துவதுதான் பலனாக கிடைக்கும். மக்களே துணிச்சலாக வீதியில் இறங்குவதுதான் நியாயம் பெற்றுக் கொடுக்கும்.**

வன்னி இராணுவ நடவடிக்கை தரைப் பாதை திறப்புக்கு என்றே அரசால் கூறப் பட்டுவருகிறது.

புலிகளின் வன்னித் தளத்தை முற்றுகையிடுவது, தரைப்பாதை திறப்பது என்னும் இரண்டு நோக்கங்கள் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு காரணம் என்பது தெரிந்தது தான்.

ஆனால், தரைப்பாதை திறப்பு என்பது பொதுமக்களுக்கான போக்குவரத்துக்கு என்பதுதான் உறுத்தலான காரணமாகும்.

யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்தில் உண்மையாகவே அக்கறை காட்டப்படுமானால், யாழ் செல்ல திருமலையில் கப்பலுக்காக காத்து நிற்கும் பயணிகள் விடயத்தில் இத்தனை அலட்சியம் ஏன்?

புலிகள் கப்பல்களை தாக்குவதால் கப்பல் போக்குவரத்து தாமதப்படுகிறது என்று அரசாங்கம் காரணம் கூறக்கூடாது. ஏனெனில் யாழ் குடாநாட்டை கைப்பற்றி நேரடியாக நிர்வாகம் நடத்த முடியும் என்ற நம்பிக்கையில்தான் 'ரிவிரெச' நடத்தப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களை அங்கு அழைத்ததுடன், தற்போது வன்னியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களையும் யாழ் குடாநாட்டுக்கு தருவிப்பதில் அரசு முனைப்புக் காட்டுகிறது.

யாழ் குடாநாட்டுக்கு மக்களை அழைக்கும் அரசுக்கு, அங்குள்ள மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்த்துவைக்கும் பொறுப்பும் இருக்கிறது. புலிகள் தடுக்கிறார்கள் என்பது சரியான காரணமாகாது. ஏனெனில் புலிகளின் விருப்பத்துடன் யாழ் குடாநாட்டில் படைகள் நிலை கொண்டிருக்கவில்லை.

புலிகள் கப்பல்களை தாக்கிய பின்னரும் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணிகளுடன் கப்பல் சென்றிருக்கிறது.

ஆனால் திருமலையில் காத்துநிற்கும் யாழ்மக்களை கொண்டுசெல்ல மட்டும் கப்பல் பயணத்துக்கு தடையாக பல காரணங்கள் கூறப்படுகின்றன.

**புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களை யாழ் குடாநாட்டுக்கு அழைத்துச் செல்வதில் காட்டப்படும் தீவிரம், அரச கட்டுப்பாட்டில் உள்ள திருமலையில் காத்துக்கிடக்கும் யாழ் மக்களை அழைத்துச் செல்வதில் காட்டப்படவில்லை.**

புலிகளிடம் இருந்து மக்களை தனிமைப் படுத்தல் என்பதில்தான் அரசு அக்கறை காட்டுகிறது. போக்குவரத்தை சீர்ப்படுத்தல் என்பதைவிட போருக்கான உபாயங்களை வகுத்தல் என்பதில் போக்குவரத்தும் உட்பட்டுள்ளது.

வன்னியில் உள்ள யாழ் குடாநாட்டு மக்களை அழைத்துச் செல்லல் என்பது போரில் புலிகளை வெல்லும் உபாயங்களில் ஒன்றாகவே மாறியிருக்கிறது.

வன்னிக்கு உணவு அனுப்புவதைவிட மன்னாருக்கு கப்பலை அனுப்பி அங்குள்ள மக்களை அழைத்துச் செல்வதே பிரதான நோக்கமாக மாறியுள்ளது.

இவ்வாறான நிலையில்தான் கப்பல் போக்குவரத்தை புலிகள் தாக்கினார்கள். கப்பல் தாக்குதலுக்கு புலிகள், வேறு என்ன காரணம் கூறினாலும், உண்மையான காரணம் தம்மை தனிமைப்படுத்தலுக்கு எதிரான பதிலடி நோக்கம்தான்.

**பொதுமக்களின் போக்குவரத்துக்களுக்கு புலிகள் இடையூறு செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தும் அதே சமயம், போர் உபாயங்களில் ஒன்றாக உணவுப்பொருட்களும், நிவாரணங்களும் அரசால் பயன்படுத்தப் படுவதையும் கண்டித்தேயாகவேண்டும்.**

வடக்கு-கிழக்கில் அரசால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நகர்வும் படையினரின் விருப்பு வெறுப்புக்கள், போர்முனை வியூகங்கள் என்பவற்றுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கு-கிழக்கை இராணுவ ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாக கருதியே போக்குவரத்து முதல் பொருட்களின் விநியோகம் வரை படையினரின் நலன் சார்ந்ததாக திட்டமிடப்படுகின்றன.

யாழ்குடாநாட்டில் சிவில் அதிகாரிகளைக் கூட இராணுவ அதிகாரிகள் அழைத்து மாநாடுகள் நடத்துகின்றனர். அங்குள்ள பத்திரிகை வெளியிடும் செய்திகளும் படையினரால் மறைமுகமான தணிக்கைக்கு உட்பட்டதாகவே உள்ளன.

புலிகளிடம் இருந்து ஜனநாயகத்தை மீட்கப்போவதாக கூறிய தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி ஒட்டவும் படையினரின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது.

கறுப்பு ஜூலைக்கு சுவரொட்டி ஒட்டுவதற்கு ஈ.பி.டி.பி.க்கு அனுமதி மறுக்கப் பட்டது. யாழ் குடாநாட்டு மக்களை தமது நிலைகொள்ளல், கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்கு ஏற்ற மனநிலையில் வைத்திருக்கவே படைத்தரப்பினர் விரும்புகின்றனர்.

யாழ் குடாநாட்டில் புலிகளை வெற்றி கொண்டமை, கைப்பற்றிய பிரதேசங்களை பாதுகாத்தல் என்பவற்றுக்கும் மேலாக, யாழ் குடாநாட்டு மக்களின் மனோநிலையையும் தணிவான பணிவான நிலையில் வைத்திருக்கும் கடமையையும் படையினர் கச்சிதமாகச் செய்து வருகின்றனர்.

யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் அங்குள்ள மக்களை அரசியல் ரீதியாக வென்றெடுக்க அரசு ஆர்வம் காட்டியிருக்குமானால் அதனை யாரும் குறை சொல்லி இருக்க மாட்டார்கள்.

ஆனால் யாழ் குடாநாட்டு மக்களை அரசியல் ரீதியில் மிகப் பலவீனமான கருத்துக்களை உடையவர்களாக மாற்றுவதற்கும், விரக்தியான மனப்போக்கில் தமக்கு கிடைப்பதையெல்லாம் ஏதோ கிடைத்தவரை இலாபம் என்று ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக வைத்திருக்கவும் தோதான நடைமுறைகளை படையினரின் ஆளுகை மூலம் உருவாக்கவுமே அரசு முனைகிறது.

இந்த வரையறைக்கு பாதகம் வராமல் அங்கு தமிழ்க் கட்சிகள் இயங்க முடியுமே தவிர, முரண்பட்டால் மூட்டை முடிச்சுக்களுடன் கிளம்ப வேண்டியதுதான்.

யாழ் குடாநாட்டில் ஜனநாயகம் இருக்கிறது. என்று காட்டுவதற்கு தமிழ்க்கட்சிகள் அங்கு இருப்பது ஒருவகையில் அரசுக்கு சாதகம் தான். அதேசமயம் அக்கட்சிகளுக்கு எந்தளவுக்கு ஜனநாயகம் கொடுக்கலாம் என்ற அளவுகோல் படையினரிடம்தான் இருக்கிறது.

**யாழ் குடாநாட்டில் கைதாகியோரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறோம். விடுவித்துள்ளோம் என்று தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாண பத்திரிகையில் செய்தி கொடுத்தன.**

செய்திகளைப் பார்த்ததும் படைத்தரப்பினருக்கு எரிச்சலோ எரிச்சல். பதில் அறிக்கை விட்டார்கள். தமிழ்க்கட்சிகள் கூறுவதால் நாம் யாரையும் விடுதலை செய்வதில்லை. ஏதோ தாம் கூறித்தான் நாம் விடுதலை செய்வதாக கூறிக்கொண்டிருக்கிறார்கள். அப்பாவிகள் என்று தெரிந்தால் நாமாகவே விடுதலை செய்கிறோமே தவிர, அவர்கள் சொல்வதால் அல்ல, என்று அறிக்கை வந்தது.

எங்கே தமிழ்க் கட்சிகளுக்கு நல்ல பெயர் வந்துவிடுமோ என்ற அங்கலாய்ப்புப் படைத்தரப்புக்கு இருக்கிறது. முன்னாளில் ஆயுதம் ஏந்திய இந்நாள் கட்சிகளை எந்நாளும் சந்தேகத்துடன்தான் நோக்குகிறது படைத் தரப்பு.

கள நிலவரங்களும், போர் சார்ந்த அரசியலும் தமிழ் மக்களை மேலும் அந்நியப் படுத்தி பிறிதோர் நாட்டு மக்களாக உணரச் செய்வதாகவே மாறிக் கொண்டிருக்கின்றன.

முன்றாண்டு காலத்தை பூர்த்தி செய்துள்ள பொதுஜன முன்னணி அரசுக்கு போர்தான் அரசியலாகவும், அரசியல்தான் போராகவும் இருக்கிறது.

அரசியலும், போரும் ஒன்றோடு ஒன்று கலந்துவிட்ட நிலை இது. அடுத்த தேர்தல் வரையாவது இந்த ஒன்று கலத்தலை பிரிக்க முடியாது.

ஆயுத விநியோகம், மற்றும் போரிடுவதற்கான வளங்கள் வசதிகள் என்பவற்றுக்காக படைத்தரப்பு அரசை சார்ந்து நிற்க, போரில் படைத்தரப்பு தேடித் தரும் வெற்றிகளை அரசியல் மூலதனமாக்க படைத் தரப்பை அரசு சார்ந்து நிற்கும்.

ஆனால் புலிகளின் தரப்பு அரசு முன்னர் கணிப்பிட்டதுபோல அல்லாமல், முக்கிய படை நகர்வையே எதிர்த்து நிற்பதால் குறுகிய காலத்திலான வெற்றி பற்றிய நம்பிக்கைகள் பொய்த்திருக்கின்றன.

ஆனாலும் அதனை ஒப்புக்கொள்ள அரசு தயாரில்லை. ஒப்புக்கொண்டால் அதன் தாக்கம் அரசியலில் எதிரொலிக்கும். எதிர்க்கட்சி கொக்கரிக்கும்.

அதனால்தான் பலத்த பின்னடைவுகளின் பின்னரும் 'ஜயசிக்குறுய்' படைகளை பெருமளவில் முடக்கிவைத்திருக்க வேண்டியுள்ளது.

கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் பகுதியில் மூன்றுமாதங்களாக இருபதினாயிரம் படைகளை முடக்கி வைத்திருப்பதால் ஏற்பட்டுள்ள இலாப நஷ்டங்களை கணக்கிட்டால், நஷ்டம் தான் அதிகம்.

இதற்கிடையே ஜயசிக்குறுய் படையினர் முல்லைத்தீவை கைப்பற்றி முகாம் அமைக்கக் கூடும் என்று சில ஊகங்கள் சொல்லப்படுகின்றன. இராணுவ நிலவரம், களநிலவரம் தெரியாத கற்பனை ஊகம்தான் அது.

புலியின் குகைக்குள் தலையைக் கொடுப்பதுபோல முல்லைத்தீவுக்குள் படைகளை புகுத்த படைத்தரப்பு நினைக்கப் போவதில்லை.

ஆனால் முல்லைத்தீவு புலிகளின் தளப் பகுதியின் இதயமாக இருப்பதால், அப் பகுதியில் உள்ள புலிகளை அச்சுறுத்துவதுபோன்ற நகர்வுகளை எட்டத்தில் இருந்து அடிக்கடி மேற்கொள்வர்.

'ஜயசிக்குறுய்' படையினரின் முதல் கட்டம் பூர்த்தியாக வேண்டுமானால் புளியங்குளம் நெடுங்கேணி இணைப்பு புளியங்குளம் நெடுங்கேணி சாலைவழியாக பூர்த்தி செய்யப்படவேண்டும்.

ஆனால் அதற்கே பலத்த சிரமப் பட்டுக் கொண்டிருக்கின்றனர் படையினர்.

புளியங்குளத்தை கைப்பற்றி புளியங்குளம் நெடுங்கேணியை இணைப்பது என்றால் மேலும் 20 கிலோமீட்டர் சாலையில் படைகள் நீண்டு நிலைகொண்டாக வேண்டும்.

அப்படி நிலைகொள்வதாய் இருந்தால் தற்போது வவுனியா- யாழ் சாலையில் உள்ள படைகளின் பெரும்பகுதியையும், நெடுங்கேணியில் உள்ள படையினரின் ஒரு பகுதியையும் அங்கு பயன் படுத்த வேண்டியிருக்கும்.

அவ்வாறு செய்தால் யாழ் வவுனியா சாலையில் படைபலம் பலவீனமாகும். நெடுங்கேணியின் பின்னரங்கமும் பலவீனமாகும்.

**வவுனியாவில் இருந்து புளியங்குளம் வரை உள்ள பகுதிகளுக்குள்ளோ, நெடுங்கேணி பின்னரங்கிலோ புலிகள் புகுந்து கொள்வார்கள். புளியங்குளம், நெடுங் கேணி இணைப்பு ஏற்பட்டால் முல்லைத் தீவுக்கும் திருமலைக்கும் இடையேயான தரைபாதை தடைப்படுமே தவிர, நிலை கொண்டுள்ள படையினரை தாக்கும் ஊடறுப்புக்கு புலிகளுக்கும் பல வழிகள் உள்ளன. அவை தடைப்படாது.**

இந்நிலையில் திரும்பி வருவதும் கௌரவக் குறைச்சல், துணிந்து முன்னேறுவதும் விவேகக் குறைச்சல் என்ற கட்டத்தில்தான் 'ஜயசிக்குறுய்' படையினர் நிலை கொண்டுள்ளனர்.

புலிகளை அவர்களின் தளத்தில் முடமாக்க சென்ற படையினர் இப்போது அசைவற்ற நிலையில் தாமே முடங்கி உள்ளனர்.

'ஜயசிக்குறுய்' படைகளின் இலக்கை எட்டுவதற்கான காலவரையறையை கூறுவதைக்கூட இப்போது கைவிட்டுள்ளனர். ஆனாலும் வன்னியில் பருவ மழைக்காலம் தொடங்க முன்னர் மற்றொரு முன்னேற்ற முயற்சியில் படையினர் இறங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ■

## அதிரடி அப்பாத்துரை



***பச்சைக் கட்சியினர்*** வித்தியாசமான பிறந்தநாள் கொண்டாடியிருக்கிறார்கள். பாணில் மெழுகு திரியெல்லாம் செருகி அமர்க்களம் பண்ணிவிட்டனர். என்னதான் சொன்னாலும் பச்சைக் கட்சி பதவியில் இருந்தாலும் பாண் விலை ஏறித்தானே இருக்கும். வான்வரை உயர்ந்து பற்றியெரியும் இனப்பிரச்சனை தீராதவரை எந்த விலைதான் உயராது? வரப்புயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும். போர் உயர பொருள் விலை உயரும். காட்சிமாறாதவரை கட்சிகள் தமக்குள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டிருந்து சனத்தின் முதுகில் சவாரிவிட வேண்டியதுதான்.

***திருவான மலை*** கூட்டான கட்சிப் பிரமுகர் நான் சொன்னது மாதிரியே விடுதலையாகிவிட்டார். தமது முக்கியஸ்தர் பிடிபட்டும் கூட கூட்டான கட்சி ஏன் கோபப்படவில்லை? கண்டன அறிக்கைகூட விடவில்லை? பிரச்சனையைப் பெரிதாக்கினால் மறுதரப்பும் கைதுக்கான விளக்கம் சொல்ல வேண்டியிருக்கும். விளக்கத்தில் வில்லங்கமான விவகாரங்கள் வந்தால் தங்கள்பாடு சங்கடமாகும் எண்டுதான் காதும் காதும் வைத்தமாதிரி மேலிடத்துடன் பேசி ஆளை வெளியே எடுத்துப்போட்டினம். அவர் என்னவென்றால் சும்மா கூப்பிட்டவை. நல்லா நடத்தினவை. ரெண்டு எழுத்து பிரமுகரை சந்தித்ததோ எண்டு கேட்டவை அவ்வளவுதான் எண்டு சொல்லுறார். நாதமானவர் குறிப்பிட்ட ரெண்டெழுத்து பிரமுகரின் உறவினர் என்பது முன்பே தெரிந்ததுதானே. அது ஏன் பாருங்கோ தங்கமானவரின் விடயத்தின் பின்னாதான் இவரைக்கூப்பிட்டு விசாரிக்கவேண்டி வந்தது? நல்லா விடுகிறார் கதை. ஷி.ஷி.ஷி.

***கூட்டான கட்சியின்*** சம்பந்தமானவர் சமீபத்தில் சுவிற்ஸர்லாந்துக்கு போயிருந்தாராம். அங்கு ரெண்டு எழுத்தாரை சந்திக்க ஆவலுற்றாராம். எல்லாம் வெற்றிட விவகாரமாகப் பேசத்தானாம். மறுதரப்பு சந்திப்பில் விருப்பம் கொள்ளவில்லையாம். உலகம் சுற்றி வந்து மாம்பழத்தை பெறும் நோக்கம் முருகனுக்கு வரலாம். முருகனின் தந்தையிடம் பால் குடித்த பெயருள்ள நாயனார் பெயருள்ளவருக்கு வரலாமோ?

***தினசரி மூன்று*** வேளையும் காலம் தவறாமல் போடப்படுகிறதாம். "என்ன மாத்திரையோ?" என்று கேட்கவேண்டாம். வவுனியாவில் இருந்து ஏவப்படும் பாணங்கள்தான் அவை. முந்தியெல்லாம் சேவல் கூவித்தான் நாம் எழுந்தோம். இப்போது 'ஷெல்' கூவி எழுகிறோம் என்கிறார்கள் நகர மற்றும் ஊர்வாசிகள். நேர அட்டவணையைப் பாருங்கோ. அதிகாலை 4.30 மணிமுதல் 5 மணிவரை கும் கும் கும். பின்னர் மதிய வேளையில் நாலு ஐந்து கும் கும் கும். பின்னர் இரவு 8 முதல் 9 வரை நான்கைந்து ஏவல். இப்படியே ஏவினால் பாண்விலை உயராமல் என்ன செய்யும்? ஒரு விலை மட்டும் மலியும். அது, மனித உயிர்.

***தொலைக்காட்சியில்*** நேரடிப் பேட்டிகளுக்கு கேள்வி கேட்க ஆட்கள் தெரிவு செய்யப்படுகிறார்களாம். இசகு பிசகான கேள்விகள் கேட்காதவர்களாக இருந்தால் முன்னுரிமை. சமீபத்திய பேட்டி ஒன்றில் ஒரு பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கு வெட்டு விழுந்துவிட்டதாம். கேள்விகள் கொஞ்சம் காரம். பதில்கள் தோதாக இல்லாமல் சமாளிப்பாக இருக்கிறது என்று நினைத்து நிறுவனத்தாரே வெட்டிப் போட்டுவிட்டனராம். சுதந்திர ஊடகம் என்றால் உப்பிடித்தான். சுதந்திரமாக வெட்டிப்போட்டினம் பார்த்தியளோ!

***தலைநகரில் பக்தர்களிடம்*** பிரபலமானது மயூராபதி அம்மன் கோவில். கடந்தவாரம் அங்கு கண்ட காட்சியால் பக்தர் ஒருத்தர் நம் காதுபட முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அவர் வாயைக் கிளறியதில் கிடைத்த சங்கதி இதுதான்: அம்மனுக்கு பின்புறம் காட்டுவதே கூடாது. அப்படியிருந்தும் கடந்தவாரம் திரளான கூட்டம் கூடிநின்று அம்மனுக்கு எதிர்ப்புறமாக உள்ள மண்டபம் நோக்கி துள்ளித் துள்ளிப் பார்த்துக் கொண்டிருந்ததாம். ஒருவேளை அம்மனைத்தான் திசை மாற்றிவிட்டினமோ எண்டு நம்மாளுக்கு சந்தேகம். இவரும் துள்ளிப் பார்த்திருக்கிறார். எதிர்ப்புற மண்டபத்தில் இருந்து இறங்கி வந்துகொண்டிருந்தது நடிகை ரேவதி! அவர் காரில் சென்று ஏறும்வரை ஒரே இடிபாடுதானாம். நம்மாள் ஓடிப்போய் கோயிலுக்குள் எட்டிப்பார்த்தாராம். விரல்விட்டு எண்ணக் கூடிய ஆண், பெண் பக்தர்கள்தான் அம்மனை கைவிட்டுப்போகாமல் நிண்டவையாம். இடிபட்ட ஒருவரை நம்மாள் துருவினாராம். "அம்மனை விட்டுப் போட்டு போகலாமோ?" அதற்கு அவர் சொன்னாராம்: "சும்மா போம்காணும், அம்மனை எப்பவும் தரிசிக்கலாம், ரேவதியை இப்ப விட்டால் பிறகெப்ப பார்க்கிறது?"

***யாழ் குடாநாட்டுன்*** வான் பறப்பு இல்லையெனில் பயணிகளைவிட படு சோகம் முகவர்களுக்குத்தான். கட்டணத்தைவிட பல மடங்கு பெற்று முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்படுகிறதாம். பத்து, பதினைந்து ஆயிரம்வரை கொடுத்து வசதியான பயணிகள் உடனடியாகச் செல்வதாகத் தகவல். நிர்வாகம் கவனிக்குமா?

இந்தவாரம் ஒரு பொன்மொழி மொர்சன் சொன்னது.

"புகழ்ச்சியைவிட
கண்டனம்
ஆபத்து
இல்லாதது!" ■



படிப்பகம்

www.padippakam.com





# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கலைஞர் கருணாநிதிக்கு பிரபா கடிதம்

## திருமலையில் காணாமல்போன டாக்டர் ஞானசேகரன்

### பன்குளம் தாக்குதல்

திருமலை பிரஜைகள் குழுத் தலைவராக இருந்தவர் பா.விஜயநாதன். திருமலையில் கூட்டணி எம்.பி.யாக இருந்த அமரர் நேமிநாதனின் சகோதரர்தான் விஜயநாதன்.

ஆரம்பத்தில் கூட்டணிக்கு ஆதரவாளராக இருந்தார். பின்னர் கூட்டணியினரின் போக்கு விஜயநாதனுக்கு பிடிக்கவில்லை.

தனியாளாகவே சமூக சேவைகளில் ஈடுபடத் தொடங்கினார்.

திருமலையில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை விடுவிக்க அரும்பாடுபட்டார். பிரமச்சாரியான விஜயநாதனுக்கு மக்களிடம் நல்ல பெயர்.

விஜயநாதனிடம் ஒரு குணம் இருந்தது. தனக்கு எது சரியென்றுபடுகிறதோ அதனை மறைக்காமல் கூறிவிடுவார். அந்தக் குணம்தான் பாதகமாக முடிந்தது.

இந்தியப் படையினர் பன்குளத்துக்கு சென்று விறகு வெட்டி வருவது வழக்கம். மக்களுக்கும் விறகு வெட்டிக் கொடுப்பார்கள்.

இந்தியப் படை அடிக்கடி சென்று வருவதை புலிகள் அவதானித்தனர். இந்தியப் படையினர் ஆயுதங்களையும் பெருமளவு கொண்டு செல்வதில்லை.

சரியான தருணம் பார்த்திருந்த புலிகள் பன்குளம் சென்றுகொண்டிருந்த இந்தியப் படை அணியை வழிமறித்தனர். இந்தியப் படையினர் சென்ற வாகனத்தில் பொதுமக்களும் இருந்தனர். அவர்களை தனியாக இறக்கிவிட்டு, இந்தியப் படையினரை சுட்டுத்தள்ளினார்கள்.

இச் சம்பவத்தின் பின்னர் அங்கு சென்ற இந்தியப் படையினர் கொல்லப்பட்ட தமது சகாக்களுக்காக பழிவாங்கும் வெறியோடு கண்ணில் பட்டவர்களையெல்லாம் தாக்கத் தொடங்கினார்கள்.

பரல்களில் தண்ணீரை நிரப்பிவைத்து அதற்குள் தலைகள் அமிழும்படியாக தலைகீழாகக்கட்டி தொங்கவிட்டு அடித்தார்கள்.

இச் சம்பவங்களை அறிந்த விஜயநாதன் உடனடியாக இந்தியப் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விஜயநாதனையும் ஹெலிகொப்டரில் அழைத்துச் சென்றார்கள்.

நடந்த சம்பவங்கள் அனைத்தையும் விலாவாரியாக் கேட்டறிந்த விஜயநாதனுக்கு புலிகள் செய்ததும் பிழை என்று மனதில் பட்டது.

"விறகு வெட்டுவதற்கு சென்ற படையினரை அவர்கள் தாக்கியிருக்கக்கூடாது. ஆயுதங்களைக்கூட படையினர் கொண்டு செல்லாதபோது தாக்கியது நியாயமல்ல. அதேநேரம் இந்தியப் படையினர் மக்களைத் தாக்கியதையும் நான் சரியென்று சொல்லமாட்டேன். இருபக்கமும் பிழை இருக்கிறது" என்று தன்னைச் சந்தித்த மக்களிடம் கூறினார் விஜயநாதன்.

விஜயநாதன் இப்படிக் கதைப்பதைப் பார்த்த அவரது நண்பர் ஒருவர் குறுக்கிட்டு: "இப்படி பகிரங்கமாக பேசாதீர்கள். அவர்கள் காதில் விழுந்தால் வீண் பிரச்சனைதானே?" என்றாராம்.

அவர் சொன்னதும் விஜயநாதனுக்கு கோபம் வந்துவிட்டது. "உமக்கு பயம் என்றால் ஒருபக்கத்தில் போய் இரும். சொல்ல வேண்டியதைச் சொல்லத்தானே வேண்டும்" என்றார் விஜயநாதன்.

இதன் பின்னர் இரண்டு நாட்கள் சென்றபின்னர் ஒருநாள் இரவு விஜயநாதன் வீட்டுக்கு சில இளைஞர்கள் வந்தார்கள்.

"உங்களை விசாரிக்க வேண்டும். முகாமுக்கு வாருங்கள். மோட்டார் சைக்கிளில் அழைத்துப் போய்விட்டு விடிவதற்குள் கொண்டுவந்து விடுவோம்" என்றார்கள்.

அவர்களுடன் சென்றார் விஜயநாதன். அதன்பின்னர் எத்தனையோ பொழுதுகள் விடிந்துவிட்டன. விஜயநாதன் வீடு திரும்பவில்லை.

அவர் கொல்லப்பட்டுவிட்டார்.

ஈரோஸ் இயக்கத்தினர்தான் விஜயநாதனை சுட்டுக்கொன்றனர்.

### பல் வைத்தியர்

திருமலை இழந்த மற்றொரு உன்னத மனிதன் டாக்டர் ஞானசேகரன். நண்பர்களால் 'ஞானி' என்று சுருக்கமாக அழைக்கப்பட்டார். இவர் கல்வி கற்றது திருமலை இந்துக் கல்லூரியில்.

ஞானசேகரன் ஒரு பல் வைத்தியர். இந்து இளைஞர் மன்றத்திலும் ஒரு முக்கிய உறுப்பினர்.

மாக்சிய கொள்கைகளில் ஈடுபாடு இருந்தமையால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் ஆதரவாளராக செயற்படத் தொடங்கினார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களில் ஒருவரான டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் இருந்தபோது டாக்டர் ஞானசேகரன் தன்னால் முடிந்த உதவிகளை இரகசியமாகச் செய்துவந்தார்.

பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உளவுப்பிரிவின் நடவடிக்கைகளுக்கு டாக்டர் ஞானசேகரன் பெரிதும் உதவினார். சில ஆயுதங்களையும் டாக்டர் ஞானசேகரன் மறைத்து வைத்திருந்து உதவினார்.

கொழும்பில் நடைபெற்ற ஒரு கொள்ளை நடவடிக்கையின்போது டாக்டர் ஞானசேகரனின் உதவி காரணமாகவே ஈ.பி.ஆர்.எல்.எஃப். முக்கிய பிரமுகர்கள் சிலர் தப்பக்கூடியதாக இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தைச் சேர்ந்த ரமேஷ், இப்ராகீம் எனப்படும் சிவகாந்தன் ஆகியோர் டாக்டர் ஞானசேகரனின் அறையில்தான் கொழும்பில் பாதுகாப்பாக தங்கியுமிருந்தனர்.

அந்தளவுக்கு தனக்கு வரக்கூடிய பாதிப்புக்களை பற்றி அச்சம் கொள்ளாது இயக்க நடவடிக்கைகளுக்கு உதவும் ஒருவராக ஞானசேகரன் இருந்திருக்கிறார்.

கொழும்பில் பல் வைத்தியராக கடமையாற்றிய போதும் தொழிற்சங்க ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். சிங்கள, தமிழ் பேதமில்லாமல் தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு கைகொடுத்து உதவியதால் ஞானசேகரனுக்கு நல்ல மரியாதை இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் ஏற்பட்ட உட்பிரச்சனைகளும், பிளவுகளும் ஞானசேகரனுக்கு அந்த இயக்கத்தின்மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியது.

படிப்படியாக விடுதலைப் புலிகளுக்கு சார்பாளராக மாறினார் டாக்டர் ஞானசேகரன்.

இந்தியப் படை காலத்தில் தனது சொந்தப் பகுதியான திருமலையில் பணியாற்றியதோடு மக்களுக்கும் உதவிகளைச் செய்துகொண்டிருந்தார்.

திருமலையில் இருந்து உருவாகிவரும் இளம் தலைவர் என்று மக்கள் கருதும் அளவுக்கு ஞானசேகரனின் பணிகள் மக்களை ஈர்த்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். திருமலை மாவட்ட பொறுப்பாளராக இருந்தவர் ஜோர்ச். இந்தியப் படையினர்கூட அதிர்ச்சியடையும் அளவுக்கு அடாவடித்தனங்களில் கொடிகட்டிப் பறந்தவர்.

திருமலை மக்களிடம் ஜோர்ச்சுக்கு நல்ல பெயர் இருக்கவில்லை. ஆனால் திருமலை மக்களின் தலைவர் தானேதான் என்பது ஜோர்ச்சின் எண்ணம்.

டாக்டர் ஞானசேகரனுக்கு மக்களிடம் செல்வாக்கு ஏற்பட்டு வருவதைக் கண்டு ஜோர்ச்சால் பொறுக்க முடியவில்லை.

புலிகளுக்கு டாக்டர் ஞானசேகரன் ஆதரவாக இருப்பதை சாட்டாக வைத்து அவரை ஒருநாள் கடத்திப்போனார்கள். ஜோர்ச் தலைமையில் வந்த ஒரு குழுவே டாக்டர் ஞானசேகரனை கடத்திக்கொண்டு சென்றது.

### கடத்தலும் கண்டனமும்

ஞானசேகரன் கடத்தப்பட்ட செய்தி திருமலை மக்களிடம் தீயாகப் பரவியது. எங்கும் கடும் கண்டனங்கள் கிளம்பின. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு திருமலையில் திரண்ட மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

திருமலை நெல்சன் தியேட்டர் முன்பாக ஊர்வலத்தினரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக சந்தித்தவர் ராம் ராஜகாரியர். அவர்தான் கடந்த வாரம் நாம் விபரித்த வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சபாநாயகர்.

ராஜகாரியருக்கும் கொழும்பில் பல உதவிகள் செய்தவர் டாக்டர் ஞானசேகரன். பண உதவிகளும் அதில் அடங்கும்.

ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்த ராஜகாரியர் முகத்தை ரொம்ப சோகமாக வைத்துக்கொண்டு தத்ரூபமாக நடித்தார். "டாக்டர் ஞானசேகரனை தேடிக் கண்டுபிடித்து உங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் கவலைப்படவேண்டாம்..." என்று ராஜகாரியர் சொல்லிக் கொண்டிருக்க, கூட்டத்தினருக்கு வந்தது கோபம்.

"நீங்கள்தானே கடத்தி வைத்திருக்கிறீர்கள். பிறகென்ன தேடுதல்? ஞானியை விடுதலை செய்யுங்கள்" என்று குரல் எழுப்பினார்கள்.

இதற்கிடையே ஞானி கடத்தப்பட்டதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட சகல இயக்கங்களும் பலமாகக் கண்டித்து துண்டுப்பிரசுரங்களை தனித்தனியாக வெளியிட்டிருந்தன.

ராஜகாரியரும் ஞானியை தேடுவதாக சொன்னதுடன், அக் கூட்டத்தில் நின்ற சிலர் தமக்குள் பின்வருமாறு கதைத்துக் கொண்டனர்: "ஒருத்தரும் கடத்தவில்லையென்றால் இப்போது நாங்கள்தான் எங்கள் மீதே சந்தேகப்பட வேண்டும்போல் இருக்கிறது. பொதுமக்கள்தான் கடத்தினார்கள் என்று சொல்லப்போகிறார்களோ?"

கடைசிவரை டாக்டர் ஞானசேகரன் விடுவிக்கப்படவேயில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம் ஒன்றில் வைத்து கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். ஆசனவாயிலில் மிளகாய்த்தூளை போட்டனர். தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டனர். "புலிகளின் பிரசுரங்கள் திருமலையில் விநியோகிக்கப்பட்டது யாரால்?" என்று கேட்டார்கள். திருமலையில் உள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை கேட்டு உதைத்தார்கள்.

இறுதியாக டாக்டர் ஞானசேகரன் ஜோர்ச்சினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருமலையில் இருந்து உருவான ஒரு இளம் தலைவனை துப்பாக்கிக் குண்டுகளுக்கு தீனியாகக் கொடுத்துவிட்டார்கள்.

டாக்டர் ஞானசேகரன் கொலைக்கு இன்றுவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். உரிமை கோரவில்லை. ஆனால் திருமலை மக்கள் அதனை மறக்காமல் வைத்திருந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் (1994) படுதோல்வியைக் கொடுத்தனர்.

### பெருமாளின் விளக்கம்

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர் வைத்திருந்த மக்கள் தொண்டர் படையினர் (C.V.F) பலர் பொதுமக்களுடன் கண்ணியக் குறைவாகவே நடந்துகொண்டனர்.

வயதில் மூத்தவர்களாக இருந்தாலும்கூட 'உஷ்' என்றோ 'ஏய்' என்றோ கூப்பிடுவார்கள். மரியாதைக் குறைவாக நடத்துவார்கள்.

திருமலையில் பிரஜைகள் குழுப் பிரமுகர்கள் சிலர் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளைச் சந்தித்து இது குறித்து முறையிட்டனர்.

அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட பெருமாள் அவர்களிடம் சொன்னது இது: "எனக்குப் புரிகிறது. இதை நாங்கள் வேறொரு கோணத்தில் பார்க்க வேண்டும். சி.வி.எஃப்.ல் சேர்ந்துள்ளவர்கள் கிராமப் புறங்களில் இருந்து வந்துள்ள பொடியன்கள். படிப்பறிவும் காணாது. விட்டுத்தான் பிடிக்கவேணும்"

### கனவுகள் கற்பனைகள்

இந்தியப் படையினர் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய இயக்கங்களின் தலைமைகளும், பிரமுகர்களும் கண்ட கனவுகள் வேடிக்கையானவை.

மணல் கோட்டை என்று சொல்வோமல்லவா அதனையெல்லாம் மிஞ்சும் அளவுக்கு கற்பனைக் கோட்டைகள் கட்டினார்கள்.

திருமலையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தையே வேடிக்கையான கற்பனைகளுக்கு சிறு உதாரணமாகத் தருகிறேன்.

அவரது பெயர் நவநீதன், ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தில் இருந்தவர். திருமலையில் ஆட்சேர்ப்புக்காக இளைஞர்களையும், சிறுபையன்களையும் பிடிப்பதில் ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினரும் ஈடுபட்டிருந்தனர்.

தனது உறவினரான ஒரு பையனை காணவில்லை என்று நவநீதனிடம் சென்றார் ஒரு பிரமுகர். காணாமல்போன அந்தப் பையனுக்கு புலிகள் இயக்கத்தில் சேரத்தான் விருப்பம். 'புலிகளுடன் சேரப்போகிறேன்' என்று வீட்டில் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான்.

பையன் காணாமல் போனதும் புலிகளுடன்தான் போய்ச் சேர்ந்துவிட்டான் என்றே முதலில் நினைத்தனர். பின்னர்தான் ஈ.என்.டி.எல்.எஃப். குழுவினர்தான் பிடித்துச் சென்றனர் என்று தெரிந்தது.

பையனின் உறவினரான அப்பிரமுகருக்கு நவநீதன் நண்பர் என்பதால் நேரடியாகச் சென்று கேட்டார்.

"எங்களுடன்தான் இருக்கிறான். பயிற்சி முடிந்ததும் வீட்டுக்கு அனுப்பிவிடுவோம்." என்ற நவநீதன் அடுத்துச் சொன்னதுதான் சுவாரசியமான கதை.

"பெரிய ஒரு யுத்தம் தொடங்கப் போகிறது. ஆட்கள் இருந்தால்தான் பிரதேசங்களை கைப்பற்றி வைத்திருக்கலாம். இப்போது பயிற்சி எடுக்கிறார்கள் பாருங்கள் இவர்களுக்கு பெரிய வேலை ஒன்றுமில்லை. ஒரு இரண்டு மூன்று நாட்களுக்கு தமது பிரதேசங்களை பாதுகாத்தால் போதும். பின்னர் எமது தேசிய இராணுவம் வந்து அப் பகுதிகளை படிப்படியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளும். தேசிய இராணுவம் பொறுப்பேற்ற பின்னர் இவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுவோம். யோசிக்க வேண்டாம். இரண்டு மூன்று மாதம் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார் நவநீதன்.

விளக்கத்தைக் கேட்டவர் சிலிர்த்துப் போனார். தனது உறவுக்காரப் பையன் அங்கேயே இருக்கட்டும் என்று சொல்லி விட்டுச் சென்றுவிட்டார்.

அந்த விளக்கம் சொன்னாரே நவநீதன், அவர் என்ன செய்தார் தெரியுமா? தனக்கு தெரிந்தவர்கள் மற்றும் உறவினர்களின் பிள்ளைகளை பாதுகாக்கத்தான் இப்படி ஊரார் பிள்ளைகளைப் பிடித்துக் கொடுக்கும் வேலையைச் செய்தார்.

நவநீதனால் அவ்வாறு பிடிக்கப்பட்ட இளைஞர்கள், சிறுபையன்கள் பலர் செத்துப் போனார்கள். குறிப்பிட்ட பிரமுகரின் உறவுக்காரப் பையனும் செத்துப்போனார். இதற்கெல்லாம் முன்னணியில் நின்ற நவநீதன் இப்போது வெளிநாடொன்றில் சுகமாக வாழ்கிறார்.

### பொருட்களுடன் பயணம்

இந்தியப் படையினருக்கு இருந்த வெளிநாட்டுப் பொருள்கள்மீதான மோகம் தொடர்பாக முன்பு விபரித்திருந்தேன்.

தமிழகப் பத்திரிகைகளும் அப்படியான செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தன.

அச் செய்தி ஒன்று வீடியோ டெக் படத்துடன் பின்வருமாறு வெளியாகியிருந்தது:

"இலங்கையில் இருந்து சென்னைக்குத் திரும்பும் இந்திய இராணுவ வீரர்கள், இராணுவத் தளபதிகள் ஆகியோரை சுங்க இலாகா அதிகாரிகள் சோதனை போடுகிறார்கள்.

அவ்வாறு சோதனை போட்டதில் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடியோ டெக்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியத் தளபதிகள் மாதத்துக்கு மூன்றுமுறை இலங்கைக்குப் போய் வருகிறார்கள். ஒவ்வொரு முறையும் இரண்டு வி.சி.ஆர்.கள் கொண்டுவருகிறார்கள்.

இவர்கள் புலிகளுடன் போராடப் போகிறார்களா? வி.சி.ஆர் (வீடியோ டெக்) வாங்கப்போகிறார்களா? என்று சுங்க இலாகா அதிகாரிகள் வருத்தப்படுகிறார்கள்."

### முஸ்லிம் காங்கிரசுக்குள் பூசல்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்திய அரசுடன் நெருக்கமான நட்புக் கொண்டிருந்தது. இதனால் முஸ்லிம் காங்கிரசுக்குள் சிறு பிணக்குகள் ஏற்பட்டன.

இந்தியப் படையினரால் முஸ்லிம் காங்கிரசுக்கு ஆயுதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன என்றும், பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்றும் தமக்கு அதில் உடன்பாடு இல்லையென்றும் முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் எம்.எஸ்.ஒஸ்மான் அறிவித்தார்.

இதனையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதாக அவர் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கையும் கொடுத்திருந்தார்.

மேல் மாகாணசபை அங்கத்தவர் பதவியில் இருந்தும் அவர் ராஜினாமா செய்தார். அவரது அறிக்கை இதுதான்:

"முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும், அதன் இதர அங்கத்தினர்களுக்கும் இந்தியப் படையினரின் பாதுகாப்பையும், விமான போக்குவரத்து வசதியையும் ஏற்றிருப்பது ஏற்கமுடியாத ஒன்று.

பிரதமருடன் முஸ்லிம் காங்கரஸ் நடத்திய பேச்சுக்களில் இஸ்ரேலியர்களை வெளியேற்றுவது குறித்து பேசப்படாதது ஆச்சரியத்தை அளிக்கிறது" என்று கூறியிருந்தார்.

### தமிழகத் தேர்தல்

தமிழக சட்டசபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) மாபெரும் வெற்றிபெற்றது. இரண்டாக உடைந்த அ.தி.மு.க படுதோல்வி கண்டது. தனியாகப் போட்டியிட்ட காங்கரஸ் கட்சியும் படு தோல்வியைச் சந்தித்தது.

தி.மு.க.வுடன் அல்லது அ.தி.மு.க.வுடன் இணைந்தே பல தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் போட்டியிட்டுவந்தது.

1989ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என்று ஜி.கே.மூப்பனார் ராஜீவ் காந்தியுடன் வாதாடி அந்த முடிவுக்கு அங்கீகாரம் பெற்றிருந்தார்.

ஆனால் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்கு மரண அடியாக அமைந்தன.

"இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பிய ராஜீவ் காந்திக்கு தமிழக மக்கள் பாடம் படிப்பித்துவிட்டார்கள்" என்று நெடுமாறன் ஒரு அறிக்கை விட்டிருந்தார்.

தமிழக தேர்தல் முடிவை அறிந்ததும் வன்னியில் இருந்து பிரபாகரன் ஒரு கடிதம் அனுப்பிவைத்தார். தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதிக்கு அக் கடிதம் அனுப்பப்பட்டது.

கடிதம் இதுதான்:

**எனது மதிப்புக்கும், அன்புக்கும் உரிய அண்ணா!**

தமக்கென ஒரு நாடின்றி அவதியுற்று பல்வேறு இன்னல்களுக்கும், இடர்களுக்கும் மத்தியில் உலகெங்கும் பரந்து வாழும் 8 கோடி தமிழ் மக்களும் பெருமைப்படும் வகையில் உண்மையான ஒரு மாநிலத் தமிழக மக்கள் உண்மையான ஜனநாயகத் தேர்தல் மூலம் அமைத்துள்ளனர்.

தமது விடிவுக்கான பாதை எது என்பதை தமிழக மக்கள் தேர்ந்தெடுத்து, வெற்றிக்கனியை தங்களிடம் சமர்ப்பித்துள்ளனர்.

தமிழக மக்களின் உள்ளங்களை வென்று, இன்று இந்த மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கும் தாங்கள் அமைக்க இருக்கும் அரசு தமிழக மக்களின் அரசு மட்டுமல்ல, உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் நலன்களைப் பேணும் ஒரு அரசும் கூட.

இதுவரை கட்சித் தலைவராக இருந்து, நாம் நடத்தும் தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்துவந்த தாங்கள் இனி ஆட்சித் தலைவராக இருந்து எமது போராட்டத்துக்கு துணை நிற்பீர்கள் என்பது எமது முழு நிறைவான நம்பிக்கை.

தங்களது வெற்றியை தமிழீழ மக்கள் தமது வெற்றியாகவே கருதுகின்றனர். தங்களை ஆட்சிபீடமேற்றிவைத்த தமிழக மக்களுக்கு நன்றியையும், ஆட்சி அமைக்கும் தங்களுக்கு உளப்பூர்வமான வாழ்த்துக்களையும் தமிழீழ மக்களின் சார்பாகவும், எமது இயக்கத்தின் சார்பாகவும், எனது சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**'புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம்'**

இவ்வாறு பிரபா தனது கடிதத்தில் எழுதியிருந்தார்.

உடனடியாக இக்கடிதத்தை தமது கட்சி பத்திரிகையான 'முரசொலி'யில் கலைஞர் பிரசுரிக்கச் செய்ததுடன், தமிழக பத்திரிகைகள் அனைத்திலும் வெளியாகவும் செய்திருந்தார்.

(தொடர்ந்து வரும்)




தமிழக சஞ்சிகை வெளியிட்ட காட்டூன்



படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திர இந்தியா—வயது 50 பாராமுகம் தொடரலாமா?

அலசுவது- இராஜதந்திரி

இந்தியா பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்று கடந்த ஆகஸ்ட் 15ஆந் திகதி 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருந்தது.

ஏற்படுத்திய தாக்கம் மறுக்க இயலாத ஒன்றாகும்.

இந்தியாவை தொடர்ந்தும்



1947 ஆகஸ்ட் மாதம் 14–15 நள்ளிரவு. இந்தியா சுதந்திரம் பெற்ற செய்தியை நேரு அறிவிக்கும் காட்சி.

பலாபலன்களையும் ஜனநாயகத்தின் பயன்களையும் விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிறுகூட்டம் அனுபவித்துவருவதையே இவை புலப்படுத்துகின்றன.

இந்தியா ஒரே நாடு என்று சொல்லப்பட்டாலும் மாநிலங்களுக்கிடையேயும் பூசல்கள் நிலவுகின்றன. காவேரி நதி நீரை தமிழ்நாடு மாநிலத்துக்கு பகிர்ந்து கொடுக்க மாட்டோம் என்று கர்நாடக மாநில அரசு அடம்பிடித்து வருகிறது. மத்திய அரசு தலையிட்டுக்கூட அப் பிரச்சனையில் தீர்வை எட்ட முடியவில்லை.

இந்தியா சுதந்திரம் பெற்ற 50 வருடங்களுக்குள் மாநில சுயாட்சி கோரி பல மாநிலங்கள் போராடியுள்ளன. தமிழ்நாட்டில் தி.மு.க. வினர் முதலில் தனித்திராவிட நாடு கேட்டனர். பின்னர் மாநில சுயாட்சி கோரினார்கள். இப்போதும் மாநில சுயாட்சி



1969ல் தொழிலாளர் வர்க்க ஆயுதக் கிளர்ச்சி. இதுவே நக்சல்பாதி கிளர்ச்சி என்றழைக்கப்படுகிறது. இது தோல்வியில் முடிந்தது.

இந்தியா என்றதுமே அதனை ஓர் ஆன்மீக பூமியாக மனதில் நிறுத்துவதையே நம்மில் அநேகர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

புத்தபிரான், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தியடிகள் போன்ற பல ஆன்மீகவாதிகளும், தீர்க்கதரிசிகளும் இந்தியாவின் இமயம் முதல் குமரி முனைவரை, இருந்து வந்துள்ளனர்.

இருந்தபோதிலும் இந்தியாவைவிட சிறிய நாடான பிரிட்டன் இந்தியாவை பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து பலநூற்றாண்டுகளுக்கும் மேலாக அரசாட்சி செய்திருந்தது.

எனவே பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் பன்நெடுங்காலம் நிலைகொண்டிருந்தமைக்கு பிரிட்டிஷாரின் ஆளுமைத்திறன் மட்டும் ஒரு காரணமாக இருக்கவில்லை.

பிரிட்டிஷாரது அடிவருடிகளாக இருந்த இந்தியர்களது போக்கும் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் பன் நெடுங்காலம் நிலைத்திருக்க வழிகோலியிருந்தது.



ஆன்மீக பூமியில் வீசும் கவர்ச்சி அலை- முரண்பாடுகள்.

இருந்தபோதிலும் மகாத்மா காந்தியடிகள், சுபாஸ் சந்திரபோஸ், ஜவஹர்லால் நேரு, மகாகவிபாரதியார் உட்பட சுதந்திர வேட்கை கொண்ட இந்தியர்களது சுதேசிய சிந்தனையும், தேசப்பற்றுமே பிரிட்டிஷாரை இந்தியாவிலிருந்தும் வெளியேறச் செய்திருந்தது.

அகிம்சை போராட்டத்தின் வாயிலாகவே இந்தியா சுதந்திரம் பெற்றது என்றே பொதுவாகக் கூறப்பட்டு வருகிறது. இக் கூற்று பூரணமான ஒன்றல்ல. **இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பரந்துபட்ட மக்களை திரட்டி சாத்வீகப் போராட்டத்தில் இறக்குவதில் மகாத்மா காந்தியிடம் காணப்பட்ட ஆற்றல் மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். சுதந்திரத்துக்கான மக்கள் எழுச்சியை உருவாக்கியதில் காந்தியம் முக்கிய பங்கை வகித்தது.**

**ஆயினும் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஆயுதமேந்திய போராளிகளும் குறிப்பிடத்தக்க பங்கை வகித்திருந்தனர்.** இறுதியாக இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கிப் போராடிய சுபாஸ் சந்திரபோஸ்

அடிமைப்படுத்தி வைத்திருந்தால் மாபெரும் ஆயுதக் கிளர்ச்சிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அச்சம் கொண்டனர்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றங்களும் இந்தியா போன்ற நாடுகளை தொடர்ந்து அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியாத நெருக்கடிகளை உருவாக்கின.

**சுதந்திரத்துக்கான மக்கள் எழுச்சி, ஆயுதப் போராட்ட தாக்கங்கள், மாற்றமடைந்த சர்வதேச நிலவரங்கள் என்பவற்றின் காரணமாகவே இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும் நிர்ப்பந்தம் பிரிட்டிஷ்காரர்களுக்கு ஏற்பட்டது.**

பிரிட்டிஷ் ஆட்சியாளரின் நல்லெண்ணமோ, மனிதாபிமானமோ அதற்கு காரணமல்ல.

இப்போது தனது 50வது சுதந்திர தினத்தை இந்தியா கொண்டாடி முடித்திருக்கிறது. நமது அயல்நாடு, நட்புக்குரிய நாடு என்ற வகையில் நாமும் நிச்சயம் மகிழத்தான் வேண்டும்.

ஆயினும் சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகளில் இந்தியா சாதித்த சாதனைகளும் உள்ளன. சாதிக்கத்தவறிய பணிகளும் உள்ளன.

**சுதந்திரம் என்பது மக்கள் தமக்குத் தேவையானதை அனுபவிக்கின்ற, அவசியமானதை பெறுகின்ற உரிமையாகும்.**

ஆனால் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் சென்றபின்னரும்கூட இன்னமும் இந்தியாவின் கோடானுகோடி மக்கள் சுதந்திரத்தின் பலன்களை அனுபவிக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

பெரு முதலாளிகளும், அதிகாரவர்க்கத்தினரும், அரசியல் கட்சிகளும் சுதந்திரத்தின் பலன்களை தமக்கிடையே பங்குபோட்டுக் கொண்டனர். அவை பங்குபோட்டுக் கொண்டதுபோக மீதியான சில பலாபலன்கள்தான் அடிமட்ட மக்களிடம் போய்ச் சேர்ந்துள்ளன.

**இதனால்தான் ஒரு கவிஞர்: 'நாம் சுதந்திரம் பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது.' என்றும், இன்னொரு கவிஞர்: "நள்ளிரவில் வாங்கினோம் இன்னமும் விடியவேயில்லை." என்றும் இந்திய சுதந்திரத்தின் பின்னரான நிலையை வேதனையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.**

இனப் பூசல்கள், மாநிலங்களுக்கு போதிய அதிகாரப் பகிர்வின்மை, சாதிப் பிரச்சினைகள், மதப்பூசல்கள், ஜாதிப் பூசல்கள், பெண் அடிமைத்தனம், மூடப்பழக்கங்கள் என்று இந்திய சுதந்திரத்தின்மீது இன்னமும் இருள் படிந்துதான் காணப்படுகிறது.

இந்தியா தனது 50வது சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதற்கு சில நாட்களுக்கு முன்னர்கூட தாழ்ந்த ஜாதிப் பெண் ஒருவரை பீகாரில் நடுவீதியில் நிர்வாணமாக்கி தாக்கியிருக்கிறார்கள்.

**இது ஒரு புறமிருக்க, பீகார் மாநில முதல்வர் லல்லு பிரசாத் யாதவ்மீது கோடிக்கணக்கான ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. பதவி விலகும் நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அவர் தனது இல்லத்தரசியை முதல்வராக்கி இந்திய ஜனநாயகத்தையே கேலிக்குள்ளாக்கியுள்ளார்.**

நாட்டின் சுதந்திரத்தின்

கோரிக்கையை தி.மு.க. வலியுறுத்தி வருகிறது. எனினும் அதற்காகப் போராடும் நோக்கம் அக் கட்சிக்கு இல்லாமையால் அக் கோரிக்கையை வளர்த்தெடுக்கவோ, வலுவுள்ளதாக்கவோ முடியவில்லை.

மணிப்பூர், பஞ்சாப், நாகலாந்து போன்ற பல மாநிலங்களில் ஆயுதக்கிளர்ச்சிகளும் நடந்திருக்கின்றன. இவை அந்நிய சக்திகளின் தூண்டுதல் என்று சொல்லப்பட்டாலும் அந்தந்த மாநில மக்களின் உரிமை வேட்கையும்



சீதனக்கொடுமை. சுருக்குக்கயிற்றில் பெண்களின் கழுத்துக்கள். ஒரே குடும்பத்தில் மூன்று சகோதரிகள் மரணமான காட்சி. 1987- கான்பூர்.

அவற்றில் அடங்கியிருந்தன என்பதை மறுத்தல் இயலாது.

**இவ்வாறான நிலைகள் மத்தியிலும் இந்தியா தன்னை ஒரு வல்லரசாக வளர்த்துக் கொண்டுள்ளது என்பதையும் கவனித்தேயாக வேண்டும். தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் தமது வாலைச் சுருட்டி வைத்திருப்பதற்கு இந்தியாவும் ஒரு பிரதானமான காரணமாக இருக்கிறது.**

ஜவகர்லால் நேரு காலத்தில் இருந்தே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை அமெரிக்காவுக்கு சவாலாகவே இருந்து வந்திருக்கின்றது. சர்வதேச விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் இந்தியா முனைப்பாக நின்று குரல்



விடியாத நள்ளிரவு

கொடுத்திருக்கிறது.

**எனினும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் நிலை இரட்டைப் போக்காகவே இருந்து வந்திருக்கிறது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வும் காணப்படவேண்டும். அதே நேரம் இந்தியாவுக்குள் பிரிவினையை தூண்டக்கூடிய ஒரு தீர்வாக அது அமைந்துவிடவும் கூடாது என்றரீதியிலேயே இந்திய மத்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கை நம் விவகாரத்தில் அமைந்திருந்தது.**

பாலஸ்தீனப் போராட்டத்தை நிபந்தனையில்லாமல் ஆதரித்த இந்திய அரசு, இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தை மட்டும் நிபந்தனையுடனேயே ஆதரிக்கத் தலைப்பட்டது.

தமிழ்நாட்டில் ஆறுகோடித் தமிழர்கள்

இருப்பதுதான் இந்திய மத்திய அரசின் அச்சத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது. இலங்கையில் தனிநாடு ஒன்று உருவானால் தமிழ்நாட்டிலும் அவ்வாறான கோரிக்கை வலுப்பெறும்



1965- இந்தி திணிப்பை எதிர்த்து தமிழ்நாட்டில் போராட்டம். மொழி உரிமை.

என்று நினைத்துவிட்டனர்.

இத்தகைய கொள்கை நிலைப்பாடுதான் இலங்கைத் தமிழ் அமைப்புக்களுடன் கலந்துபேசாமல் ஒரு தீர்வை திணிக்குமளவுக்கு இந்திய அரசை தூண்டியது எனலாம்.

இந்திய அரசு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் குரல் கொடுத்ததையோ, இனப்படுகொலைகளை கண்டித்து நின்றதையோ யாரும் மறக்க முடியாது. பல்லாயிரம் அகதிகளை அரவணைத்ததும் இந்தியாதான்.

இந்தியாமீது இலங்கைத் தமிழர்கள் உணர்வுபூர்வமாக பற்றுக்கொண்டிருப்பதும் உண்மையே. தற்போதுகூட இலங்கை அணிக்கும், இந்திய அணிக்கும் இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில்கூட இலங்கைத் தமிழர்கள் பலர் இந்திய அணியின் ஆதரவாளர்களாகவே இருக்கின்றனர்.

**ஆனால், இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்பது நட்பின் அடிப்படையிலான ஒன்றாக அல்லாமல், "நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்கவேண்டும்" என்ற எஜமான மனோபாவத்துடன் தமிழர் தரப்பு முன்பாக போடப்பட்டமை முறையானதல்ல.**

உரிமைப்போராட்டம் என்பதில் தன்மானம், கௌரவம் என்பவையும் அடக்கம். அவை இல்லையெனில் போராடவேண்டிய அவசியமே இல்லாமல் போகும். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், நாம் யார்க்கும் அடிமை செய்து வாழோம்' என்ற இறுமாப்புடன்தான் பல ஆயிரம் இளைய உயிர்கள் போராடி மடிந்தனர்.

**போராட்டத்தின் அடிப்படையிலான தன்மான உணர்வுக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்ட முறையானது சவாலாகவே அமைந்தது என்பதை தீர யோசிக்கும் எவரும் மறுக்கமாட்டார்.**

விடுதலைப் புலிகள்மீதுள்ள முரண்பாட்டால் ஏனைய தமிழ்க் கட்சிகள் இன்று அதனை மறுக்கின்றன. ஆனால் இந்தக் கட்சிகளும் ஒரு காலத்தில் தன்மானம் இல்லாமல் வாழ்வது ஒரு வாழ்வா எனக் கேட்டு இளைஞர்களை போராட வைத்தவைதான். அந்த மரணங்களை நியாயமானவை, தியாகமானவை என கொண்டாடியவைதான்.

ஆக, இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்ட முறையானது அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கசப்பான நிகழ்வுகளுக்கு காரணமாகிவிட்டது. இன்று இந்தியா, இலங்கைப் பிரச்சினையில் தமிழர் தரப்புப் பக்கம் உள்ள நியாயங்களைக்கூட உற்று நோக்காத போக்கையே கொண்டிருக்கிறது.

**சமீபத்தில் இந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் அவர்கள் இலங்கைப் பிரச்சினையில் 'இந்தியா தலையிடாது. நாம் ஒருமுறை தலையிட்டு விரலைச் சுட்டுக்கொண்டோம்' என்று கூறியிருக்கிறார்.**

தமது தரப்பில் ஒரு தவறும் இல்லை தாம் முழுக்க முழுக்க நியாயமாகவே நடந்துகொண்டோம் என்பது போலவே இந்தியப் பிரதமரின் பேச்சும் அமைந்துள்ளது.

ஆனால் இன்றைய இந்தியப் பிரதமர் குஜ்ரால் அன்று இலங்கை விவகாரத்தில் ராஜீவ் காந்தியின் அணுகுமுறை தவறானது என்பதை கடுமையாக விமர்சித்தவர்களில் ஒருவர். இந்திய முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் அமைச்சரவையில் வெளிநாட்டமைச்சராக இருந்த குஜ்ரால்தான் இலங்கைக்கு இந்தியப்படை அனுப்பப்பட்டதை தவறு

என்று கண்டித்ததுடன், அப்படையை திருப்பி அழைக்கும் உத்தரவுகளையும் பிறப்பித்தவர் என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

ராஜீவ் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் இலங்கைக்கு இந்தியப் படை அனுப்பப்பட்டதை ஜனதா தளக் கட்சி 1989ம் ஆண்டு தேர்தல் பிரசாரங்களிலும் கடுமையாக விமர்சித்திருந்தது.

**தம்மால் முன்பு தவறு என்று விமர்சிக்கப்பட்ட அணுகுமுறையை, 'விரலை வைத்து சுட்டுக்கொண்டோம்' என்று இன்று விபரிப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.**

**வேண்டுமென்றே தட்டிக்கழிக்க காரணம் கூறும் முயற்சிகளாகவே இவற்றை நோக்கவேண்டியுள்ளது.**

தென்னிலங்கையில்கூட இந்தியாவுக்கு எதிரான போராட்டங்கள் கடந்த காலங்களில் நடந்துள்ளன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து இந்தியாவை கண்டபடி சாடியிருந்தனர். இத்தனைக்கும் மேலாக ராஜீவ் காந்தியை அணிவகுப்பில் வைத்து கொல்வதற்கான முயற்சியேகூட நடந்தது. அவ்வாறு முயற்சித்தவரை பிரேமதாசா அரசு விடுதலை செய்தது.

அப்படியிருந்தும் இலங்கை அரசுடனோ, சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ இந்திய அரசு முகம் சுளித்துக் கொள்ளவில்லை. அதுதவிர இப்போது இலங்கை அரசுடன் நட்பை வலுப்படுத்திக் கொண்டும் உள்ளது.

எனினும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தலையிடாமைக்கு மட்டும் 'விரலை சுட்டுக் கொண்டோம்' என்று திரும்ப திரும்பச் சொல்லப்படுகிறது.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கூட இந்திய அரசு சகித்துக் கொள்கிறது. அதற்கு கூறப்படும் சமாதானங்களையும் ஏற்றுக்கொள்கிறது.

மொத்தத்தில் இலங்கை விவகாரத்தை தனது நலனுக்கு ஏற்ற விதத்தில் கையாளும் நிலைப்பாட்டில் இந்திய அரசு மேலும் அழுத்தமாக நிற்கிறது. தனது நலனில் இந்தியாவுக்கு அக்கறை இருப்பது நியாயம்தான். ஆனால் இந்தியாவின் நலனுக்காக இலங்கைத்



கவாஸ்கர் டெஸ்ட்போட்டியில் 10 ஆயிரம் ரன்கள். 34 செஞ்சரிகள். உலக சாதனையை படைத்துக் கொடுத்தவர்.

தமிழ் மக்கள் தமது நலன்களை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல.

தனது 50வது சுதந்திரத்தைக் கொண்டாடும் இந்தியாவிடம் இருந்து இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நிறையவே எதிர்ப்பார்க்கிறார்கள்.

**அமெரிக்காவிடம் இருந்தோ, மேற்கு நாடுகளிடம் இருந்தோ நீட்டப்படும் கரங்களை நம்புவதைவிட, இந்தியாவின் கரங்களை நட்புடன் பற்றிக் கொள்ளவே இலங்கைத் தமிழர்கள் விரும்புகின்றனர்.**

கடந்தகாலத்தில் இந்தியாவின் வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்கள் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் செய்த தவறுகளும், தமிழர் தரப்பு இந்திய உறவை சரியானமுறையில் கையாளாமல் இழைத்த தவறுகளும் இனிவரும் காலங்களில் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே சரியானதாகும்.

கடந்த கால தவறுகளை சரிசெய்து இந்தியாவின் நட்புறவை நம் பக்கம் திருப்ப இந்தியாவில் உள்ள அரசியல்வாதிகளும், இங்குள்ள தமிழர் தரப்பும் முயற்சிக்க வேண்டியது கடமையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

**கடந்த வாரம்**

**விக்கிரம் மல்லாவை ஸ்ரீராம் சுட்டுக் கொல்கிறான். பூலானையும் தாக்குகிறான். பூலான் மயக்கமடைகிறாள். மல்லாவின் உடலை அநாதரவாகப் போட்டுவிட்டு பூலானையும் தூக்கிக்கொண்டு படகு மூலம் தப்பிச் செல்கின்றனர் ராம் கோஷ்டியினர்.**

இனி...

# கொள்ளை ராணி பூலான்தேவி

தருவது ரசிகன்

## பாகம் 2

படகில் நினைவற்றுக் கிடந்த பூலானை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் லாலா ராம். ஸ்ரீராமின் அருகில் குசுமா நின்றுகொண்டிருந்தாள்.

இரண்டு படகுகளில் ஸ்ரீராமின் ஆட்கள் சென்றுகொண்டிருந்தார்கள். இரண்டாவது படகில் மல்லாவின் விசுவாசிகளான மூன்றுபேர் கைகால்கள் கட்டப்பட்டு படுக்க வைக்கப்பட்டிருந்தனர்.

வேராவும் கைகால்கள் கட்டப்பட்டுக் கிடந்தான். வேராவை நடு ஆற்றில் வைத்து சுட்டு ஆற்றில் வீசிவிடுமாறு ஸ்ரீராம் தன் ஆட்களுக்கு உத்தரவிட்டிருந்தான்.

படகுகள் இரண்டும் நட்டாற்றை அடைந்ததும் தன் படகில் இருந்து ஸ்ரீராம் கைகளை ஆட்டிக்கொண்டு உரத்த குரலில் கத்தினான்: "அந்த நாயை சுட்டுக் கொன்றுவிடுங்கள்!"

அவர்கள் வேராவை பிடித்துத் தூக்கி படகில் உட்காரவைத்தார்கள்.

வேராவுக்கு தன் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டது என்பது புரிந்துபோனது. ஆனாலும் அவன் கண்களில் அச்சத்தின் சாயல் ஒரு துளிகூட தோன்றவில்லை.

தன்னைச் சுடுவதற்காக துப்பாக்கியை உயர்த்தி குறிபார்த்தவனை வேரா கண் இமைக்காமல் நேராகப் பார்த்தான். அவன் உதடுகள் இகழ்ச்சியான பாவனையில் ஒரு புன்னகையை உதிர்த்தன. அந்த இகழ்ச்சியோடு வேரா சொன்னான்: "முட்டாள்களே! உங்களை உண்மையாகவே பாதுகாக்கக்கூடிய ஒரு நல்ல தலைவனை ஸ்ரீராம் கொன்றுவிட்டான். இனி நீங்கள் நாசமாகத்தான் போவீர்கள். இப்போது என்னையும் சுடப்போகிறாயா? சுடு... சுடடா சுடு. மல்லாஜியே போன பின்னர் நான் உயிரோடு இருந்து என்ன செய்யப் போகிறேன்! சுடடா முட்டாள்!"

முட்டாள் என்று அழைக்கப்பட்டவன் முகத்தில் ஒரு சலனம் தெரிந்தது. முன்னால் சென்ற படகை திரும்பிப் பார்த்தான். அதில் இருந்து ஸ்ரீராம் அங்கேயே பார்த்துக்கொண்டு சுடுமாறு சைகை செய்து கொண்டு நின்றான்.

வேறு வழியே இல்லை.

அவன் வேராவைச் சுட்டான்.

வேராவின் தலையில் குண்டு துளைத்தது.

மல்லாவின் தீவிரவிசுவாசியான வேரா சர்வநிச்சயமாய் செத்துப்போனான்.

அவனது உடலைத்தூக்கி நட்டாற்றில் எறிந்தார்கள். ஆற்றின் மடியில் வேராவின் உடல் தாலாட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

ஸ்ரீராம் அந்தக் காட்சியைக் கண்டுவிட்டு குசுமாவைக் கட்டிக்கொண்டு குதூகலித்தான்.

அலைக்கரங்கள் படகுகள் விசிறியடித்த ஆற்று நீரால் படகில் கிடந்த பூலான்தெப்பமாக நனைந்திருந்தாள்.

அவளது சீருடை ஈரமாகி உடலோடு ஒட்டிக் கொண்டதால், உடலின் ஏற்ற இறக்கங்களும், பரிமாணங்களும் ஸ்ரீராமின் ஆட்களை நிலைகொள்ளாமல் தவிக்கச் செய்தன.

விக்கிரம் மல்லா உயிரோடு இருந்தவரை பூலானை நெருங்கவோ, தப்பான நோக்கத்தில் பார்க்கவோ அவர்களில் யாருக்கும் துணிவு வந்ததில்லை. அவர்களில் பலருக்கு மல்லாமீதும் பூலான்மீதும் மதிப்பும் இருந்தது.

ஸ்ரீராமும் குசுமாவும் விஷக்காற்றுப் போல பரப்பிவிட்ட கதைகளால் மல்லா மீது இருந்த மதிப்புக் குறைந்துபோனது. பூலான்மீதும் அவர்கள் வைத்திருந்த மதிப்பு சேதமாகியிருந்தது.

இப்போது பூலானைப் பார்த்த பார்வையில் காமம்தான் இருந்தது. குவிந்த தாமரை மொட்டுக்கள்போல நிமிர்ந்து கிடந்த மார்பெழுச்சிகளும், உடலோடு ஒட்டிய சீருடை வெளிப்படுத்திய அவற்றின் பரிமாணங்களும் அவர்களது இச்சைகளை அதிகப்படுத்தியது.

பூலானை வேட்டையாடக் காத்திருக்கும் வெறிபிடித்த நாய்கள்போல அவர்கள் மாறியிருந்தார்கள். லாலாராம்தான் பிரதான வேட்டைநாய். பூலானை தன் ஆசை அடங்கும்வரை வேட்டையாடிவிட்டு, சக நாய்களிடம் தள்ளிவிடத் தயாராக இருந்தான்.

தன்னைச் சுற்றி நிற்கும் நாய்களின் இச்சைகளை அறியாமல் பூலான் படகில் நினைவிழந்து கிடந்தாள்.

படகுகள் கரையை அடைந்தன. பூலானை லாலாராம் ஒரு மூட்டைபோலத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டான். அப்படிப் போட்டதில் பூலான் மார்புகள் அவன் மார்பில் உராய்ந்தன. அவள் உடல் பஞ்சுப்பொதியைப்போல இருப்பதாக சுகமாக உணர்ந்தான் லாலாராம்.

அவர்கள் சென்ற கிராமத்தின் பெயர் பெண்மி. அந்தக் கிராமம் ஸ்ரீராமுக்கு பரிச்சயமான கிராமம். பல தடவைகள் அங்கு வந்திருக்கிறான்.

அக் கிராமத்தில் ஏற்படும் சச்சரவுகளை தீர்த்துவைக்கவும் அவனது உதவியைத்தான் அக் கிராம மக்கள் நாடுவது வழக்கம்.

ஸ்ரீராமையும் அவன் கோஷ்டியையும் கிராம முக்கியஸ்தர்கள் பலர் வரவேற்றனர். லாலா ராம் பூலானை தூக்கிக் கொண்டுபோய் அங்குள்ள குடிசை ஒன்றுக்குள் போட்டான்.

பூலானுக்கு மெல்ல மெல்ல சுயநினைவு திரும்பத் தொடங்கியது. "மல்லா..." என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

லாலா ராம் ஒரு கோழை. பூலான் சுயநினைவுடன் எழுந்துவிட்டால் தன்னை புரட்டி எடுத்து விடுவாள் என்று பயந்தான். அதனால் குடிசைக்குள் கிடந்த அழுக்கடைந்த துணிகளை கிழித்து கயிறாகப் பாவித்து பூலானின் கைகளைப் பிணைத்துக் கட்டினான். அவள் கால்களையும் இறுக்கிக் கட்டுப் போட்டான்.

இப்போதுதான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது. இனிமேல் பயமில்லாமல் பூலானைத் தொடலாம். அவளால் தன்னை எதுவும் செய்ய முடியாது என்று நினைக்க ஆனந்தமாக இருந்தது.



பூலான்

லாலா ராம் தன் சட்டையை கழற்றி தரையில் வீசினான். வெளியே ஸ்ரீராமும் அவன் ஆட்களும் கூச்சலும் கும்மாளமுமாக இருந்தனர். அவர்களோடு சேர்ந்து கும்மாளமிட லாலா ராமுக்கு பொறுமையில்லை.

பூலான் இப்போது தன் கண்களைத் திறந்தாள். தான் எங்கே இருக்கிறோம் என்று தெரியவில்லை. கைகள் கட்டப்பட்டிருக்கின்றன, கால்களும்தான். தன்னை சிறை வைத்திருக்கிறார்கள் பாவிகள் என்று புரிந்துகொண்டாள்.

லாலா ராம் தன்னையே குனிந்து பார்த்துக்கொண்டு நிற்பதை அவள் பார்த்தாள். அவன் தன் பற்களைக் காட்டிச் சிரித்தான். அடிபட்டுக் கிடக்கும் ஆட்டுக்குட்டியை ஓநாய் ஒன்று பசியுடன் பார்ப்பதுபோல வெறியுடன் பூலானை நோக்கி குனிந்தான்.

பூலான் தன் சக்தியைத் திரட்டி கத்த முயன்றாள். அவள் நாவு உலர்ந்து ஒட்டிக் கொண்டது. சத்தம் வரவில்லை. மிகப் பலவீனமாக உணர்ந்தாள்.

லாலா ராம் அவள் சட்டையைப் பிடித்து இழுத்தான். பட்டன்கள் தெறித்தன. வெறித்துப் பார்த்தான். அவன் கண்கள் சிவந்தன. தன் கைகளால் அவள் உடலெங்கும் அலைந்தான். பூலானின் கழுத்தில் பிடித்துக்கொண்டே, "உன் மல்லா செத்துப் போனானடி.. இப்போது என்னடி செய்வாய்?" என்றான். அப்படியே கவிழ்ந்து அவள் உதட்டை கவ்வினான். வெறிகொண்டவன் போல கடித்தான்.

பூலானுக்கு மூச்சுத்திணறியது. அவள் திமிறினாள். கட்டப்பட்டிருந்த கைகளால் அவன் நெஞ்சில் அடித்தாள்.

அவள் கைகள் பலமற்றுப் போயிருந்தன. அதனால் லாலாராமை எதிர்க்கத் திராணியில்லாமல் இருந்தன. உடலை அசைக்கக்கூட முடியவில்லை.

லாலாராம் அவள் உடைகளை ஒவ்வொன்றாய் பிய்த்தெறிந்தான. அவள் உடம்பின் ஒவ்வோர் பரப்பையும் நிதானமாய் ஆக்கிரமிக்கத் தொடங்கினான். பூலான் தன் கால்களை இறுக்கிக்கொண்டு அவன் ஆக்கிரமிப்பை எதிர்க்க கடைசி முயற்சி செய்தாள். ஆனால் தோற்றுப்போனாள்.

ஆட்டை ஓநாய் அடித்துத் தின்னத் தொடங்கியது. வெறிதீரும்வரை, பசியடங்கும் வரை ஓநாய் ஆட்டம் போட்டது. மூச்சிறைத்தது. அதன் கடைவாயில் இருந்து எச்சில் கொட்டியது.

தன் இயலாமையை நினைத்து, மறுபடியும் தன்னை பிடித்துக்கொண்ட துரதிஷ்டத்தை நினைத்து உள்ளே துடி துடித்துப் போனாள் பூலான்.

லாலாராம் அவள்மீது படர்விக் கிடந்தான். அவள் உடலோ விறைத்துப் போனதுபோல, மரக்கட்டைபோல மாறிவிட்டிருந்தது.

தன் உடம்பைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. மல்லா இறுதியாக துடித்து அடங்கிய காட்சிதான் அவள் உள்மனதில் விசுவரூபமாக எழுந்து நின்றது.

'மல்லாவின் உடம்பு என்னாகியிருக்குமோ?' என்ற நினைப்புத்தான் அந்தரமாக இருந்தது.

தனது உடம்பு அவளுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. 'மல்லா....மல்லா....' என்றே அவள் இதயம் துடிப்பதுபோல இருந்தது.

லாலா ராம் எல்லாம் அடங்கியவனாக அவள் உடம்பிலிருந்து எழுந்தான். இப்போது அவனுக்கு சற்று எரிச்சலாகவும் இருந்தது. 'இதற்காகவா இத்தனை நாள் ஏங்கிக்கொண்டிருந்தோம்?' என்று சலிப்பாக இருந்தது.

தன் ஆக்கிரமிப்பு பூலானை ஒன்றும் செய்யவில்லை. அவள் உடம்பை உலுக்கவில்லை. ஒன்றுமே நடக்காததுபோல கிடக்கிறாளே, என்று நினைத்தபோது அவனுக்கு இயலாமையாக இருந்தது. அந்த இயலாமை உணர்ச்சி பூலான்மீதான ஆத்திரமாகமாறியது.

பற்களை நறநறவென்று கடித்தான். அவனுக்கு இரத்தம் கொதித்தது. பூலான் தரையிலே அப்படியே மல்லாந்து கிடந்தாள். அவள் விழிகள் எங்கோ வெறித்தபடி கிடந்தன. தன்னை ஒரு பொருட்டாகக்கூட அவள் பார்க்கவில்லையே என்று லாலா ராமுக்கு உள்ளே கொதித்தது.

"அடியேய்..." என்று கத்தினான். அவன் கத்தியதும் பூலானின் விழிகள் அவன்மேல் நிலைத்தன. வெறுப்பை உமிழ்ந்தன. இப்போது அவளால் ஓரளவு பேச முடிந்தது.

"என்னடி பார்க்கிறாய்?" என்றான்.

"போ... போடா பேடிப் பயலே!" என்றாள் பூலான்.

அந்த வார்த்தை நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல இருந்தது. "யாரடி பேடி?" என்றபடி பாய்ந்து அவள் கழுத்தை நெரித்தான். பின்னர் வெறிகொண்டவன் போல அவள் உடம்பெங்கும் கழுத்தில் இருந்து ஆரம்பித்து ஆவேசமாக முத்தமிடத் தொடங்கினான்.

வெளியே ஸ்ரீராம் லாலா ராம் என்ன ஆனானோ என்று யோசித்து, குடிசைக் கதவை தட்டினான்.

பூலானைவிட்டு விட்டுப்போய் கதவைத் திறந்தான் லாலா ராம். ஸ்ரீராம் அவனையும் உள்ளே தரையில் துணியெதுவும் இல்லாமல் கிடந்த பூலானையும் பார்த்தான்.

லாலா ராமை பார்த்து, "போதும்தானே? இனி விலகு. இவளை என்ன செய்கிறேன் பார். இனி நீ குறுக்கிடாதே!" என்றான்.

"இவளுக்கு நான் ஒருவன் போதாது. திமிர்பிடித்த கழுதை. மதம் பிடித்த உடம்பு... இவளை... இவளை..." மேலே சொல்ல முடியாமல் ஆத்திரத்தில் பற்களைக் கடித்தான்.

ஸ்ரீராம் வெளியே குடித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்த தன் ஆட்களை நோக்கி "டேய் எல்லோரும் இங்கே வாங்கடா... இன்று நல்ல விருந்து தரப்போகிறேன்." என்று கத்தினான்.

தள்ளாடிக்கொண்டே எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். மல்லா இருந்தால் இப்படி தலைகால் தெரியாமல் குடிக்க விடமாட்டான். நிலை தெரியாமல் ஆடவிடமாட்டான்.

இப்போது அந்தக்கட்டுப்பாடுகள் தளர்ந்து போனதில் அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது. ஸ்ரீராமுடன் இருந்தால் வாழ்க்கையை விரும்பியபடி அனுபவிக்கலாம் என்று நினைத்தார்கள்.

அவர்கள் நினைப்பை மெய்யாக்குவது போல ஸ்ரீராம், "உங்களுக்கு அந்த சிறுக்கி வேண்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டும். வேண்டும்" என்று குளறலாக எல்லோரும் கத்தினார்கள்.

"போங்கடா, ஒவ்வொருத்தராய் போங்கடா..." என்றான் ஸ்ரீராம்.

யார் உள்ளே முதலில் போவது என்று அவர்கள் சண்டைபோட்டுக் கொண்டார்கள். அவர்கள் சண்டைபோடுவதை ஸ்ரீராம் வேடிக்கை பார்த்தான்.

எலும்புத் துண்டுக்காக சண்டைபோடும் நாய்களைப்போல அவர்கள் ஒருவரையொருவர் சட்டையில் பிடித்து அடிபட்டுக் கொண்டார்கள். சிலர் தரையில் கட்டிப் புரண்டு சண்டையிட்டார்கள்.

அவர்கள் அடிபட்டுக் கொண்டிருக்கும் போது குசுமா அந்தக் குடிசைக்குள் நுழைந்தாள். பூலான் கிடந்த கோலத்தைப் பார்த்ததும் அவளுக்கு குரூரமான ஒரு திருப்தி ஏற்பட்டது.

பூலானும் அவளைப் பார்த்தாள். அவள் உடலில் மட்டும் பலம் இருந்திருந்தால் குசுமாவை அடித்தே கொன்றிருப்பாள். மல்லாவின் சாவுக்கு குசுமாவும் உடந்தையாக இருந்திருப்பாள் என்பதில் பூலானுக்கு சந்தேகமே இல்லை.

குசுமா பூலானின் பக்கத்தில் சென்று அமர்ந்தாள். அவள் உடலை மேலிருந்து கீழ்வரை பார்த்தாள். இந்த உடம்பில்தானே மல்லா மயங்கிக்கிடந்தான். 'இந்த உடம்பு ஏற்படுத்திய மயக்கத்தால்தானே என் அழைப்பை மல்லா புறக்கணித்தான்' என்று நினைத்தாள்.

குசுமா பூலானின் கன்னத்தை வருடினாள். கன்னத்தை வருடிய கரத்தால் சடாரென்று ஓங்கி அதே கன்னத்தில் அறைந்தாள்! மாறி மாறி அறைந்தாள்.

பின்னர் எழுந்து போய்விட்டாள். இன்னமும் வெளியே அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீராமிடம் சென்ற குசுமா அவன் காதில் ஏதோ சொல்ல, ஸ்ரீராம் முகம் மலர்ந்தது.

"அப்படியே செய்கிறேன். அதுதான் சரியான தண்டனை.." என்றபடி எழுந்தான்.

(தொடர்ந்து வரும்)

## ரேணுகா + ஜெயப்பிரதா

## கவர்ச்சி அரசியல் மோதல்

ஏதோ தமிழ்நாட்டில் மட்டும்தான் கவர்ச்சி அரசியல் கொடிகட்டிப் பறப்பதாக முன்பெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தோம். அங்கு மட்டுமில்லை எங்கெங்கும் கவர்ச்சிக்கு மவுசுதான். திறமையான பெண்களைவிட, கவர்ச்சியான பெண்கள் அரசியலில் முன்னேற பற்பல காரணங்கள். அவற்றையெல்லாம் நோண்டுவானேன்?

இந்தியாவில் ஆந்திராவில் சமீபத்தில் இரண்டு பெண் அரசியல்வாதிகளுக்கிடையே கிடுக்குப்பிடியாக சிங்கியிருக்கிறார் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு.



ஜெயப்பிரதா

இரு பெண்களும் எம்.பிகள் அதில் ஒருவர் ரேணுகா சௌத்ரி. இந்தியப் பெண் எம்.பிகளிலேயே அழகானவர் என்று பாராட்டப்பட்டவர். ஆனால் உண்மையில் இவர் ஒரு நெருப்பு. தன் திறமையாலும், துணிச்சலாலும் முன்னுக்கு வந்தவர். மற்றவர் நடிகை ஜெயப்பிரதா. இவரும் எம்.பி.தான். இவர் முன்னுக்குவரக் காரணமே கவர்ச்சிதான். எதில் அவருக்கு திறமை இருந்தாலும் அரசியலில் திறமை கிடையாது. மறைந்த என்.டி..ராமராவுடன் இருந்த நெருக்கம்தான் ஜெயப்பிரதா அரசியலுக்கு வரக் காரணமாக இருந்தது.

பின்னர் என்.டி.ராமராவ் சிவபார்வதியை மணம்முடித்ததால் ஜெயப்பிரதா கசப்படைந்தார். ராமராவின் மருமகன் சந்திராபாபு நாயுடுவின் அணியில் சேர்ந்தார். இப்போது நாயுடுவுடன் நெருக்கம் என்கிறார்கள்.



ரேணுகா

ஜெயப்பிரதாவுக்கு தன் கட்சியைச் சேர்ந்த சக எம்.பியும், சுகாதார அமைச்சருமான ரேணுகாவை பிடிப்பதில்லை. அவர் அமைச்சரானதும் சகிக்கவில்லை. அதனால் ரேணுகாவைப் பற்றி ஏதோ தாறுமாறாக ஜெயப்பிரதா சொல்ல, ரேணுகாவும் பதிலடி கொடுத்திருக்கிறார்.

இந்த சண்டையால் தெலுங்கு தேசக் கட்சித் தொண்டர்கள் கதிகலங்கிப்போய் நிற்கிறார்கள். ஜெயப்பிரதாவின் மறுபக்கம் பற்றி ரேணுகா தரப்பு புட்டுப்புட்டு வைக்கிறதாம். கட்சியின் மானமே கப்பல் ஏறுகிறது என்று தலையில் அடித்துக் கொள்கிறார்கள் தொண்டர்கள்.

"ஜெயப்பிரதாவுடன் எனக்கு பிரச்சனையே கிடையாது. நாங்கள் நல்ல நண்பிகள்." என்கிறார் ரேணுகா. ஆனால் மறைமுகமான மோதல் தொடர்கிறது.

ரேணுகா மீது ஜெயப்பிரதாவின் பொறாமைக்கு மற்றொரு காரணம் தாழ்வு மனப்பான்மையாம். ரோணுகாவுக்குத்தான் புதுடில்லியில் பலத்த புகழாரம். மாதுரி டிக்ஷித்தையும், மடோனாவையும் படம் வரைந்து ஜொள்ளுவிட்டுப் பிரபலமானவர் ஓவியர் ஹுசைன். அவர் முதன் முதலில் வரைந்தது ரேணுகாவைத்தானாம். ஜொள் கிழவரான ஹுசைன் ரேணுகாவுக்கு சூட்டியுள்ள பட்டப் பெயர்: 'தெலுங்கு தேச சின்னப் பறவை'.

## எடை கூடிய மிஸ் யுனிவர்ஸ்

உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டால் ஜாலியோ ஜாலி என்றெல்லாம் நினைக்கக் கூடாது. கடந்த ஆண்டு மிஸ் யூனிவர்ஸ் பட்டம் வாங்கிய அழகி படும்பாட்டை கேள்விப்பட்டால் அனுதாபப்படுவீர்கள். அய்யோ பாவம் என்பீர்கள்.



கடந்த ஆண்டு மிஸ் யூனிவர்ஸ் பட்டம் பெற்றவர் அலிஷியா மச்சாடோ. வயது 19. வெனிசுலா நாட்டைச் சேர்ந்தவர். 78 நாடுகளில் இருந்து வந்து அழகு காட்டிய ஒய்யாரிகள் மத்தியில் உலக அழகியாக அங்கீகாரம் பெற்றது அலிஷியா மட்டும்தான்.

உலக அழகிக்கு இடை, தொடை, உடை அழகு மட்டுமல்ல உடல் எடையும் முக்கியம். அலிஷியா உலக அழகியானபோது எடை 118 பவுண்டு.

உலக அழகிப் பட்டத்தை ஒரு வருடம் அனுபவிப்பதுடன், அதற்கான சலுகைகள் மற்றும் சம்பாத்தியங்களைப் பெறவேண்டுமானால் உடல் எடை அதிகமாகக் கூடாது. சந்தோசம் காரணமாக சதைபோட்டால்கூட முன்பிருந்ததை விட 5 பவுண்டுக்கு மேல் கொளுக்கக் கூடாது என்பது கண்டிப்பான நிபந்தனை.

அலிஷியாவின் வயிற்றுக்கு வஞ்சகம் பண்ண முடியவில்லை. நாவுக்கு தடைபோடவும் முடியவில்லை. ருசி தேடிய நாவுக்கு கண்டபடி ஒத்துழைத்ததில் கிடுகிடுவென்று 52 பவுண்டு எடை கூடிவிட்டார். 'மிஸ் யூனிவர்ஸ் என்ற விருதையே திருப்பி எடுத்து விடுவோம் ஜாக்கிரதை' என்று எச்சரித்தார்கள்.

பதறிப்போன அலிஷியா படாதபாடு பட்டு 25 பவுண்ட் எடையை குறைத்து விட்டார். இன்னமும் 25 பவுண்ட் குறைத்தாக வேண்டும். அப்படிக் குறைத்தால்தான் அடுத்து மிஸ் யூனிவர்ஸ் பட்டம் பெறும் அழகிக்கு சிக்கென்ற உடலுடன் வந்து அலிஷியா கீரீடம் சூட்டமுடியும்.

## டேட்டிங் கலாசாரம்

'டேட்டிங்' என்ற சொல் இப்போது பிரபலமாகிவருகிறது. ஆணோ, பெண்ணோ தங்களுக்கு பிடித்தமான ஒரு துணையுடன் ஜாலியாகச் சுற்றுவது 'டேட்டிங்' என்றழைக்கப்படுகிறது.

இளம் தலை முறையினர் மத்தியில் 'டேட்டிங்' நாகரீகம் பரவிவருவதையிட்டு பெற்றோர்கள் கவலைப்படத் தொடங்கியிருக்கிறார்கள். "'டேட்டிங்' என்றால் தப்பான காரியத்துக்கு செல்வதாக நினைக்கிறார்கள். அப்படி ஒன்றும் கிடையாது. நல்ல நட்புகளை கொச்சைப்படுத்தாதீர்கள்." என்று 'டேட்டிங்' பிரியர்கள் கோபமாக பதில் சொல்கிறார்கள்.

ஜப்பானில் பாடசாலை மாணவிகள் மத்தியில் 'டேட்டிங்' நாகரீகம் வேகமாகப் பரவிவருகிறது. இவர்கள் 'டேட்டிங்' செல்வது சக மாணவர்களுடன் அல்ல, 60 வயதைத் தாண்டிய முதியவர்களுடன்.

விஷயமறிந்து ஜப்பானிய பாடசாலை வட்டாரங்கள் அதிர்ச்சியில் இருக்கின்றன. 'டேங்டிங்' விபச்சாரத்துக்கு சமமாக மாறியிருக்கிறது என்கிறார்கள்.

ஜப்பானில் உள்ளூர் டெலிபோன் கிளப்புகள் உள்ளன. இந்த கிளப்புகளில் இளம் மாணவிகள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்கிறார்கள். பணக்கார ஜொள் கிழவர்களுக்கு துணை தேவைப்படும்போது தங்களிடம் பெயர் பதிவு செய்த மாணவிகளை கிளப்புகள் தொடர்புபடுத்தி விடுகின்றன. மாணவிகள் தமக்கு கிடைக்கும் வருமானத்தில் ஒரு கமிஷனை மட்டும் கிளப்புக்கு கொடுத்தால் போதுமாம்.

ஜப்பான் நகரங்களில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் பயங்கரமாக இருக்கிறது. பாடசாலை செல்லும் மாணவிகள் 3 பேரில் 2 பேர் இப்படி 'டேட்டிங்' போகிறார்களாம்.

"முதியவர்களை சந்தோஷப்படுத்துகிறோம். தப்பான காரியத்தில் ஈடுபடுவதில்லை. ஒரு சிலர் அப்படி நடக்கலாம். அதற்காக 'டேட்டிங்' செல்லும் எல்லோருமே கெட்டவர்கள் அல்ல' என்று ஜப்பான் மாணவிகள் விளக்கம் சொல்கிறார்கள்.



இதனை பாடசாலை நிர்வாகங்கள் நம்பியதாகத் தெரியவில்லை. 'பணம் பெற்றுக் கொண்டு 'டேட்டிங்' செல்வது விபச்சாரத்திற்கு சமம்' என்று பாடசாலைகள் முன்பாக விளம்பரப் பலகை வைத்திருக்கிறார்கள்.

## மணக்க எனக்கு மனமில்லை

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் காதல் பகிரங்கமான விஷயம்தான். மொசாம்பிக் முன்னாள் அதிபர் மறைந்த சமோராவின் மனைவிதான் கிரேகா. நெல்சனை காதலிக்கும் கிரேகாவுக்கு சமோராவையும் மறக்க முடியவில்லை.

"நெல்சனிடம் எனக்குள்ள பந்தம், சிநேகம் காதல் நிறைந்ததுதான். ஆனால் அவரை மணந்துகொள்வதாக உத்தேசம் கிடையாது. சமோராவின் மனைவி என்று அழைக்கப்படவே எனக்கு ஆசை" என்கிறார் 52வயதான கிரேகா. இதனால் நெல்சன்-கிரேகா திருமணம் பற்றி செய்திகளுக்கு முற்றுப்புள்ளி விழுந்துள்ளது.

சமீபத்தில் இங்கிலாந்து ராணியான எலிசபெத்தை சந்திக்கச் சென்ற மண்டேலாவுடன் கிரேகாவும் கூடவே சென்றிருந்தார்.

"இந்த முதிய காதலர்களின் போக்கே புதிராக இருக்கிறது" என்கிறார்கள். எப்படியோ இருவரும் நல்ல நட்புக்கு மதிப்புக்கொடுக்கத் தெரிந்தவர்கள் என்பது மட்டும் உண்மை.



படிப்பகம்

www.padippakam.com



## யுத்த முனையில் ஒரு கட்டம்

↑ மயிர்க்கூச்செறியும் படப்பிடிப்பு என்று நிச்சயமாக இதனைச் சொல்லலாம். இக் காட்சியை படம்பிடித்தவர் நிச்சயம் 'தில்' உள்ள ஆசாமிதான். இப் படத்தின் பின்னணிக் கதையை சுருக்கமாக சொல்லிவிடுகிறோம்.

பங்களாதேஷில் முஜிபுர் ரஹுமான் தலைமையில் பாகிஸ்தானுக்கு எதிராக போராடிய இயக்கம் அவாமிலீக். அதன் இராணுவப் பிரிவுக்கு இந்தியாதான் பயிற்சியும், ஆயுதமும் கொடுத்தது. 1971களில் பாகிஸ்தான் ஜெனரலும் அதிபருமான ஜாகியாகானுடன் அவாமிலீக் ஒரு பேச்சுவார்த்தை நடத்தியது. பேச்சில் பாகிஸ்தான் போக்குக்காட்டுகிறது. அதனால் தீர்வு வரப்போவதில்லை என்றதும் அவாமிலீக் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இழந்தது. பேச்சுவார்த்தை முறிந்தபோது பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் பாகிஸ்தான் துருப்புகளுடன் 'முக்திபாகினி' கெரில்லாக்கள் சண்டையிட்டனர்.

முத்திபாகினி நகர்புறக் கெரில்லாக்களுக்கும், பாகிஸ்தான் துருப்புகளுக்கும் இடையே மோதல் நடந்தபோது ஒரு கமராக்காரர் தன் உயிரைப் பணயமாக வைத்து எடுத்த புகைப்படம்தான் இது. கெரில்லாக்களின் தாக்குதலில் பின்வாங்கிய பாகிஸ்தான் படைவீரர் ஒருவரின் 'பூட்ஸ்'தான் வீதியில் கிடக்கிறது. சண்டையின் தீவிரத்தை விளக்கும் சின்னமாகிவிட்டது அந்த 'பூட்ஸ்'.

இந்தியாவின் பயிற்சியுடன்தான் 'முக்திவாகினி' கெரில்லாக்கள் போரிட்டனர். பின்னர் இந்தியாவே நேரடியாக தன் படையை அனுப்பி பங்களாதேஷ் பிரிவினைக்கு உதவியது. பாகிஸ்தான் பிரிவது இந்தியாவின் நலனுக்கு சாதகம் என்பதால்தான் இந்தியா உதவியது என்று சொல்லப்பட்டது.


## ரகம் புதிது

↓ சூரியனைக் கண்டால் தாமரையின் முகம் மலரும் என்பார்கள். இந்த ஸ்கூட்டரையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம்.

சூரிய சக்தியால் சுறுசுறுப்பாக சீறிச்செல்லும் ஸ்கூட்டர் இது. இத்தாலியிலுள்ள போல் சப்பல்ஸ் என்பவரால் பியாஜ்ஜியோ நிறுவனத்திற்காக இந்த ஸ்கூட்டர் தயாரிக்கப்பட்டுள்ளது.

. பின் சக்கரத்தின் மேல் அமைந்துள்ள சூரிய கண்ணாடித் தகடுகள் மூலமாக சூரிய ஒளி சேமிக்கப்பட்ட சக்தியாகப் பாவிக்கப்படுகிறது.

அல்மெய்ரா பாலைவனத்தில் கடந்த ஒரு வருடகாலமாக சோதனை ஓட்டம் நடத்திப் பார்த்துள்ளனர். ஒரு முறை சக்தியேற்றினால் 10 கிலோ மீட்டர்வரை தாக்குப்பிடித்து ஓட்டம் காட்டுகிறதாம். மணிக்கு 30 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும்.



## தகவல் பெட்டி

↓ 'தென்னையை வைத்தா இளநீரு, பிள்ளையைப் பெத்தா கண்ணீரு' என்றொரு பாடல் உண்டு. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.துரைராஜாவுக்கு தென்னையை வளர்த்தும்கூட கண்ணீர்தான் வந்திருக்கிறது. அதாகப்பட்டது ஆனந்தக் கண்ணீர்.

படத்திலே பாருங்கள், தென்னை மரம் ஆச்சரியமாக இல்லையா? எந்தத் தென்னையும் வானை முத்தமிடுவதுபோல நெடு நெடுவென்று வளரும், அல்லது வளைந்தும் நெளிந்தும் வளரும். ஆனால் மரம் ஒன்றுதான். இந்த தென்னை மட்டும் கிளைகள் விட்டு கலக்கியிருக்கிறது. மொத்தம் நான்கு கிளைகள் விட்டுள்ளது. நான்கு கிளைகளுமே வஞ்சகமில்லாமல் காய்க்கின்றன. நட்டது ஒரு மரம், நான்கு மரங்களின் பயன் கிடைக்கிறது. ஆனந்தக் கண்ணீர் வராமல் போகுமா?!

### தென்னையை வைத்தால் கண்ணீரு...



## கொத்தாக மூன்று



↑ சிலாபம் சேருசலையைச் சேர்ந்த 'முரசு' வாசகி எஸ்.ஏ.சிறிமதி கொள்ளை கொள்ளையான சந்தோசத்தில் இருக்கிறார். ஒரே பிரசவத்தில் மூன்று பிள்ளைகள். கொடுக்கிற தெய்வம் கொத்தாக மூன்று முத்துக்களை கொடுத்திருக்கிறது. இரண்டு பெண் குழந்தைகள். ஒன்று ஆண் குழந்தை. ஏற்கனவே சிறிமதிக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர். இப்போது ஏழு பேர். குடும்பக் கட்டுப்பாட்டு பிரியர்கள் மன்னிப்பார்களாக. வாசகிக்கு வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துக்கள்.



## ஒரே ஒரு பாத்திரத்தில்...

← மட்டக்களப்பு இருதயபுரம் மேற்கில் இருந்து 'முரசு' வாசகர் பி.அருட்செல்வன் 'கிளிக்' செய்து அனுப்பிவைத்த புகைப்படம் இது. 'தகவல் பெட்டி'யில் அதிசயப் படங்களையும், வித்தியாச புகைப்படங்களையும் பார்த்துவிட்டு கமராவைத் தூக்கியிருக்கிறார். திருமண வீடொன்றில் ஒரு பாத்திரத்துக்குள் இரு சிறுவர்களை கச்சிதமாக உட்கார வைத்து 'சூப்பர் கிளிக்'. என்ன வித்தியாசமாக இருக்கிறதல்லவா. 'முரசு' குடும்பத்தைச் சேர்ந்தவர் எடுத்த புகைப்படம் என்பதால் நாம் தட்டிக்கொடுக்க வேண்டும்தானே.


## செக்கும் – சுதந்திரமும்

↓ இந்தியா தனது 50வது சுதந்திரப் பொன்விழாவை கோலாகலமாகக் கொண்டாடி முடித்திருக்கிறது. இந்திய சுதந்திரம் என்றதும் காந்தியால் பெற்றுக்கொடுக்கப்பட்ட சுதந்திரம் என்று சொல்வது வாய்ப்பாடு மாதிரியாகிவிட்டது. இது தப்பான வாய்ப்பாடு. காந்திக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. காந்திக்கு ஈடான பெருமை சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்களுக்கும் இருக்கிறது. இந்திய சுதந்திரத்துக்காக மக்களை தட்டியெழுப்பிய பலரை இன்றைய இந்திய அரசியல்வாதிகள் மிக வசதியாக மறந்துவிட்டார்கள். காந்தித் தாத்தா, நேரு மாமா பெயர்களைவிட்டால் வேறு யார் பெயரையும் சொல்கிறார்களே இல்லை.

அப்படி மறக்கப்பட்டவர்களில் ஒருவர் வ.உ.சி என்றழைக்கப்படும் சிதம்பரனார். 'கப்பலோட்டிய தமிழன்' என்று சிவாஜி நடித்த புண்ணியத்தால் கொஞ்சம் ஞாபகம் இருக்கிறது. பெரும் செல்வந்தராக இருந்து தன் சொத்துக்களை இழந்து சுதந்திரத்துக்காக போராடிய தீரர். வெள்ளையனுக்கு எதிராக சொந்தமாக கப்பல் கம்பனி தொடங்கியவர். சிறையிலே தள்ளிச் செக்கிழுக்க வைத்தார்கள்.

சிதம்பரனார் இழுத்த செக்கைத்தான் படத்திலே காண்கிறீர்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் அந்தச் செக்கை சிறையிலிருந்து எடுத்து சென்னையில் ஓரிடத்தில் நினைவுச் சின்னமாக வைத்தனர். அத்தோடு சரி. இப்போது கவனிப்பார் இல்லாமல், தூசு படிந்த நிலையில் கம்பி வேலிகளுக்குள் கிடக்கும் காட்சிதான் இது.

50வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னையில் செங்கோட்டையை அமைத்தும், பிரமாண்டமான இந்திய தேசியக் கொடி தயாரித்தும் அசத்திய தமிழக முதல்வர் கருணாநிதிகூட செக்கிழுத்த செம்மலையும், அந்தச் செக்கையும் மறந்துவிட்டதுதான் வேதனை. சுதந்திரத் தினத்தன்றும் தூசுகூட தட்டப்படாமல் பரிதாபமாகக் கிடந்ததாம். மறக்கவேண்டியதை மறக்கமாட்டார்கள். மறக்கக் கூடாததை மறந்துவிடுகிறார்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## மினி சினி

* 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்திற்குப் பின்னர் பி.வாசு இயக்கத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக தேவயாணி நடிக்கவுள்ளார். பிரபு-தேவயாணி முதல் முறையாக இணைந்து நடிக்கும் படம் இது.

* விஜய் முதலில் நடித்த படம் எது என்று கேட்டால் 'நாளைய தீர்ப்பு' என்று பலரும் சொல்வார்கள். ஆனால் இதற்கு முன்பே விஜய் 'சட்டம் ஒரு இருட்டறை', 'வசந்தராகம்' ஆகிய படங்களில் குட்டி விஜயகாந்த்தாக நடித்துள்ளார்.

* சரத்பாபு-சுஹாசினி நடித்த கன்னடப்படமான 'அமிர்த வர்ஷினி' தமிழில் 'உயிரினும் மேலாக' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. ஒளிப்பதிவாளர் தினேஷ்பாபு இயக்கிய இந்தப்படத்திற்கு 'உயிரினும் மேலாக' என்ற பெயரை வைத்தவர் மணிரத்னம்.

* தமிழில் படவாய்ப்புக்களின்றி வேற்று மொழிப்படங்களில் நடித்து வரும் கஸ்தூரியும், ராஜஸ்ரீயும் மலையாளப் படமொன்றில் இணைந்து நடிக்கிறார்கள். 'மங்கல்யபல்லக்கு' என்ற இப்படத்தை புதிய இயக்குநரான வினோத் ரோஷன் என்பவர் இயக்குகிறார்.

* 'ஆக்ஷன் டைகர்' என்ற கன்னடப் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார் ஆனந்தராஜ். தாதா வேடத்தில் நடிக்கும் ஆனந்தராஜிற்கு இப்படத்தில் இரண்டு ஜோடிகள்.

* 'பன்னீர் புஷ்பங்கள்' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சாந்தி கிருஷ்ணா. மலையாளப்படங்களில் நடித்து வரும் இவர் நீண்ட இடைவெளிக்குப் பின் தமிழில் 'நேருக்கு நேர்' படத்தில் நடிக்கிறார்.

* ரிச்சர்ட் அட்டன்பரோ வின் 'காந்தி' திரைப்படம் தமிழ் உட்பட முக்கியமான இந்திய மொழிகளில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. காந்தியாக நடித்த பென் கிங்ஸ்லிக்கு தமிழில் பின்னணிக்குரல் கொடுத்திருப்பவர் யார் தெரியுமா? இயக்குநர் வசந்த்.

* சிவகுமாரின் மகன் சூர்யா நடிக்க, ஹென்றி தயாரிக்கும் படம் 'வாண வேடிக்கை'. இந்தப் பெயர் மம்முட்டி-தேவயாணி நடிக்க ஹென்றி தயாரிக்கும் 'மறுமலர்ச்சி' படத்திற்கு முதலில் வைக்கப் பட்டுப் பின்னர் மாற்றப்பட்டது.

* கேயார் இயக்கத்தில் 'காதல் ரோஜாவே' படத்தில் அறிமுகமாகி யிருக்கும் விஷ்ணுவுக்கு மலையாளப்படம் ஒன்றில் நடிக்கும் வாய்ப்பு வந்துள்ளது. இந்தப் படத்தில் (பேபி) ஷாலினி கதா நாயகியாக நடிக்கிறார்.

* பல வருடங்களாக இந்தித் திரையுலகில் நம்பர் வன் வில்லனாக இருந்து வரும் அம்ரிஷ்புரி, சம்பளம் வாங்குவதிலும் நம்பர் வன் வில்லனாக இருக்கிறார். ஒரு படத்திற்கு இவர் வாங்கும் சம்பளம் என்ன தெரியுமா? இந்திய மதிப்பில் ஒரு கோடி ரூபாய்.

## அசத்தலான பகைவன்

சத்யராஜ்-அஜித்குமார் இணைந்து மிரட்டும் படம் 'பகைவன்'. கதை என்று தேடினால் ஒன்றும் தேறாது. கேலியும், குத்தலும், அடாவடியான வில்லத்தனமும் கலந்த பழைய சத்யராஜ் மறுபடி ஆஜராகியிருக்கிறார். 'அமைதிப் படை'க்கு பின்னர் சத்யராஜ் வில்லனாக அசத்தியுள்ள படம் இதுதான். அதாகப்பட்டது வில்லத்தனமான ஹீரோ. ஆரம்பம் முதல் முடிவுவரை சத்யராஜ் அசத்தல் ராஜ்தான்.

சிகரெட்டை ஸ்டைலாக பற்றவைத்தபடி அடாவடியாக நடந்து செல்வதும், நக்கலான வசனங்களின் உச்சரிப்பும் சத்யராஜை விட்டால் வேறு ஆளே இதற்கு கிடையாது என்று சொல்லவைக்கின்றன.

அஜித்குமார் முரட்டுத்தனமாக வருகிறார்.

அவரது காதலியாக வரும் அஞ்சலாவை கவர்ச்சியில் தே... தெடுத்திருக்கிறார்கள். ரஞ்சிதா... கவர்ச்சிக்கும் வாய்ப்பில்லை. நடி... கும் வாய்ப்பில்லை. இயக்குநர் கே... ரவிக்குமார் அமைச்சராக வந்து ... கிளப்புகிறார். அவரும் சத்யரா... வரும் காட்சிகள் பிரமாதம். வீடி... வில் சின்னத்திரையில் பார்... போது சில காட்சிகளில் வச... மட்டும் கேட்கிறது. ஆட்களை தெ... வில்லை. பாதி சத்யராஜ்தான் ... கிறார். அதுதான் ஒரு அசெ... யம். நல்ல கசட் கிடைத்... பொழுதுபோக்கு உ... வாதத்துடன் பா... லாம். பகை... ஏமாற்ற... டா...




## இந்தியில் ரஜினி

தமிழில் ரஜினியின் அடுத்த படம் யாருக்கு' என்பது வழக்கம்போல புதிராக நீடிக்கிறது. பல்வேறு ஊகங்கள் வந்து விட்டன. ரஜினிமட்டும் மூச்! இதற்கிடையே இந்தியில் நடிக்கப்போகிறார் ரஜினி.

'நாட்டாமை' படத்தின் தெலுங்குப் பதிப்பில் ரஜினி கௌரவ வேடத்தில் நடித்திருந்தார். தமிழில் விஜயகுமார் நடித்த பாத்திரத்தை தெலுங்கில் ரஜினி நடித்தார் அல்லவா. இப்போது 'நாட்டாமை' இந்தியில் தயாராகிறது. தெலுங்கில் நடித்த அதே பாத்திரத்தில் இந்தியிலும் நடிக்கிறார் ரஜினி.

படப்பிடிப்பு இந்த வாரம் தொடங்குகிறது. தமிழ்த் திரையுலக மோதல்களில் அதிகம் பட்டுக்கொள்ளாமல் இருக்கவே விரும்புகிறார் ரஜினி. அதனால் நிலமை சீராகும்வரை இந்தியில் நடித்துவிட்டு வரப்போகிறாராம்.

## கப்டன் விஜயகாந்த்

தமிழ்ப்படவுலகப் பிரச்சனையில் இயக்குநர்கள் மற்றும் தமிழ்ப் படைப்பாளிகள் பக்கம் நிற்பவர்களுக்கு கப்டன் யார் தெரியுமா? விஜயகாந்த்தான். கமல், சத்யராஜ், பிரபு, கார்த்திக் என்று பிரபல நடிகர்கள் மறுபக்கம் நிற்கிறார்கள். அவர்களுக்கு கமல்தான் கப்டன்.

விஜயகாந்த்துடன் தோள்கொடுத்து நிற்கிறார் பிரகாஷ்ராஜ். இப்போது சரத்குமாரும் விஜயகாந்த் பக்கம் வந்துவிட்டார். நக்மா, ரம்பா, ரேவதி, ரோஜா, ரஞ்சிதா, ஊர்வசி என்று எல்லோருமே விஜயகாந்த் பக்கம்தான். இதனால் கமலுக்கே அதிர்ச்சிதானாம். எங்கள் கப்டன் விஜயகாந்த்தான் என்று புகழ்கிறார் ரேவதி. ராம்கி, கரண் இருவரும் கமல் பக்கம் போய்விட்டு பின்னர் பல்டி அடித்து இயக்குநர்கள் பக்கம் சாய்ந்துவிட்டதுதான் மற்றொரு வேடிக்கை.



## தேவயாணியின் தத்துவம்

தேவயாணியிடம் போய் நீங்கள் நம்பர்வன் இடத்தைப் பிடிப்பீர்களா? என்றால் பொரிந்து தள்ளுகிறார். எப்படித் தெரியுமா? இப்படித்தான்: "நம்பர் வன் என்று நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்? அரையும் குறையுமான ஆடை அணிந்து மரத்தைச் சுற்றி 'டூயட்' பாடுவதையா? நான்கு பாட்டுக்களிலும் ஏதோ பேருக்கு நான்கு காட்சிகளிலும் வந்து போவதைத்தான் நீங்கள் நம்பர் வன் என்றால் எனக்கு அந்தப் பதவி தேவை இல்லை. ஆரம்பத்தில் நான் கொஞ்சம் கவர்ச்சியாக வந்தாலும் எனக்கென்று நல்ல இடம் கிடைத்துவிட்டது.

இங்கே ரேவதி, சுஹாசினி, ஊர்வசி போன்றவர்களெல்லாம் கவர்ச்சி காட்டிக்கொண்டா நீடித்தார்கள். கவர்ச்சியெல்லாம் கொஞ்சக்காலம்தான் எடுபடும்." என்றெல்லாம் அடித்துப் பேசுகிறார் தேவயாணி.



விசித்ரா-சஞ்சய்
படம் புன்னகைப் பக்கள்

## காதோடு சொல்லுகிறோம்

பூவின் பெயர் கொண்ட இரண்டெழுத்து நடிகையும் மணியான இயக்குநரும் மாதத்தில் ஒரு நாள் தனிமையில் இனிமை காண ஊட்டிக்கு பறந்துவிடுவார்களாம். திரும்பி வந்ததும் புத்துணர்ச்சியோடு மணியான இயக்குநர் படப்பிடிப்புக்களை நடத்துவாராம். எல்லாம் நடிகையின் உபசரிப்பின் மகத்துவம்தானாம்.

மூன்றெழுத்து 'மா' நடிகை ஏசியில்தான் தூங்குவார். இல்லாவிட்டால் தூக்கமே வராதாம். அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் ஏசி வேலை செய்வதில்லையாம். அடிக்கடி தடங்கல். காதலரான குமாரருக்கு செய்தி எட்டியது. உடனடியாக ஒரு ஜெனரேட்டர் வாங்கிக் கொடுத்திருக்கிறாராம்.

அழகி நடிகையும் அந்த தெலுங்கு நடிகரின்மீது அன்பு வைத்துவிட்டாராம். அவர்தான் ரட்சகர் என்கிறாராம் அழகி. அப்படி என்னதான் மந்திரம் போடுகிறாரோ, அல்லது அஸ்திரம் எய்கிறாரோ, அவர் வலையில் விழுந்த நடிகைகளின் பட்டியல் பெரிதாகிக்கொண்டே போகிறது. அவரது துணைவியான முன்னாள் நடிகைதான் இரகசியமாக மூக்கைச் சிந்திக்கொண்டிருக்கிறார்.

விசித்திரமான கவர்ச்சி நடிகைக்கு வெளிநாட்டு கலைச்சேவை அலுத்துவிட்டதாம். வெளிநாட்டுப் பயணங்களில் ஏற்பட்ட சில ஏமாற்றங்களும் அதற்கு காரணம் என்கிறார்கள். அதனால் மறுபடி நடிப்பில் கவனம் செலுத்த தொடங்கியுள்ளாராம்.

## பிரபுவின் 'இனியவளே'

'பாஞ்சாலங்குறிச்சி' படத்தை இயக்கிய சீமான் மீண்டும் பிரபுவை வைத்து இயக்கப்போகும் படம் 'இனியவளே'. பிரபுவின் ஜோடியாக நடிக்கப்போகிறவர் மஞ்சுவாரியார். இவர் மலையாளப் படவுலகில் முன்னணி நடிகை. 'இந்தியன்' படத்தில் நடித்த மலையாள நடிகரான நெடுமுடி வேணுவும் இதில் நடிக்கிறார்.

மற்றொரு முக்கிய செய்தி, நீண்ட இடைவெளியின் பின்னர் கௌதமி நடிக்கும் தமிழ்ப் படமும் இதுதான். பிரபுவின் மற்றொரு ஜோடி கௌதமிதான். முத்தக் காட்சி உண்டா தெரியவில்லை.

## ஆஸ்கார் கிடைக்குமா?

"'ஆஸ்கார்' விருது என்பது அமெரிக்கப் படங்க... மட்டும்தான் கிடைக்கும். அமெரிக்கத்தரம் என்ற ஒ... அவர்களின் அளவுகோல். அதனால் 'ஆஸ்கா... கனவெல்லாம் எனக்குக் கிடையவே கிடையாது. வெளியாகும் போது ஏதோ ஆஸ்காரை குறிவைச்... செய்திகள் போடுகிறார்கள். ஆனால் எனக்கு அ... கிடையாது." இப்படிச் சொல்லியிருப்பவர் யார் என்கி...

## மும்மதம் சம்மதம்

நாகேசுக்கு... பையன்தான் ... மருமகள் முஸ்லிம். இன்னொரு மருமகள் கிறிஸ்தவ... சேர்ந்தவர். மத ஒற்றுமைக்கு முன்னுதாரணமான கு...


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 17 சித்ரவாசு

# பர்தா போட்டு பயணம் செய்த நடிகை தொட்டு நடிக்க மறுத்த நடிகை

அமெரிக்காவில் இருந்து மீண்டும் திரும்பியுள்ள அம்பி நடிகை சினிமாவில் பிஸியாக இருந்தபோது அவரிடம் விடலைப் வத்தில் (16 வயது) ஒரு பையன் டச்-அப் உதவியாளனாக இருந்தான். ஒரு முறை பாலக்காடு அருகில் மலையாளப் படத்தின் ப்பிடிப்பு. பலரிடம் ருசி கண்ட அந்த நடிகைக்கு அந்தப் பையனையும் விட்டுவைக்கத் தோன்றவில்லை. விளைவு அவன், கையின் படுக்கையறையில் பலியானான்.

அரசியல் தலைவர்களையும் கவர்ந்தார் நடிகை. இன்றைக்கு இரு பிரிவாக உள்ள எதிர்க்கட்சி ஒன்றின் முன்னணித் லைவர்களில் ஒருவரையும் சில வசதிகளுக்காக கணக்குப் பண்ணிக் கவர்ந்தார். அந்த தலைவருக்கு ஏற்கனவே இரண்டு னைவிகள். சற்றே பத்து வருடங்களுக்கு பின்னோக்கிப் போனால் அவர் ஆளும் கட்சி வரிசையில் அமைச்சராக இருந்தவர்.

அந்தச் சமயத்தில் நடிகை ஸ்ருடியோ ஒன்றைக் கட்டினார். ஸ்ருடியோவுக்கு அருகில் 'பா' இயக்குநர் ஒருவருக்கு மாந்தோப்பு று இருந்தது. அதிலிருந்து ஒரு பகுதியை சாமர்த்தியமாக வாங்கிக் கொண்டார் நடிகை. இன்னொரு பகுதி அரசு வசத்தில் ந்தது. அதைப் பெறுவதற்காக மேற்குறிப்பிட்ட ஜொள்ளர் அமைச்சரை அணுகினார் நடிகையின் தாய்க்குலம்.

அதற்கு பிரதியுபகாரமாக தனது மூத்த மகளை மட்டுமன்றி, நடிகையாக உள்ள இளைய மகளையும் அமைச்சர் பயன்படுத்திக் ாள்ள வழிவகுத்துக் கொடுத்தார்.

அக்கா நடிகை அலைஞ்சான் கேஸ். தங்கையோ எளிதில் எவருக்கும் வசப்படாதவர்.

எத்தனையோ ஹீரோக்கள் எத்தனையோ வித்தை செய்து காட்டியும் அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் ஒதுங்கிப் போனவர். வருக்கு ஏற்பட்டது நிர்ப்பந்தம்.

அமைச்சரின் வாடகை மனைவியாகச் சென்றால் ஸ்ருடியோவுக்கு அரசு நிலம் கிடைக்கும் என்று அம்மா முனைப்பாகச் ான்னதால் மறுக்க முடியவில்லை. ஆனால் அமைச்சருடன் ஏற்பட்ட முதல் சந்திப்பிலேயே அவர் அமைச்சர் வசமானார். தனது தல் பட நாயகனிடம் காதல் வசப்பட்ட பின்னர் அவர் நெருக்கமாக இருந்தது அந்த அமைச்சருடன்தான். தங்கையின் நெருக்கம் ண்டு அக்காவே அதிர்ந்து போனார்.

## ரயில் பயணம்

ஸ்ருடியோவுக்கு அரசு இடம் கிடைத்தது. அமைச்சருக்கு இன்னொரு உபகாரமாக ஸ்ருடியோவிலேயே அவருக்கென்று த்தியோகமாக சகல வசதிகளுடன் தனியறை கட்டப்பட்டது. ஸ்ருடியோ திறப்பு விழாவுக்கு வந்த அமைச்சரை வரவேற்ற அக்கா, கை இருவருமே அவரை அவருக்கென்று உள்ள அறைக்குள் அழைத்துச் சென்று காட்டினர். அமைச்சர் அகமகிழ்ந்து போனார்.

இதற்குப் பின் அமைச்சர் ஒருநாள் பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயிலில் மதுரை செல்லவிருந்தார். தன்னோடு மதுரை வரமுடியுமா ன்று தங்கை நடிகையைக் கேட்டபோது, அதிஷ்டவசமாக அவருக்கு படப்பிடிப்பு இரத்தாகி இருந்தது. அதனால் டிகை சரியென்று சொன்னதும், அமைச்சர் அவருக்கு முதல் வகுப்பு கூபேயை ரிசர்வ் செய்தார்.

ரயில் புறப்படவிருந்த சமயத்தில் நடிகை அவசரம் அவசரமாக வந்து கூபேயில் ஏறிக்கொண்டார். ஸ்லிம் பெண்போல் பர்தா அணிந்த கோலத்திலேயே நடிகை வந்திருந்தார். அப்படியே மைச்சரோடு தனியான கூபேயில் மதுரை சென்றார் நடிகை.

# சினிவிசிட்

## கமல் கொடுத்த அறை

'பூவிழி வாசலிலே' படத்தில் சத்யராஜ் ஜோடியாக நடித்த நடிகை கார்த்திகா. நடிக்க வந்ததில் இருந்தே கதாநாயக நடிகரையோ, அப்பா நடிகரையோ எந்த நடிகராக இருந்தாலும் தொட்டு நடிக்க மாட்டேன். தொட்டு நடித்தாலும் கட்டிப் பிடித்து நடிக்க மாட்டேன் என்றெல்லாம் கண்டிஷன் போட்டார்.

கார்த்திகா 'நாயகன்' படத்தில் கமலின் மகளாக, நாசர் ஜோடியாக நடித்தார். படப்பிடிப்பில் கமல் தன் வாரிசுகளான நிழல்கள் ரவி, கார்த்திகா இருவரையும் கட்டிப்பிடித்து அரவணைப்பதுபோல் புகைப்படத்திற்கு போஸ் கொடுக்க வேண்டும். கமல் இருவரையும் அணைத்தபோது கார்த்திகா கமலின் கையை எடுத்துவிட்டிருக்கிறார். கமல் அதை சீரியசாக எடுத்துக் கொள்ளாமல் மீண்டும் ரெடி சொல்லி கட்டிப்பிடித்திருக்கிறார்.

இந்த முறை கார்த்திகா கமலின் கையை தட்டிவிட்டதோடு, கட்டிப்பிடிப்பதுபோல் நான் நடிக்க மாட்டேன் என்று மறுத்துவிட கமல் கோபத்துடன் செட்டைவிட்டு வெளியே வந்து "இவர்களெல்லாம் ஏன் நடிக்க வரவேண்டும்?" என்று கடுமையாகத் திட்டியிருக்கிறார்.

இன்னொரு காட்சியில் கார்த்திகா ஜனகராஜை கன்னத்தில் அறைய, கமல் கோபத்துடன் கார்த்திகாவை அறைய வேண்டும். இந்தக் காட்சியில் கமல் கார்த்திகாவின் கன்னத்தில் நிஜமாகவே விளாசிவிட, அடிதாங்க முடியாமல் கன்னத்தை தடவியபடி கார்த்திகா அழுதுகொண்டே இருந்தார்.

இதற்கு அடுத்த ஓரிரு மாதங்களில் கார்த்திகா திருமணம் செய்துகொண்டு சினிமாவைவிட்டே ஒதுங்கிப்போனார்.

## பாலுமகேந்திரா இயக்கத்தில் பிரபு

தமிழ்த் திரையுலக மோதலில் பாலுமகேந்திரா ஒரு பக்கம் நிற்கிறார். அவருக்கும் இயக்குநர்களுக்கும் எதிரான 'பெப்ஸி' அணியில் பிரபு நிற்கிறார். அப்படியிருந்தும் பிரபு நடிக்கும் படமொன்றை இயக்கப்போகிறார் பாலுமகேந்திரா. படத்தின் பெயர்: 'வாராயோ வெண்ணிலாவே'. கதை, திரைக்கதை, வசனமும் பாலு மகேந்திராதான். ஒளிப்பதிவு மற்றும் எடிட்டிங்கும் அவரே.

ஆண் பெண் நட்பை வித்தியாசமான முறையில் சொல்லப் போகிறார். நகைச்சுவை கலந்த படமாம். இசை: இளையராஜா. கதாநாயகி யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை.



முரளி-சுவாதி
படம்: கண்டக்டர் மாப்ளே

## சத்யராஜின் லொள்ளு

லொள்ளு பிடித்த கேள்விகளுக்கு சத்யராஜ் சொன்ன லொள்ளுமிகு பதில்களைப் பாருங்கள்.

கே: விக் கண்டு பிடிக்காமல் இருந்திருந்தால்?
ச: நாமெல்லாம் ஊர்ல மாடு மேய்ச்சுக்கிட்டு இருந்திருக்க வேண்டியதுதான்.

கே: 'அல்வா' அருஞ்சொற்பொருள் கூறுங்கள்?
ச: கொடுப்பவருக்கு இனிக்கும். கொடுக்கப்படுபவருக்கு கசக்கும்.

கே: ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் தெய்வம் இருப்பதை ஒப்புக்கொள்வீர்களா?
ச: 'சான்ஸே' இல்லை!

கே: கன்னித்தீவு மாதிரி கன்னியில்லாத தீவுக்கு உங்களைக் கடத்தினால்?
ச: நான்விடும் கண்ணீரில் அந்தத் தீவு மூழ்கி, நானும் மூழ்கிவிடுவேன்.

கே: செவ்வாயில் குடியிருக்க அழைத்தால் போவீர்களா?
ச: 'செவ்' வாயில் குடியிருக்க போவேன். (கவிதை... கவிதை)

கே: வழுக்கைத் தலையர்களை பெண்கள் அதிகம் நேசிப்பார்களாமே?
ச: அப்படியா..? இந்த ரகசியத்தை சொன்னதற்கு நன்றி. இனிமேல் முயற்சிப்போம்.

கே: ஒரே நேரத்தில் வெள்ளத்தில் நக்மாவும் கொல்லங்குடி கருப்பாயியும் மாட்டிக்கொண்டால் நீங்கள் யாரைக் காப்பாற்றுவீர்கள்?
ச: கொல்லங்குடி கருப்பாயியைத்தான்! ஏன்னா நக்மாவுக்கு நீச்சல் தெரியும்னு எனக்குத் தெரியுமே!

## மும்மொழி நடிகை

போட்டியாக சிம்ரான் வந்தும்கூட ரம்பாவின் காட்டில் மழை ஓயவில்லை. மும்மொழிகளிலும் புகுந்து விளையாடுகிறார். தமிழில் சரத்குமார், பிரபுதேவா ஆகியோருடன் தலா ஒரு படம், இந்தியில் சல்மான்கான், அனில் கபூர் ஆகியோருடன் தலா ஒரு படம், தெலுங்கில் வெங்கடேஷ், சிரஞ்சீவியுடன் தலா ஒரு படம் என்று ஓடி ஓடி நடித்துக்கொண்டிருக்கிறார்.

அப்பாஸ் ரசிகைகளுக்கு மட்டும் ரம்பாவின்மீது என்ன எரிச்சலோ தெரியவில்லை. வி.ஐ.பி. படத்தில் அப்பாசுக்கு அக்காமாதிரி தெரிகிறார் ரம்பா என்று சொல்கிறார்களாம்.



தேவயாணி




ரோஜா
படம்: அரசியல்

## வந்தார் கணவர்

நடிகை ராதிகாவின் அமெரிக்கக் கணவர் சொந்த நாட்டுக்கு பறந்துவிட்டார் என்ற தகவல் ஒன்று கசிந்திருந்தது. சமீபத்தில் தன் கணவரோடு கோவில்களுக்கு சென்று வழிபட்டாராம் ராதிகா. ஊடலின்பின் கூடலா என்று தெரியவில்லை. எப்படியோ தம்பதி சந்தோசமாக இருந்தால் சரிதான். தமிழ் திரையுலக விவகாரங்களிலும் இம்முறை ராதிகாவின் நடமாட்டத்தை காணவில்லை.

## "அப்பாஸ் நல்ல கலர்"

'பூவே உனக்காக', 'லவ்டுடே', 'ஒன்ஸ்மோர்' என்று தொடராக வெற்றிப்படங்கள். ஆனாலும் அடக்கமாகவே பேசுகிறார் விஜய்.

"பல வெற்றிப் படங்களில் வெளுத்துக் கட்டியும் உங்களைவிட அப்பாசுக்குத்தானே ரசிகைகள் அதிகம் இருக்கிறார்கள்?" என்று விஜயிடம் கேட்டார் ஒரு நிருபர்.

விஜய் கோபித்திருப்பார் என்றா நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. "ஆமாம், அப்பாஸ் நல்ல கலராக இருக்கிறார். மொழு மொழுவென்று கலராக இருந்தால் இளம் பெண்களுக்கு ஒரு இதுதான். அப்பாசுக்கு என்னைவிட ரசிகைகள் அதிகம் இருப்பதால் எனக்கொன்றும் பொறாமை கிடையாது. சக நடிகர்தானே. இன்னும் சொல்லப்போனால் அப்பாசுடன் இணைந்து நடிக்கவும் நான் தயார்." என்கிறார் விஜய்.

முகப்பில்
அஞ்சு அரவிந்த்
படம்: ஆசைத் தம்பி
விஜய்

...தான் பற்றிய படங்கள் ...டுப்பதுபோல ஆசையெல்லாம் ...? கமலஹாசன்தான்.

...ன்று பையன்கள். முத்த ...ந்தாபு. நாகேசின் ஒரு அடுத்தவர் பிராமண வகுப்பைச் ...ம்.


படிப்பகம்

www.padippakam.com

# உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள்!



ஒரு வீட்டிலுள்ள குழந்தை அந்த வீட்டின் 'அதி உயர்ந்த அந்தஸ்தில் இருப்பது தானே!' என்று கருதுகிறது. எவருக்குமில்லாத தனி மகத்துவம் தனக்கே இருப்பதாக எண்ணுகிறது. தான் நினைத்தபடியே எல்லாம் நடக்க வேண்டும் என்று நினைக்கிறது.

தான் அழைத்தால் அம்மா தன் அருகில் வந்து நின்றாக வேண்டும்; அப்பா தான் விரும்பும் பொருளை தன் முன்னே அதே கணத்தில் கொண்டு வந்து வைத்துவிட வேண்டும். அதேபோல் அவ்வீட்டிலுள்ள அனைவருமே தனக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று வாதாடுகிறது. தனது எண்ணத்துக்கு மாறாக எது நடந்தாலும் அடம்பிடித்து அழ ஆரம்பித்து விடுகிறது.

இத்தகைய பிடிவாத புத்தி ஏற்படக் காரணம் என்ன?

குழந்தைகள் மீது அன்பு செலுத்தாதவர் எவருமே இல்லை. பார்ப்போரெல்லாம் குழந்தைகளை வாரி எடுத்து அணைத்து முத்தமாரி பொழிகிறார்கள்.

வீட்டுக்கு வருவோரெல்லாம் மிட்டாய் வகைகள், விளையாட்டுச் சாமான்கள், உடைகள் போன்றவற்றைக் கொண்டு வந்து அக்குழந்தைகளிடமே கொடுக்கின்றனர். இதனால் வீட்டிலுள்ள ஏனையோரைவிட தானே பிரதானமானவன் என்ற எண்ணம் அதன் அடிமனத்தில் உறைந்துவிடுகிறது.

ஓரளவு கர்வ மனப்பான்மையும் ஏற்படுகிறது.

இத்தகைய மனப்பான்மை குழந்தைகளிடம் ஏற்படுவது இயல்பு. காலக்கிரமத்தில் இது மறைந்துவிடும். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் பத்து வயதை எய்தும் வரைகூட இக்குணம் இவர்களிடம் குடி கொண்டிருக்கும். குறிப்பிட்ட இக் குழந்தைக்கு தம்பியோ, தங்கையோ இல்லாமல் போகும் பட்சத்திலேயே இத்தன்மை நீடிக்கும், கீழ்ச்சகோதரங்கள் பிறந்துவிட்டால், அவர்கள் மீது அனைவரின் கவனமும் திரும்பிவிடும், இதனால் பொறாமை உணர்வு தலைகாட்ட ஆரம்பித்துவிடும் என்பது வேறு விடயம்.

பிள்ளைகள் எட்டு வயதைக் கடந்ததும் அவர்களுடைய தேவைகளை உளவள ரீதியாக ஆராய்ந்து அறிந்து அதன்படி பூர்த்தி செய்வது பெற்றாரின் கடமை.

முக்கியமாக அவர்கள் பல தரப்பட்ட விளையாட்டுகளிலும் கவனம் செலுத்த ஆரம்பிப்பார்கள். ஆண்கள் இப்போதெல்லாம் கிரிக்கெட் விளையாட்டால் பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர். அவ்வாறானால் அவர்கள் அவர்களுக்கு ஈடான சமமான நிலையிலுள்ள நல்லபிள்ளைகளுடன் இணைந்து விளையாட வகை செய்யவேண்டும்.

எதுவானாலும் சாயங்காலம் பிள்ளைகள் ஓடி ஆடி விளையாட வசதி செய்து கொடுக்க வேண்டும். இது ஒரு வகை உடற்பயிற்சியாகும். உடலுறுப்புகளும் தசை நார்களும் உறுதிபட விளையாட்டு உதவும்.

பெண்பிள்ளைகளும் பின்னேரங்களில் ஓடியாடி விளையாடினால்தான் இரத்த ஓட்டம் சீராகும். மூளைவளர்ச்சிக்குக் கூட விளையாட்டு வழிவகுக்கும்.

பிள்ளைகளின் நாட்டம் எவ்வாறு அமைகிறது என்பதனை அவதானித்து அதற்கேற்ப வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். பள்ளிப்படிப்பு-பள்ளிக்கூடப்பாடப் புத்தகங்கள் என்பவற்றுடன் மட்டுமே பிள்ளைகளை ஒட்ட வைத்துவிடுவது இன்றையக் கால கட்டத்துக்கு உதவாது.

அறிவை வளர்க்கும் நோக்குடன் மட்டுமல்லாமல் வாசிப்புப் பழக்கத்தையும் ஊக்குவிப்பதற்கேற்ற புத்தகங்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை வாங்கிக் கொடுத்துப் படிக்கத் தூண்ட வேண்டும். மிருகங்கள், பறவையினங்கள் பேசுவது, பாடுவது போன்ற கதைகளைப் பிள்ளைகள் படிக்கும்போது அவர்களுடைய கற்பனை வளமும் விருத்தியடையும்.

படித்த புத்தகங்களை அவர்களே பாதுகாத்து வைப்பதற்கு ஒரு சிறு அலுமாரி போன்ற அமைப்பினை அவர்களுக்கு மட்டுமெனக் கொடுத்துவிட வேண்டும். இதேபோல் அவர்களுக்கு மட்டுமென- அவர்களின் துணிமணிகள் மற்றும் விளையாட்டுப் பொருட்களையும் அவர்கள் தனியாக வைத்துப் பாதுகாக்க வசதி செய்து கொடுக்க வேண்டும்.

பிள்ளைகளின் பொறுப்புணர்ச்சியை விரிவடையச் செய்ய இது உதவும்.

மூன்று வயதைத் தாண்டியதும் தத்தமக்குரிய கடமைகளைத் தாமே செய்வதற்குக் குழந்தை பழக்கிக்கொள்ள வேண்டும். படுக்கையை விட்டு எழுந்ததும் தமது படுக்கையை அவர்களே எடுத்துவைக்க வேண்டும். தாமாகவே காலைக்கடன்களை முடிக்க வேண்டும். குளிப்பதற்கு அவர்களை விட்டுவிட்டாலும் தண்ணீர் அளவாகப் பாவிக்கிறார்களா? என்பதைக் கண்காணிக்க வேண்டும். தடுமன், தலைவலி, காய்ச்சல் இருக்கும் போது தன்னிஷ்டம் போல் தண்ணீர் பாவிக்க விட்டு விடக்கூடாது.

வீட்டுக்கு வரும் பெரியோர்களைக் கனம் பண்ணி நடக்க அவர்களுக்குப் பழக்க வேண்டும், வீட்டுக்கு நமக்கு வேண்டாதவர் வந்து போனாலும் அவர்களைப் பற்றி நாம் தரும் விமர்சனங்கள் எமது பிள்ளைகளின் காதுகளில் விழுந்துவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும், குழந்தைகளின் காதுகளில் விழுமாறு அயலவர்களைப் பற்றி குறிப்புரைகள், கிண்டல்கள் போன்றவற்றை பெரியவர்கள் கூறக்கூடாது.

எமது குழந்தைகள் உடலாரோக்கியமும் உளவளமும் பெற்று வளர்வதற்கு இத்தகைய நடைமுறைகள் இன்றியமையாதவையாகும்.

## இருபதில் என்ன மாற்றம்?

சுமார் 20 வயதுவரை இளம் பெண்கள் மெலிவாகத்தான் இருக்கிறார்கள். இவர்கள் அதிக உணவு உட்கொண்ட போதிலும் உடல் பருமனாவதில்லை. சில பெண்கள் 20 வயது வரை பருமனாக இருந்துவிட்டு திடீரென மெலிய ஆரம்பித்து விடுவார்கள்.

பொதுவாக மெலிந்தவர்கள் பருமனானாலும், பெருத்தவர்கள் மெலிவடைந்தாலும் முன்பிருந்த ஓரளவு அழகான தோற்றத்தில் மாற்றம் ஏற்படவே செய்யும்.

உடலமைப்பு மெலிவாக இருப்பதற்கோ, பருமனாக இருப்பதற்கோ காரணங்கள் பல இருக்கின்றன. சிலர் வம்சாவளி ரீதியிலான உடலமைப்பைக் கொண்டிருப்பார்கள். இவ்வாறானவர்களுடைய உடல்வாகினை மாற்றுதலரிது.

வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் எமது உடலமைப்பைப் பாதிக்கும். உணவு முறைகள் மற்றுமொரு காரணமாகும். எது எப்படியாக இருப்பினும் எமது உடலமைப்பை கவர்ச்சிகரமானதாக்க உணவுக் கட்டுப்பாடும், உடற் பயிற்சியும் நிச்சயம் கை கொடுக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

உணவுக்கட்டுப்பாடு என்பது சாதாரணமான ஒன்றல்ல. எமது உடலுக்கு அத்தியாவசியமான புரதங்கள், விட்டமின்கள் மற்றும் கனிம உப்புக்கள் உரிய அளவுடன் கிடைக்கும் வகையில் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை'யாகி விடலாகாது.

உடலைக் குறைக்க சில இளம் பெண்கள் காலை உணவைப் பெரும்பாலும் நிறுத்திவிடுகிறார்கள். இதனால் குடல் புண் போன்ற உபாதைகளுக்குள்ளாகி விடுகிறார்கள்.

உடற் பயிற்சி கூட 'குரு இல்லாக் கூத்தாகி' விடக்கூடாது. ஏதோ தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள் போல் சிலர் கூறும் கருத்துக்களை ஏற்று அதனால் துன்பப்படலாகாது.

உணவுக்கட்டுப்பாடோ, அல்லது உடற்பயிற்சியோ, அத்துறைகளில் ஓரளவு அனுபவமுள்ளவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

## பற்பசைகள் ஜாக்கிரதை!



அப்போதுதான் ஓரிரு பற்கள் முளைத்து தத்தித்தத்தி நடந்து திரியும் பாப்பாக்களும் காலை எழுந்ததும் பல்துலக்க ஆரம்பித்து விடுகிறார்கள். பெற்றாரும் சுற்றியுள்ளவர்களும் பிரஷ்-பற்பசை அல்லது பற்பொடி கொண்டு பல்துலக்குவதைப் பார்த்து தாமும் அவ்வாறே செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்.

சில பெற்றாரும் தங்கள் குழந்தைகளின் புத்திசாலித்தனத்தை மெச்சி ஒரு சிறு பிரஷும் கையில் கொடுத்து, சிறிதளவு பற்பசையையோ பற்பொடியையோ கொடுத்துவிடுகிறார்கள் ஆனால் இது நல்லதல்ல.

இவர்கள் பற்பசையையோ பற்பொடியையோ வாயில்வைத்து, அவற்றின் சுவையால் விழுங்கி விடுகிறார்கள். பற்பசையிலுள்ள இரசாயனக் கலவைகளும், பற்பொடியிலுள்ள உமிச்சாம்பலும் அவர்களின் வாய் வழி சென்று வயிற்றில் உபாதைகளை ஏற்படுத்திவிடுகின்றன.

பொதுவாக 3 வயதான குழந்தைகளை வெந்நீரால் அடிக்கடி வாய் அலம்ப வைத்தால் போதுமானது. மேல்வரிசையில் 8 பற்களும் கீழ் வரிசையில் எட்டுப்பற்களும் வந்துவிட்டால் தாய் தனது விரலால் குழந்தையின் பற்களைத் தேய்த்து விடலாம்.

எப்படியும் 5 வயதான பின்னர்தான் குழந்தைகளுக்கு பற்பசையும் பிரஷும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். சிறிதளவு பற்பசையைக் கொடுத்து அதனை வெளியே துப்பிவிடுமாறு செய்துவிட வேண்டும்.

வாய் அலம்பும் திரவங்கள் (MOUTH WASH) இப்பொழுது கவர்ச்சிகரமான அட்டைகளில்-கவர்ச்சியான வர்ணங்களில் சந்தையில் கிடைக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தும் பெரியவர்கள் சிலர் தங்கள் குழந்தைகளுக்கும் இதனைக் கொடுத்து வாய்கொப்பளிக்கும்படி செய்கிறார்கள்.

கடைகளில் விற்கப்படும் (வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்) வாய் கொப்பளிக்கும் இத்திரவங்களில் பியர் பானத்திலுள்ளதைவிட கூடுதலான மதுசாரம் (அற்ககோல்) சேர்க்கப்படுகிறதாம்.

பியரில் 5 முதல் 7 சத வீதம் மதுசாரம் உண்டு. வைனில் 10 முதல் 14 சதவீதம் இருக்கிறது. ஆனால் சில வாய் அலம்பும் திரவங்களில் 27 சதவீதம் மதுசாரம் உண்டென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளின் வாயில் இந்த வாய் அலம்பும் திரவத்தை ஊற்றினால் அதனை அக்குழந்தை-அதன் சுவைக்காக உட்கொண்டு விடும் என்பதை பெற்றார் மறந்து விடக்கூடாது.

## அது என்ன கோளாறு?



சுமார் 12 வயதுடைய பெண் பிள்ளைகளுக்கு சிறு நீரகப் பையில் பெரும்பாலும் அழற்சி ஏற்பட்டு தொந்தரவு கொடுப்பதுண்டு, வயதாக ஆக இந்த உபாதை அதிகரிப்பதுமுண்டு. பெரும்பாலும் அவர்கள் பருவமடைந்ததும் தானாக மறைந்துவிடுவதுமுண்டு.

இந்த உபாதை ஏதாவது கருப்பையுடன் கூடிய பெருவியாதிகளுக்கு அறிகுறியாகவும் இருக்கலாம் என்று அஞ்சப்பட்டது. ஆனால் இதனால் எத்தகைய பாரிய வியாதிகள் ஏற்படவோ, பிற்காலத்தில் கருத்தரிக்கும் போது இடையூறாக இருக்கும் என்றோ பயப்படத்தேவையில்லை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடா-ரொறன்ரோவிலுள்ள குழந்தைகளுக்கான மருத்துவமனை ஆய்வாளர் டாக்டர் டெப்ரா மில்லர் 1800 இளம் பெண்களையும் வைத்து 'அல்ட்ரா சவுண்ட்' முறையிலான பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இதன்படி சிறு நீரகப் பையுடன்- அப்பிள் பழ விதை அளவில் சிறு திரட்சிகள் ஏற்படுவதனால் தான் இவ் வழற்சி ஏற்படுவதாகக் கண்டறிந்துள்ளார். இவ்விடத்தில் ஹோர்மோன் சுரபிகளின் சிறு துளி ஒரு சிறு கொப்புளம் போல் தங்கிவிடுகிறது.

இதனால் எத்தீங்கும் ஏற்படுவதில்லை. இவை தானாகவே உடைந்து போய் அழிந்து விடும் இயல்புடையன என்று தெரிவித்துள்ளார்.

## கண்நோய்க்கு பாட்டி வைத்தியம்



ஒரு வகைக் கண் நோய் இப்பொழுது எங்கும் பரவிவருகிறது. இதற்கு மருத்துவமனையை நாடாமல் வீட்டிலேயே 'பாட்டி மருந்து' தடவிக் குணமாக்கி விடலாம். சில வருடங்களுக்கு முன்னர் 'மற்றாஸ் ஐ' என்ற பெயரில் இதே போன்ற தொற்று எங்கும் பரவியது. சென்னை நகரிலிருந்து இதனைத் தன்னுடன் இறக்குமதி செய்த ஒருவர் நமது நாடெங்கும் பரவச் செய்திருந்தார்.

ஒரு கடுக்காயை எடுத்து உடைத்து அக்கோதுடன் படிகாரம் ஒரு சிட்டிகை விட்டு தண்ணீரில் காய்ச்சி கெட்டியானதும் ஆற வைத்து வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். கண்நோய் வரப்போவதற்கான அறிகுறிகள் கண்டதும் கண் இமைகளின்மேல் இத்திரவத்தில் சிறிதளவு எடுத்து கோழி இறகால் பூசிக் காயவிடுங்கள். காலையிலும் மாலையிலும் இதனை இரண்டு நாட்கள் பூசிவர கண் நோய் வந்த தடயமே இருக்காது.

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது சுகந்தினி

### சோளப் பக்கோடா

**தேவையானவை:**

| | |
|---|---|
| சோளமாவு | - 2 கிண்ணம். |
| பச்சரிசி மாவு | - 1 கிண்ணம். |
| கடலை மாவு | - 1 கிண்ணம். |
| வெங்காயம் | - 250 கிராம். |
| தயிர் | - 1 கிண்ணம். |
| பச்சை மிளகாய் | - 10. |
| இஞ்சி | - 1 துண்டு. |
| கறிவேப்பிலை | - சிறிது. |
| மாஜரின் | - 50 கிராம். |
| உப்பு | - அளவாக. |
| எண்ணெய் | - தேவையான அளவு. |

**செய்முறை:-**

மாவுகளைத் தனித்தனியாகச் சுத்தம் செய்து கொள்ளவும். வெங்காயம், மிளகாயைப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும். மாவுகளை ஒன்றாகக் கலந்து, தயிர் சேர்த்து, நன்கு பிசைந்து கொள்ளவும். இதனுடன் வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, உப்பு, மாஜரின் ஆகியவற்றைப் போட்டுக் கையினால் நன்றாகக் கிளறிக் கொள்ளவேண்டும்.

பின், அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெயை ஊற்றிக் கொதித்ததும், மாவுக் கலவையைக் கையினால் எடுத்துப் பிசிறிப் போடவும். நன்கு சிவக்க வேகவிட்டு எடுத்து, இளஞ்சூட்டில் சாப்பிடவும். இந்தச் சோளப் பக்கோடா சாப்பிடச் சுவை மிகுந்தது. அத்துடன் உடம்புக்கும் நல்லது.

## சின்ன யோசனை

* நாம் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் பெருங்காயம் கெட்டியாகப் போய் விடுகிறதா? இதற்கு, பெருங்காயத்துடன் ஒரு பச்சை மிளகாயைப் போட்டு மூடி வையுங்கள். பெருங்காயம், புதிதாக வாங்கியது போல மிருதுவாக, எடுப்பதற்கு எளிதாகவும் இருக்கும்.
* வெண்ணிறத் துணிகளை நீலத்தில் நனைத்து வெய்யிலில் காயப்போடக்கூடாது. நிழலில் தான் காயப்போட வேண்டும். ஏனென்றால் நீலத்தில் நனைத்த துணிகள் வெய்யிலில் காய்வதை விட, நிழலில் காய்ந்தால், வெண்ணிற உடைகள் பளிச் பளிச்சென்று இருக்கும்.
* கோடைகாலத்தில் கோழிமுட்டைகள் விரைவில் கெட்டுவிடும் என்பதால், வேப்பிலைக்குள் முட்டைகளைப் போட்டு வைத்தால் அதிக நாட்கள் கெட்டுப்போகாமல் இருக்கும்.

## லேடீஸ் ஸ்பெஷல்

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**புதிய காத்தான்குடி வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**இப்றாஹீம் எம். பாத்திமா,**
212, மத்திய வீதி, புதிய காத்தான்குடி-03.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CF

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-08-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


**தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும்**

**தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்**

**பரிசுக் கூப்பன் இல 25**

**தங்கமாலை பரிசுப் போட்டி**

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## நீண்ட காலக் கைதி

கண்களின்
காதல் சட்டத்தின் கீழ்,
கைதாகி
எத்தனை நாள்
உன் இதயச்சிறையில்
அடைபட்டுக்கிடப்பது?!
0–0
'கைதுகளை
உடன் நிறுத்துக'
என்று காரமாய்
'அறிக்கை விட'
தமிழ் கட்சிகளில் போல்
என் காதல் கட்சியில்
ஆளில்லாத தைரியமா
உனக்கு?!
0–0
உன் சிறையில்
என்னை நடத்தும் விதம்
கண்டனத்துக்குரியது!
0–0
நீ யென்னை
கைது செய்த
நாளிலிருந்து
உறங்கா விரதமிருக்கிறேன்!
உண்ணா விரதமும்
இருக்கச் செய்திடாதே!
0–0
தாமதிக்காமல்
திருமண வழக்குப் போடு!
நீ நினைக்கும்
காதல் தேசத்துக்கே
என்னை நாடுகடத்த வேண்டுமென்று
உன் பெற்றோரிடம்
வாதாடு!
0–0

பர்ஸான்–யடவ்த்த, நிகொள்ள

## மீறல்களால்...!

அந்தகார இருளில்
தொலைந்து போனது
சமாதானம் மட்டுமல்ல
என்னோடு நீயும்தான்!!
*
தினம் தினம்
பூபாளங்களையே
இசைத்துக் கொண்டிருந்தோமே,
பின்னாளில்
முகாரி பாடப்போவது
தெரியாமல்...!
*
சூரியனை எங்கே
இங்கே காணோம்..?
அதனால் தான்
இத்தனை துன்பமும்
நட்டமும்
நம் எல்லோருக்குமாய்!
*
பூக்கள் பட்டாலே
முகம் சிவந்த நாம்
இந்த 'மீறல்களால்'
என்ன ஆவோம்?
*
தோழி!
எனக்கு
பயமாக இருக்கிறதடி!
*
முதலில்
மல்லாக்க வீழ்த்தப்படுவது
நீயா?
நானா?

கலஹ–. பெ.புண்ணியமூர்த்தி.

## கூண்டுக் கிளி

உன்னிரு சிறகினைப் பிடுங்கி
யாரடைத்தார் கூண்டில்?
சொல் கிளியே!
–0–
இன்றுனது கடிதம் மென்று
மனமதிரக் குமுறி
ஓலமிட்டேன்.
–0–
முன்னெறி தெய்வங்கள்
உதிர்ந்தனரென்றாய்!
முன்னர் போல்,
வாழ்வெனக்கில்லை என்றாய்,
உன் குரலுடைத்து, அழகுமிகு
தோகையினை
நறுக்கியது யார் கிளியே?
–0–
நேற்று வரை
என் கவிதைகளின் பொக்கிஷம்–நீ
கருத்தூன்றிப் படிப்பதும்,
கத்தரித்து சேமிப்பதுமாய்
உன்னது உறவு நீடித்திருந்தது!
–0–
உன்னை வருட வரும் தென்றலை
யார் தடுத்தார் மலைக்
கொழுந்தே?
–0–
என் கைகளையுமல்லவா
விலங்கிட்டு விட்டதுன் கடிதம்!
உனக்கேனடி வீணச்சம்?
என் கவிதைகள் வாழுமட்டும்,
எந்த மூலையாயினும்/உனைச்
சேராமலா இருக்கும்....?
–0–

என்.சுஹா


## (போர்) உருவாக்கிய உயிர்க்கணை

வரப்புகள் நீண்டவயல்
வேலிகள் கொண்டசோலை
பரம்பரை கண்ட சொத்து
நிரம்பிய பொன் சம்பத்து
தழைத்திடும் செல்வம் பொங்க
உழைத்துயர் ஊர்களெங்கே?
***
பாறையாய் இருந்த ஊர்:
வெடித்த போர் அவலத்தாலே
ஓடும் இடம் பெயர்வுகள்
கூடும் உயிர் இழப்புகள்
வாடும் பசி வயிறுகள்
அடிப்படைத் தேவைகள்!
***
சிற்பியின் உளிகளாகி
செதுக்கிய சிலைகளாகி
சுதந்திரத் தேவையாவும்
சிலைகளின் உயிர்களாகி
போரிடும் வேட்கை பெற்று
சீறிடும் கணைகளாகும்!
***
பீறிடும் இரத்த ஆறு
வற்றிடும் காலமெப்போ?
காய்ந்திடும் வடுக்கள் மாறி
சமரசத் தென்றல் வீசி
ஓய்ந்திடும் போருமெப்போ?
மாறிடும் வாழ்வுமெப்போ?

திருமதி ராஜேஸ்வரி
கிருஷ்ணன்– வவுனியா.

## யார் இவர்கள்?





எல்லாமே ஜோரான குழந்தைகள். இன்று பெரிதாகி ஜோராக இருப்பவர்கள். மொத்தம் ஆறு இசையமைப்பாளர்கள் இங்கே சுட்டிக் குழந்தைகளாக, சமர்த்தான பையன்களாக இருக்கின்றனர். ஒருவர் நடிகரும்கூட. அரிதாகவே இசையமைத்துள்ளார். ஏனையோர் முழுநேர இசையமைப்பாளர்கள். என்ன மூளைக்குள் பளிச் பளிச்... என்று அடிக்கிறதா மின்னல்? கண்டுபிடித்துவிட்டால் கெட்டிக் காரர்கள்தான். விடையைச் சரிபார்க்க பக்கம் 18ஐ நாடுங்கள்.



## முகமூடிகள்

நில்லுங்கள்!
•••
ஒரு முறையல்ல,
பலமுறை
நான்
பாதகன்!
உங்கள்
பரிசோதனையின்
முடிவு!
•••
நெஞ்சக்குள்
நஞ்சு.
•••
கண்ணுக்குள்
கயமை.
•••
வார்த்தைக்குள்
வச்சிரம், பொய்.
•••
உங்கள் முடிவு
உண்மையானதே!
•••
எனக்குத் தெரியும்,
என்றோ ஒருநாள்
என் முகமூடி
கிழியும்!
•••
என் பிணத்தை
நாலு பேரின்மையால்
நாய் இழுக்கும்!
•••
ஆனாலும்,
உங்கள் முகமூடிகளை
உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!
நாளை
உங்கள் விஞ்ஞான மூளைக்கும்
விலங்கு வரும்!
•••

யாழ்–ஞானகணேசன்

## தேன்கிண்ணம்

## வேள்வி

நிர்ப்பந்தப் பட்டினி
விரதம் காத்து–
நிரந்தரப் பசியில்
தீயை வளர்த்து–

எண்ணெய் இன்றி
என்றும் எரியும்
வேள்விக் குண்டம்
எங்கள் வயிறு....

### மிச்சம்

நாய்களொடு
நாய்களாக–
கட்டிப் புரண்டு
எடுத்துப் பிரித்த
எச்சில் இலைக்குள்
இருந்த மிச்சம்

சப்பித் துப்பிய
எலும்புச் சக்கைகள்....

நீர்கொழும்பு–தருமலிங்கம்.

## ஒரு துவக்கு வேணும்!

யுத்தம்
உணவானதால்
வெடி மருந்து
மலம்
கழிக்க
வேண்டியதாயிற்று–
புளித்துவிட்ட
கிரிக்கெட்டும்
சலித்துவிட்ட
போரும் போல!
••
மூச்சு விடுவதுகூட
மெசின் கண்ணின்
துவாரங்களினூடே
என்றாகிவிட்டது!
••
செவ்வாய்க்
கிரகத்திலும்
ஆயுதக் கடைதான்
முதற்கடை என
முடிவாகிவிட்டது!
••
எங்கள் வீட்டுக்கும்
ஒரு துவக்குத்
தாருங்கள்!
இந்தச்
சின்னப் பயல்
சொல்லுக்
கேட்கிறானில்லை:
சுட்டுத்தான்
பயங்காட்ட
வேண்டும்!

மாரிமுத்து
யோகராஜன்–
அக்கரைப்பற்று–08.

## எம் காதை

ஆரிடம் கேட்பது ஜோசியம்?– எந்த
ஆண்டவன் கையிலெம் ஜாதகம்?
வேரிலும் பாயுதே போர்ச்சரம்–தமிழ்
வெல்லுமா தோற்குமா ஊழிடம்!
***
காதலின் ஜீவனும் போனது–எங்கள்
கற்பக தருமலடானது.
சேதாரமாய்ப் பசி நீளுது–வருஞ்
சேய்க்கு– முள் கிரீடமே மிஞ்சுது!
***
காணாமல் போனவர் ஆயிரம்–நாமும்
'காங்கேசன் துறை'வரை தேடுறம்.
நாளாந்தம் 'மகஜர்கள்' போடுறம்.– ஒன்றும்
நடக்கலை; 'நம்பினோம்...,' வாடுறம்!
***
மாற்றானின் தோட்டத்து மல்லிகை–தன்னை
மணந்து, பறிக்குதே... வந்தகை.
காற்றுக்கிங்கில்லை பார் புன்னகை–'கலி
காலமே! தேடுறோம் 'கல்கி'யை!'

அருணன்– யாழ்ப்பாணம்.

## சரியாச் சொன்னீங்க.



எந்த மனிதனும்
எனக்குக்கீழானவன்
அல்ல.
அதுபோலவே
எவனும் எனக்கு
மேலானவனும்
அல்ல.

–தந்தை பெரியார்–

## இந்த வாரம் உங்கள் பலன்

(24.08.1997 தொடக்கம் 30.08.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், இராகு. |
| கன்னி | - வெள்ளி. |
| துலாம் | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| கர்க்கடகம் | - புதன். |

★ சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் அதிகம், கடன் தொல்லை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணம் இழப்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், வெளியிடப் பயணம். | மு.ப. 10 மணி |
| புதன்- பலவித பேறு, தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- இனசன நன்மை, உறவினர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- எதிர்பார்ப்பு வெற்றி, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், காரிய சித்தி. | பகல் 11 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, சஞ்சலம். | மு.ப. 9 மணி |
| சனி- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, பொருள் பேறு. | மு.ப. 10 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- காரியானுகூலம், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- கடன் சுமை, காரியக்கேடு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, பொருள் செலவு. | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- பலவித பேறு, பண வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| சனி- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவம். | மு.ப. 10 மணி |
| புதன்- பலவித பேறு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், காரியக்கேடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| புதன் - தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- மனக் குறை நீங்கும், பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, தொழில் மந்தம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், மனக் கவலை. | மு.ப. 10 மணி |
| சனி- உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், ஆடம்பரச் செலவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், உயர்ந்த நட்பு. | பி.ப. 3 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரிய நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| சனி- பயனற்ற செயல், தொழில் கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் சகவாசம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| புதன்- பலவித கஷ்டம், கடன் தொல்லை. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனச் சஞ்சலம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் பேறு. | மு.ப. 10 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

www.padippakam.com





நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பரூட்டும் போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

ஒரு காட்டில் காளை மாடு, சேவல், பன்றி, பூனை, செம்மறி ஆடு ஆகிய ஐந்தும் வீடு கட்டி ஒன்றாக வாழ்ந்து வந்தன. இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாக இருந்தன.

அந்தக் காட்டில் இருந்த நரி சேவலைப் பிடித்துத் தின்ன நீண்ட நாட்களாகத் திட்டமிட்டுவந்தது. அதே காட்டில் ஓர் ஓநாயும் இருந்தது. ஓநாய்க்கு செம்மறி ஆட்டைப் பிடித்துத் தின்னும் ஆசை இருந்தது.

ஒரு நாள் ஓநாயும், நரியும் சந்தித்தன. இருவரும் தமது விருப்பங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்தனர்.

சமயம் பார்த்து ஓநாயும், நரியும் கரடி ஒன்றைக் கூட அழைத்துக் கொண்டு காளைமாடு, சேவல், பன்றி, பூனை, செம்மறி ஆடு போன்றவை வசிக்கும் வீட்டிற்குப் புறப்பட்டன.

வீட்டிற்கு அருகில் வந்ததும் நரி, ஓநாயையும் கரடியையும் பார்த்து,

"நான் முதலில் உள்ளே போகிறேன். நான் உள்ளே சென்று சேவலைப் பிடித்தவுடன் குரல் கொடுப்பேன். நீங்கள் ஒவ்வொருவராக உள்ளே வாருங்கள்," என்றது.

ஓநாயும், கரடியும் அதற்குச் சம்மதித்து வெளியே காத்திருக்க நரி உள்ளே சென்றது. இவற்றையெல்லாம் வீட்டின் மேற்புறத்தில் அமர்ந்திருந்த சேவல் அவதானித்தது. இதையெல்லாம் நண்பர்களிடம் சொல்லி எச்சரித்தது.

கதவைத் திறந்து கொண்டு நரி உள்ளே போனபோது காளைமாடு வந்து முட்டித் தள்ளியது. நரி நிலைகுலைந்து கீழே விழ, பூனையும், சேவலும் அதைத் தாக்கத் தொடங்கின.

வெளியே காத்திருந்த ஓநாய், கரடியைப் பார்த்து,



"உள்ளே போன நரி, சேவலைத் தின்று மயங்கிக் கிடக்கிறது போலும், நான் உள்ளே போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்," என்று உள்ளே போனது.

ஓநாய் உள்ளே நுழைந்ததுதான் தாமதம், காளைமாடு அதை மோதித் தள்ளியது. ஓநாய் கீழே விழுந்தது. பன்றியும், செம்மறி யாடும் கீழே விழுந்த ஓநாயின் மேல் ஏறித்தாக்கின.

வெளியே காத்திருந்த கரடி பொறுமை இழந்தது. 'இருவரும் உள்ளே என்ன செய்கிறார்கள்?' என்று நினைத்தபடி கடகடவென உள்ளே வந்தது.

கரடி வாசலுக்கு வந்ததுதான் தாமதம், காளைமாடு சற்றுப் பின்னே போய், ஒரே பாய்ச்சலாக வந்து மோதியது. கரடி 'ஓ'வெனக் கத்தியபடி தூரத்தில் போய் விழுந்தது.

வீட்டுக்குள் அகப்பட்ட ஓநாயும், நரியும் எப்படியோ வெளியே வந்து, தப்பினோம், பிழைத்தோம் என்று ஒரே ஓட்டமாக ஓடித் தப்பின.

காளைமாடு, சேவல், பன்றி, பூனை, செம்மறி ஆடு எல்லாம் ஒன்றாக, ஒற்றுமையாக இருந்தபடியால் தங்களைக் கொல்ல வந்த எதிரிகளை அடித்துத் துரத்திவிட்டன.

# அதிசயம் - ஆனால் உண்மை!



**புனித ஹென்றி ஜோசப் ட்ரூரி (1775-1841)**

இங்கிலாந்திலுள்ள ஹாரோ பள்ளியின் ஆசிரியர். இவர் விர்ஜில், ஹொரெஸ், லூகான் ஆகியவர்களின் எல்லாக் காவியங்களையும் மனப்பாடம் செய்து ஒப்பித்தார். இவர் ஒருமுறை 16 மைல் நடந்தபோது 8000 பக்கங்கள் கொண்ட காவியம் ஒன்றை மனப்பாடம் செய்து ஒப்பித்தார்.

**நைஸ்னா காட்டின் அதிசய மரம்**




75 அடி உயரமான, பசுமை நிறைந்த குன்றின் மீது ஒரே மரத்தின் வேரில் இருந்து 13 விதமான காட்டு அத்தி மரங்கள் வளர்ந்துள்ளன.

**வெள்ளை வரைமான்**



ஐரோப்பாவின் அல்பின் பகுதியில் இந்த மிருகத்தை சாவிற்கு முன்னெச்சரிக்கையாகக் கருதுகிறார்கள். வேட்டையில் இதைக் கொல்பவன் ஒருவருடத்திற்குள் இறந்துவிடுவான் என்பது வேட்டைக்காரர்களின் நம்பிக்கை.



**கிங்பேர்ட்**

மேற்கத்திய நாடுகளில் அதிகம் காணப்படும் கிங்பேர்ட் பறவையின் உணவு தேனீக்கள். இந்தப் பறவை தேனீக்களைத் தன்பால் இழுக்க தன் தலையில் உள்ள சிவப்புப் புள்ளியை மின்னச் செய்யும். தேனீக்களும் இப்புள்ளியைப் பூ என நினைத்து கிங்பேர்ட்டிடம் மாட்டிக் கொள்ளும்.

# வாரம் ஒரு நாடு

## லைபீரியா

**தலைநகர்-** மொன்ரோவியா
**பரப்பு -** 1,11,369 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை -** 30 இலட்சம்
**மொழி -** ஆங்கிலம், பழங்குடி வழக்குகள்
**எழுத்தறிவு-** 40%
**சமயம் -** கிறிஸ்தவம், இஸ்லாம், பழங்குடி நம்பிக்கைகள்
**நாணயம் -** லைபீரியன் டொலர்
**தனிநபர் வருமானம் -** 440 டொலர்.

**அமைவிடம்:**

ஆபிரிக்காவில், அட்லாண்டிக் கடற்கரையில் அமைந்துள்ளது லைபீரியா.

**வரலாறு:**

1822ல் இது கண்டுபிடிக்கப்பட்டது. 1847 ஜூலை 25ல் குடியரசாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவில் அடிமைகளாக இருந்த கறுப்பினத்தவர் இங்கு குடியேற்றப்பட்டனர். 1980 மற்றும் 1990ம் ஆண்டுகளில் இராணுவ ஆட்சி. இனக்கலவரங்கள் தொடர்ந்து நீடித்ததால் 1993 ஜூலை 25ல் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. 1994ல் மார்ச்சில் மூன்று கலகப்பிரிவினைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர் குழுவால் ஆட்சி நடைபெறுகிறது.



**பொருளாதாரம்:**

90 சதவீத மக்கள் விவசாயிகள். கோப்பி, கொக்கோ முக்கிய விளை பொருட்கள். இறப்பர், இரும்புத்தாது போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.08.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 207
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 205

பரிசுக்குரியவர்:
செல்வன் வேள் பிரணீவ,
கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு-04.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| யோகினி-திருக்கனேசன், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| செல்வன் சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | எ.எம். ஸாமிலா, பு/ எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. |
| கிர்ஷானா தங்கவேல், நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா. | சி. அன்புமகன், நானாட்டான் மகா வித்தியாலயம், மன்னார். |
| அ-அ. முஹம்மத் அஸாம், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | எம். முஹமட் நிலுஜான், கரு/ஜீலான் மு.ம.கல்லூரி, தோனமுல்லை, பாணந்துறை. |
| வி. பிரதீபா, இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. | ஸ்ரீகாந்தகுமார் தர்சன், இந்து கல்லூரி, மந்தண்டாவளை, மாத்தளை. |

# கருவிகளும் பயன்களும்

* அட்மோஸ் கோப். (ATMOSCOPE)
இந்தக்கருவி ஓர் இடத்தில் கதிரியக்கப் பொருட்கள் உள்ளனவா எனக் கண்டு பிடிக்க உதவும்.
* அயண் லங் (IRON LUNG)
இக்கருவி நோயாளியின் உடம்பில் வைத்து பம்ப்பின் மூலம் செயற்கை மூச்சு விடச் செய்யப் பயன்படுகிறது.
* எப்பிடோஸ்கோப் (EPIDOSCOPE)
அச்சிடப்பட்டவைகளைத் திரையில் விழச் செய்யும் கருவி.
* ஓடோமீட்டர் (ODOMETER)
சக்கரவண்டிகள் கடந்துள்ள தூரத்தைக் கண்டறியப்பயன்படும் கருவி.
* கைமோகிராஃப் (KYMOGRAPH)
உடலுறுப்புக்களின் அசைவுகளை வரைபடமாக வரையப் பயன்படும் கருவி.
* செக்ஸ்டான்ட் (SEXTANT)
கோள்களின் உயரத்தையும், அதனைச் சுற்றியிருக்கும் கோள்களின் தூரங்களையும் அறியப்பயன்படும் கருவி.
* டெல்ஸ்டார் (TELSTAR)
வானவெளியில் இருந்து செய்திகளைச் செயற்கைக்கோள் வழியாக அனுப்பப் படும் கருவி.

# விடுகதைகளும் விடைகளும்

1. கழுத்தைச் சுற்றியும் கடிக்காதவன். அவன் யார்?
2. வானத்தில் பறக்கும் வாலுள்ள மனிதனுக்கு பூமியில் இருந்தே கால். அவன் யார்?
3. மூடியைத்திறந்தால் ஓடியே வருவான். அவன் யார்?
4. கையும் காலும் இல்லாதவன், முகட்டைத் தாண்டி மேலே போவான். அவன் யார்?
5. அந்தரத்தில் ஆடுபவன், ஆனந்தம் தருபவன். அவன் யார்?
6. தண்ணீரில் துள்ளுவான், தரையிலே துவள்வான். அவன் யார்?
7. கோட்டைக்குள் கோட்டை கட்டி குடியிருக்கும் சின்னப் பையன். அவன் யார்?
8. திறந்தவாய் மூடாதவன், தெருவோரம் இருக்கிறான். அவன் யார்?
9. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?
10. ஒரு சாண் உடம்புக்காரனுக்கு உடம்பெல்லாம் பற்கள். அவன் யார்?

## விடைகள்

1. கழுத்துப்பட்டி 2. பட்டம்
3. சோடா 4. புகை
5. ஊஞ்சல் 6. மீன்
7. தேங்காய் 8. தபால் பெட்டி
9. மண்புழு 10. சீப்பு

தொகுப்பு: செல்வி.ஏ.அகல்யா.

# சீனமொழி

உலகிலேயே அதிக மக்களால் பேசப்படும் மொழி சீனாவின் மாண்டரின் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் தமிழ், ஆங்கிலம் போல மாண்டரின் மொழிக்கு எழுத்துக்கள் இல்லை. 50 ஆயிரம் வகையான படச் சின்னங்களே உள்ளன. இவை காரக்டர் என்றழைக்கப்படுகின்றன.

இந்த அடையாளச் சின்னங்களைக் கொண்டே வார்த்தைகள் உருவாக்கப்படுகின்றன. இதைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். பெரும்பாலான வார்த்தைகள் இரண்டும் அதற்கும் மேற்பட்ட அடையாளச் சின்னங்களைக் (காரக்டர்) கொண்டு கலந்து அமைக்கப்படுகின்றன. இந்த அடையாளச் சின்னங்களை மிகவும் கவனமாக எழுத வேண்டும். சிறிய அடையாள மாற்றம் கூட தவறான அர்த்தத்தைக் கொடுத்துவிடும்.


ஆண்

# இந்தியப் பிரதமர்கள்

எமது அண்டை நாடான இந்தியா சுதந்திர மடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டது. 50 ஆண்டுகளில் இந்தியாவில் பிரதமர்களாக இருந்தவர்கள் விபரங்கள் வருமாறு:

| பெயர் | பதவிக்காலம் |
|---|---|
| 1. ஜவகர்லால் நேரு | 15.08.1947 - 27.05.1964 |
| 2. குல்சாரிலால் நந்தா (காபந்து பிரதமர்) | 27.05.1964 - 09.06.1964 |
| 3. லால் பகதூர் சாஸ்திரி | 09.06.1964 - 10.01.1966 |
| 4. குல்சாரிலால் நந்தா (காபந்து பிரதமர்) | 10.01.1966 - 24.01.1966 |
| 5. இந்திரா காந்தி | 24.01.1966 - 23.03.1977 |
| 6. மொரார்ஜி தேசாய் | 24.03.1977 - 28.07.1979 |
| 7. சரண் சிங் | 28.07.1979 - 14.01.1980 |
| 8. இந்திரா காந்தி | 14.01.1980 - 31.10.1984 |
| 9. ராஜீவ் காந்தி | 31.10.1984 - 02.12.1989 |
| 10. வி.பி.சிங் | டிசம்பர் 1989 - 07.11.1990 |
| 11. சந்திரசேகர் | 10.11.1990 - 06.03.1991 |
| 12. நரசிம்ம ராவ் | ஜூன் 1991 - 16.05.1996 |
| 13. வாஜ்பாய் | 16.05.1996 - 29.05.1996 |
| 14. தேவ கவுடா | 01.06.1996 - 11.04.1997 |
| 15. ஐ.கே. குஜ்ரால் | 21.04.1997 முதல்..... |

# மருத்துவக் கண்டுபிடிப்புக்கள்

| மருத்துவத்தின் பெயர் | வருடம் | கண்டுபிடித்தவர் | நாடு |
|---|---|---|---|
| ஆயுர்வேதம் | கி.மு.2000-1000 | அத்ரேயர் | இந்தியா |
| மேற்கத்திய அறிவியல் சிகிச்சை | கி.மு.370-60 | ஹிப்போகிரட்டில் | கிரேக்கம் |
| யோகா | கி.மு.200-100 | பதஞ்சலி | இந்தியா |
| அஷ்டாங்க இருதயம் | கி.பி.500 | வாக்பாதர் | இந்தியா |
| சித்தவேகம் | கி.பி.750 | விருதுகுண்டர் | இந்தியா |
| அனாட்டாமியா | கி.பி.1316 | மோன்டினோ | இத்தாலி |
| கெமொதெரபி | 1493-1541 | பராசெல்சஸ் | சுவிற்சர்லாந்து |

# ஒரு வரிச் செய்திகள்

* கராம்பு, உலர்ந்த பூமொட்டு ஆகும்.
* குளிர்காலத்தில் குயில் கூவுவதில்லை.
* பெண்களின் கருப்பையின் எடை சுமார் 60 கிராம் ஆகும்.
* தவளை 2,3 நிமிடம் வாயைத்திறந்திருப்பின் இறந்து விடும்.
* உலகில் தேங்காய் அதிகம் விளைவது ஃபிலிப்பைன்ஸ் நாட்டில் தான்.
* வண்ணத்துப்பூச்சிகள் தன் பின்னங்கால்களால்தான் சுவையை அறிகின்றன.
* இலியட், ஒடிசி என்பன கிரேக்க நாட்டின் மிகப்பெரும்காப்பியங்கள் ஆகும்.


படிப்பகம்

www.padippakam.com




# விடிந்த இரவு



பாஸ்கரின் கையில் இருந்த தீக்குச்சி வெளிச்சம் பார்த்தீனிய புதர்களுக்கு இடையே மண்டியிருந்த இருட்டை லேசாய் விரட்டியிருக்க, அவனுடைய காலடிச்சத்தம் மறைந்து ஒதுங்கியிருந்த பட்டாபிக்கு தெளிவாகவே கேட்டது.

'பார்த்து விடுவானோ....?'

பட்டாபி இன்னமும் புதருக்குள் தன்னை நன்றாக ஒளித்துக் கொள்ள முயல- முதுகில் எதுவோ ஊர்ந்தது.

கை அணிச்சையாய் தட்டிவிட புதரில் ஏற்பட்ட சலசலப்பு அவனைக் காட்டிக் கொடுக்க பாஸ்கர் திரும்பிப் பார்த்தான்.

பட்டாபி எழுந்து ஓட முயல பாஸ்கர் அவன் மேல் ஒரு புலிப்பாய்ச்சல் பாய்ந்தான். மல்லாந்து வீழ்ந்த பட்டாபியின் மேல் தன் உடலை வைத்து அழுத்திக் கொண்டு பிஸ்டலை எடுத்தான் பாஸ்கர். மூச்சிரைக்கக் கத்தினான். "நீ தப்பிக்க முடியாது..... போக வேண்டிய இடத்துக்கு போய்ச் சேர்....."

பட்டாபியின் தொண்டைக் குழியில் பிஸ்டலின் நுனி கடினமாய் நெருடியது.

"வே... வேண்டாம்.... எ.... என்னை சுட்டுவிடாதே....! இ..... இனிமே...."

பாஸ்கர் இருட்டில் பார்த்தான்.

"சொல்லு.... இனிமே.... என்ன....?"

"உ....உ....உங்க... வழிக்கே.... வர....மாட்டேன்...."

"உன்னை எப்படி நம்பறது...?"

"ந... நம்பு...."

"நீ காலைச் சுத்தின பாம்பு.... கடிக்காமே விட மாட்டியே. உன்னைத் தீர்த்துக் கட்டினாத்தான் நானும் மைத்ரேயியும் சந்தோஷமா இருக்க முடியும். போய்ச் சேர்ந்துவிடு...."

பிஸ்டலை பட்டாபியின் தொண்டைக் குழிக்குள் நன்றாய் அழுத்திக் கொண்டு ஆட்காட்டி விரலால் ட்ரிகரை வளைத்தான்.

"வே...வே...வேண்டாம்."

பட்டாபி கத்தி திமிறிக் கொண்டிருக்கும்போதே சைலன்ஸர் பொருத்தப்பட்ட அந்த பிஸ்டர் சத்தமில்லாமல் தோட்டா ஒன்றை பிரசவித்தது.

ரத்தம் சூடாய் தெறிக்க,

பட்டாபி துடித்தான்.

துடிப்பு ஓயும் வரை அவனை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த பாஸ்கர் பின் உடம்பை விட்டான்.

பட்டாபியின் உடம்பில் இப்போது சலனமில்லை.

பாஸ்கர் எழுந்தான்.

கையில் பட்டிருந்த ரத்தத்தை பட்டாபியின் சட்டையிலேயே துடைத்து விட்டு சுற்றும் முற்றும் பார்த்தான்.

அந்த பொட்டல் வெளியில் யாரும் பார்வைக்குத் தட்டுப்படவில்லை. பட்டாபியின் உடம்பை கால்களால் புதருக்குள் தள்ளி மறைத்துவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

***

**தூக்கம்** பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்த மைத்ரேயி டெலிஃபோன் கனைக்கும் சத்தம் கேட்டு எழுந்து போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ...."

"மைத்ரேயி! நான் பாஸ்கர்..."

"பாஸ்கர் நீங்களா...? உங்க ஃபோனைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்..... போன காரியம் என்னாச்சு...."

"முற்றுப் புள்ளிவெச்சாச்சு...."

"விஷயத்துக்கா....?"

"இல்லை.... ஆளுக்கே...!"

"பாஸ்கர்..... என்ன....சொ... சொல்றீங்க....?"

"பட்டாபி இப்போ உயிரோடு இல்லை...."

மைத்ரேயி அதிர்ந்து போய் மௌனம் சாதிக்க பாஸ்கர் கேட்டான்.

"என்ன மைத்ரேயி.... பேச்சையே காணோம்?"

"நீங்க அவசரப்பட்டிட்டீங்களோன்னு எனக்கு தோணுது."

"இல்லை மைத்ரேயி...! பட்டாபியை உயிரோடு விட்டு வைச்சிருந்தா அது நமக்குத்தான் ஆபத்து... நான் தீர்க்கமா யோசனை பண்ணித்தான் என்னோட ரிவால்வருக்கு வேலை கொடுத்தேன்...."

"இருந்தாலும்..."

"இதோ பார் மைத்ரேயி.... கொலை பண்ணினது சரியா தப்பான்னு ஆர்க்யூ பண்றதுக்கு இது சரியான நேரம் இல்லை. ஃபோன்ல இதைப் பத்தி தொடர்ந்து பேசிட்டிருக்கிறதும் சரியில்லை. வீட்ல வையாபுரி மாமாவும் அவரோட சம்சாரமும் இருக்காங்களா...?"

"இல்லை... அவங்க சினிமாவுக்கு போயிருக்காங்க...."

"இனி அவங்க ஒரு மணிக்குத்தானே வருவாங்க...?"

"ஆமா..."

"சரி....நான்... இப்போ சொல்லப் போறதை கவனி. உன்னோட காரை எடுத்துக்கிட்டு உடனே ஆவடிக்கு புறப்பட்டு வா...."

"எதுக்கு...?"

"பட்டாபியோட பாடியை சரியான முறையில் டிஸ் போஸ் செய்ய வேண்டாமா?"

"பாடி இப்போ எங்கே இருக்கு....?"

"பொட்டல் வெளியில் ஒரு பார்த்தீனிய புதருக்குள்ளே தள்ளிவிட்டு வந்திருக்கேன்...."

"யாரும் பார்க்கலையே....?"

"பார்க்கிற மாதிரியா செய்வேன்?"

"காரை எடுத்துக்கிட்டு நான் கண்டிப்பா வரணுமா?"

"என்ன மைத்ரேயி..... இப்படி கேக்கிறே...? பாடியை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கொண்டு போக ஏதாவது வாகனம் வேண்டாமா...?"

"பாடியை எங்கே கொண்டு போய் எப்படி டிஸ்போஸ் பண்றது?"

"நீ மொதல்ல காரை எடுத்துக்கிட்டு வா... நேர்ல பேசிக்கலாம்."

"ஆவடியில் எங்கே வரணும்...?"

"ஆவடி பஸ் டெர்மினல் கிட்ட நான் வெயிட் பண்ணிட்டிருக்கேன் வந்துடு..."

"பாஸ்கர்...?"

"என்ன...?"

"சினிமாவுக்கு போயிருக்கிற வையாபுரி மாமாவும் அவரோட சம்சாரமும் வீட்டுக்கு திரும்பறதுக்குள்ளே காரியம் முடிஞ்சுடுமா?"

"முடிஞ்சுடும் தைரியமா வா..." பாஸ்கர் மறுமுனையில் ரிஸீவரை வைத்துவிட மைத்ரேயி சில விநாடி நேரத்துக்கு தலையில் கைவைத்தபடி உட்கார்ந்துவிட்டு ஒரு பெருமூச்சோடு எழுந்தாள்....

கார்ச் சாவியை எடுத்துக்கொண்டு வெளியே வந்து வீட்டை பூட்டிக் கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த காருக்குப் போனாள்.

●●●

**ஆ**வடி பஸ் டெர்மினஸ் அருகே ஒரு சிகரெட்டை பற்ற வைத்து புகைவிட்டபடி காத்திருந்தான் பாஸ்கர்.

நேரம் 11.30.

அந்த இரவு நேரத்தில் டெர்மினஸுக்கு எதிரே இருந்த பேக்கரி மட்டும் உயிரோடு இருக்க மற்ற கடைகள் சாத்தப்பட்டு இருந்தன. நாளைக்கு விடிகாலை புறப்பட வேண்டிய பல்லவன்கள் ஆஸ்பெஸ்டாட் ஷெல்டருக்கு கீழே தற்காலிகமாய் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தன. தன்னைத் தொட்டுவிட்டு காசு கொடுக்காமல் போகும் ரிக்ஷாக்காரனை ராத்திரி நேர ராணி ஒருத்தி நாலாந்தர மெட்ராஸ் பாஷையில் ஒரு சொற்பொழிவை நடத்திக் கொண்டிருக்க கிழவி ஒருத்தி அவளை சமாதானம் செய்தாள்.

பாஸ்கர் கையில் இருந்த சிகரெட்டை எறிந்துவிட்டு மணிக்கட்டில் நேரம் பார்த்தான்.

11.35.

'மைத்ரேயியை எங்கே இன்னமும் காணோம்?'

பொறுமையிழந்து போய் மறுபடியும் ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

சிகரெட் தன் உடம்பில் பாதியைக் கரைத்திருந்த போது தூரத்தில் ஹெட்லைட் வெளிச்சம் தெரிந்தது.

பாஸ்கர் ஆர்வமானான்.

'அநேகமாய் இது மைத்ரேயியின் காராக இருக்கலாம்!' ஹெட்லைட் வெளிச்சம் அவனை நெருங்கியது. வேகம் குறைந்து நின்றது.

காரினின்றும் மைத்ரேயி எட்டிப் பார்த்தாள்.

"வாங்க... பாஸ்கர்...."

பாஸ்கர் ஓடி வந்து காரில் ஏறிக் கொண்டான்.

"ஏன் மைத்ரேயி... இவ்வளவு நேரம்...?"

"கார்ல பெட்ரோல் கம்மியா இருந்தது. இந்நேரத்துக்கு திறந்திருக்கிற பெட்ரோல் பங்க் எதுன்னு யோசனை பண்ணி பெட்ரோலை போட்டுட்டு வர்றதுக்கு கொஞ்ச நேரமாயிடுச்சு...."

"ஏதாவது சிக்கல்ல மாட்டிக்கிட்டியோன்னு பயந்து போயிட்டேன்."

"இனிமேத்தான் சிக்கலே...! பட்டாபியோட பாடி எங்கே இருக்கு...? காரை எங்கே ஓட்டணும்...?"

"நேரா போய் லெஃப்ட்ல கட் பண்ணிக்க."

காரை நகர்த்தினாள் மைத்ரேயி.

"பட்டாபிக்கு இப்படியொரு முடிவை கொடுப்பீங்கன்னு நான் நினைக்கலை."

"வேற எப்படி நினைச்சே....?"

"பேச்சு, பணம் இந்த இரண்டையும் வெச்சு சரிக்கட்டிடுவீங்கன்னு நினைச்சேன்..."

"அவன் அப்பேர்ப்பட்ட ஜாதியில்லை. பணம் அவனுக்கு முக்கியமா பட்டிருந்தா.... நேரிடையா உன்னையே ப்ளாக் மெயில் பண்ணிப் பணத்தை கறந்திருப்பான்..."

மைத்ரேயி பெருமூச்சுவிட்டாள்.

"என்னோட கணவரை தீர்த்துக்கட்டறதுக்கு முந்தி இப்படியொரு அநாவசியமான கொலையை பண்ண வேண்டிவரும்னு நான் நினைக்கலை...."

பாஸ்கர் புன்னகைத்தான்.

"இது அநாவசியமான கொலையில்லை மைத்ரேயி. அவசியமான கொலை. பட்டாபியை மாத்திரம் நாம கண்டுபிடிக்காமே விட்டிருந்தா அவன் நமக்கு பெரிய பிரச்சனையா மாறியிருப்பான்...."

ரோடு இரண்டு பக்கமும் கிளைவிட மைத்ரேயி கேட்டாள்.

"எந்தப் பக்கம் டர்ன் பண்ணணும்?"

"ரைட்...."

கார் வலது பக்கம் திரும்பியது.

நீளமான மண்ரோடு. இரண்டு பக்கங்களிலும் வீடுகள் சொற்பமாய் தெரிந்தன.

அரை நிமிஷ பயணத்துக்குப் பின் பொட்டல் வெளி ஆரம்பமாயிற்று.

"இந்த இடம்தானா பாஸ்கர்...?"

"இதே இடம்தான்... பட்... இன்னும் கொஞ்சம் உள்ளே போய் காரை நிறுத்து."

"பட்டாபியோட பாடி எங்கே இருக்கு...?"

"இங்கிருந்து பக்கம் தான்..?"

"அங்கே கார் போகாதா?"

"போக முடியாது. வழி பூராவும் சின்னச்சின்னக் குழிகள். களிமண் பூமி வேற. சக்கரம் மாட்டிக்கிட்டா இங்கிருந்து கிளம்பறது பெரிய பாடா போயிடும்."

மைத்ரேயி காரை நிதான வேகத்தில் ஓட்டி பாஸ்கர் சொன்ன இடத்தில் நிறுத்தினாள். என்ஜினை அணைத்தாள்.

சுற்றிலும் சில்வண்டுகள் கோஷமிட்டன.

"பாஸ்கர்"

"ம்."

"இந்த இருட்டில எப்படி போய் பாடியை தேடறது?"

"இடம்தான்.... எனக்குத் தெரியுமே..."

"ஏன்... பாடியை இதே இடத்திலே அப்படியே போட்டுட்டு போயிட்டா... என்ன...?"

"மைத்ரேயி...! விபரம் புரியாம பேசாதே... போலிஸ் கையில் பாடி கிடைக்காதவரைக்கும் பட்டாபி இந்த உலகத்துல உயிரோடு இருக்கிறதாத்தான் அர்த்தம். பாடி கிடைச்சிட்டா விசாரணைங்கிற பேரில் கேஸ் எப்பவுமே உயிரோடு இருக்கும். பட்டாபியோட பாடியை சரியான முறையில் டிஸ்போஸ் பண்ணிட்டா என்னிக்குமே நமக்கு பிரச்சனையில்லை."

இருவரும் காரை விட்டு இறங்கினார்கள்.

காற்று வேகமாய் அவர்களை அலம்பியது.

"எந்தப் பக்கம் போகணும்?"

"இப்படி வா" பாஸ்கர் அந்த இருட்டில் பர்த்தீனிய செடிகளை மிதித்துக் கொண்டு நடக்க மைத்ரேயி பின் தொடர்ந்தாள்.

**(தொடர்ந்து வரும்)**



## க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

## சென்றவாரம்

பாஸ்கர் முன்னிரவில் மோட்டார் சைக்கிளில் ஆவடியிலுள்ள பட்டாபியின் வீட்டுக்குச் செல்கிறான். பெண்குரலில் ஃபோனில் மைத்ரேயியை மிரட்டுவது ஏன் என்று விசாரிக்கிறான்.

பட்டாபி தனக்கு எதுவும் தெரியாது என்றும் முதலாளி அம்மாவுடன் பேசுற அளவுக்கு விசயம் எதுவுமில்லை எனவும் மறுக்கிறான்.

மார்பில் மறைத்து வைத்திருந்த பிஸ்டலை உருவி பட்டாபிக்குக் குறிவைத்து மிரட்ட, பாஸ்கரிடம் உண்மையை ஒத்துக் கொள்கிறான்.

திடீரென ஸ்டீல் நாற்காலியை பாஸ்கரின் மேல் வீசிவிட்டு பின்கதவால் தப்பி ஓடுகிறான் பட்டாபி. தடுமாறி எழுந்த பாஸ்கர் அவனைத் துரத்துகிறான்.

இருளில் கால் இடறி பட்டாபி விழுந்துவிடுகிறான். நெருங்கிவிட்ட பாஸ்கர் அங்குமிங்கும் தேடிவிட்டு தீக்குச்சியைப் பற்ற வைக்கிறான். **இனி...**

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: கே. சுதர்சன்,
வயது: 25
முகவரி: கணபதி நகர், எல்லை வீதி, செங்கலடி.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: டி. நில்வி,
வயது: 27
முகவரி: 20, முகத்துவாரம் வீதி, கல்பிட்டி.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், புத்தகம்.



பெயர்: கே. விஜய்,
வயது: 27
முகவரி: 100. MORNELLE. CRT #1032, SCARBOROUGH-ONT, CANADA.
பொழுது போக்கு: வானொலி, பேனா நட்பு.



பெயர்: கே. தியாகராஜா,
வயது: 28
முகவரி: 13, புதிய வீடமைப்புத் திட்டம், தில்லையடி, புத்தளம்.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீவி.



பெயர்: ஜெ. முகமது நஜீப்,
வயது: 21
முகவரி: எல்.டி.ஓ. வீதி, அட்டாளைச்சேனை-6.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.



பெயர்: முகமட் றியாஸ்,
வயது: 25
முகவரி: P.O.BOX-52622, JEDDAH-21573, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். நவாப்.
வயது: 21
முகவரி: 428, பிரதான வீதி, பண்ணவ, கொபெய்கன.
பொழுதுபோக்கு: பேனாநட்பு, வானொலி.

பெயர்: எம். ஈஸாக்,
வயது: 20
முகவரி: 25, ஜனதா மாவத்தை, கந்தளாய்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, உதைபந்து.

பெயர்: ஆர். பாண்டியன்,
வயது: 21
முகவரி: லோவர் லோரன்ஸ், நோர்வூட்.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: பி. சுரேஷ்குமார்,
வயது: 21
முகவரி: வடக்குப் பூண்டுலோயா, கீழ்ப்பிரிவு, பூண்டுலோயா.
பொழுது போக்கு: கிரிக்கெட்.

பெயர்: ரி. தேவராஜா,
வயது: 31
முகவரி: FROBURG STR.30, 4600 OLTEN, SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. இம்ரான்,
வயது: 20
முகவரி: 240, கண்டி வீதி, கம்பளை.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள். **இனி...**

# கனவு மெய்ப்பட வேண்டும்

**அத்தியாயம் 25**

**பிரபஞ்சன்**

"சரி, நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். இனி நடக்க வேண்டியதைக் கவனிப்போம். முறையான விவாகரத்தை அவனிடமிருந்து நாம் பெற்றாக வேண்டும். பெற்றால்தான் உனக்கென்று ஒரு வாழ்க்கையை, சுதந்திரமான வாழ்வை அமைத்துக்கொள்ள முடியும்."

"விவாகரத்துக்குச் சில காரணங்களை நாம் சொல்லியாக வேண்டுமே, அப்பா, என்ன செய்யலாம்?"

"கொடுமைப்படுத்துகிறான் என்பது ஒன்றே போதும். நம் இந்திய சட்டங்கள் கண்ணோ, காதோ அற்றவை. சட்டங்களும் ஆண்கள் உருவாக்கியவைதானே? அது பெண்ணுக்கு என்ன நியாயம் செய்ய முடியும்? ஒருவனுக்கு ஒருத்தியும் ரத்து கோரி, நீதி மன்றத்திற்கு வந்தால்,



அதை ஏற்றுக்கொண்டு ரத்து செய்வது தானே, நீதிமன்றம் செய்ய வேண்டிய கடமை!

அதை விட்டு, ஆறு மாசம் கழித்து வாருங்கள். பிரச்சனையை நிரூபிக்க முயலுங்கள். சமரசமாய்ப் போய்விடுங்கள். என்றெல்லாம் கீழ்த்தனமாய்ப் பேசுகிற சட்டம், இந்த தேசத்தில் இருக்கிறதே!"

பிரகாரத்தில் இருட்டு பரவியிருந்தது.

"என் வாழ்க்கையை அதன்பிறகு எப்படி அப்பா அமைத்துக் கொள்வது?"

"உன்விருப்பம் போல் அமைத்துக் கொள், அம்மா. நீ நிறையப் படித்திருக்கிறாய். சம்பாதிக்கிறாய். நீ யாரையும் நம்பி வாழ வேண்டிய அவசியம் என்ன? உனக்குச் சந்தோஷம் தரும் காரியங்களில் ஈடுபடு. நல்ல புத்தகங்களைப் படி. ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியையும், இரவில் நினைவு கூர்ந்து எழுது. உன் வாழ்க்கைப் பயணத்தில் நல்லவன், நம்பகமானவன் என்று யாரையேனும் நீ சந்திக்க நேர்ந்தால், அவனைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள். திருமணம் செய்து கொள்ளத் தயக்கம் ஏற்பட்டால், திருமணம் வேண்டாம். அவனுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்!"

அப்பா அவளுக்கு மிகவும் அந்தரங்கமான ஆப்த சினேகிதர் போன்ற மனிதர் தான். எனினும், திருமண வாழ்க்கை பற்றிப் பேச அவளுக்குக் கூச்சமாகவே இருந்தது.

"குழந்தையைக் கேட்டு அவர் கோட்டுக்குப் போவாரே, அப்பா...."

"போவான்தான். குழந்தைகள் கணவன், மனைவி மூலமாகத்தான் பூமிக்கு வருகின்றன. எனினும் பெண்ணே அதைப் பிரசவிக்கப் பெரும் பாடுபட்டவள். எனினும், சட்டம் அதையெல்லாம் பார்க்காது. பொதுவாக நம் சட்டங்கள், நூறு வருஷங்கள் பின் தங்கியவை. முற்போக்கு எண்ணங்களுக்கும், இருபத்தியோராம் நூற்றாண்டுக்கும் இந்தச் சட்டங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆகவே, சட்டங்கள் குறித்தெல்லாம் நீ கவலைப்படாதே. உன் ஆத்மாவுக்கு எது மகிழ்ச்சி தருகிறதோ, அதுவே உனக்குச் சட்டம். இந்த ஆத்ம சட்டத்துக்குக் கட்டுப்பட்டு உன் வாழ்க்கையை நடத்து."

"அப்பா, இந்த விஷயத்தை எப்படி அம்மா வாங்கிக் கொள்வாள். எனக்குப் பயமாக இருக்கிறதே....."

"நான் அவளுக்குப் பக்குவமாக எடுத்துச் சொல்கிறேன். அவசரப்பட்டு நீ ஏதாவது அவளிடம் சொல்லிவிடாதே..."

"சரிப்பா."

"குழந்தைகள் எங்களுடன் இருக்கட்டும்."

"சரிப்பா."

"கொஞ்ச நாளைக்கு இங்கே இரு; நன்கு சிந்தி; அப்புறம் ஒரு முடிவை எடு."

"சரிப்பா."

"அப்பா. நான் தனியாக வாழ முடியுமாப்பா?".

"நாம் எப்போதும் தனி தானேம்மா. தந்தை, மகள், கணவர், மனைவி, தாய், குழந்தை என்றெல்லாம், சமூகச் சௌகர்யத்துக்காக நாம் முறைகளை ஏற்படுத்திக் கொண்டாலும், நாம் எப்போதும் தனி தானேம்மா. எனக்குத் தனியாக அறிவும், வயிறும் உள்ளது போல உனக்கும் இருக்கத்தானே இருக்கிறது, என்றால், என்ன அர்த்தம்? நீ தனியாக சிந்திக்க வேண்டும் என்பதுதானே? நீ தனியாக உன் விருப்பத்துக்கு உண்ண வேண்டும் என்பது தானே? உன் இரசனை, உன் சிந்தனை, உன் சந்தோஷம் இந்த மூன்றும்தானே உயர் வாழ்க்கையின் மூலப் பொருள்கள். இந்த மூன்றுமே உன்னை வழி நடத்திச் செல்வதாக இருக்கட்டும். ஆகவே பிறருக்காக வாழும் வாழ்க்கையை, பிறர் மதிப்பீட்டுக்கு மதிப்புத் தரும் வாழ்க்கையை வாழ என்றும் ஆசைப்படாதே. உண்மையில், அதுதான் தோல்வி என்பதே."

"அப்பா! சமூகம் என்னைப் பழிக்காதா?"

"சமூகம் என்பது என்ன? இந்த உலகத்துக்கு மானுடர்களின் மொத்தத் தொகுதியும் அல்லவா? உலகத்துக்கு எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன கவலைப்பட. உன் வாழ்க்கையைப் பற்றிப் பேச அதுக்கு நேரம் இல்லை. அப்புறம் உன்னைக் குறித்துப் பேசுகிற ஒரு நூறு பேர்களைப் பற்றிக் கவலைப்படாதே. பொதுவாக, நான் பார்த்த வரை, கற்பு, ஒழுக்கம் பேசுகிற பலரும் தனி வாழ்வில் அயோக்கியர்களே! ஆகவே, அயோக்கியர்களைப் பற்றிக் கவலைப் படாதே."

கோபுர விளக்கின் ஒளிபரவி, பிரகாரம், சுற்றுச் சூழல் அனைத்திலும் வெளிச்சம் பரவியதாக உணர்ந்தாள் சுமதி.

சுமதி தன் அலுவலகத்தில் வந்து அமர்ந்தாள்.

பல நாட்களுக்குப் பிறகு, தன் இருக்கையில் அமர்கையில், அவள் மனம் குதூகலித்தது. தலைமைச் செயலகத்தில் அவள் அறை அமைந்திருந்தது. மூன்றாவது கோடி அறை. ஆகவே, காற்றும், வெளிச்சமும் கூசிக்கொண்டு அறைக்குள் நுழைந்தன. வெளிர் நீல நிற திரைகளால் ஜன்னல் மூடப்பட்டிருந்தது.

இந்த வெளிர் நீல நிறம் அவளுக்கு மிகவும் பிடிக்கும். கண்ணுக்கு மிக இனிமையானது அது. மனசுக்கு மிகுந்த ஆறுதல் தர வல்லது. அதே நிறத்தில், மேஜைக்கும் விரிப்பை ஏற்படுத்தியிருந்தாள் அவள். சுவருக்கும் அதே வண்ணத்தில் சுண்ணாம்பு அடிக்கச் செய்திருந்தாள்.

இது விஷயமாகச் சிறு பிரச்சனைகூட அப்போது ஏற்பட்டிருந்தது. செயலகத்தில் இருக்கும் அத்தனை அறைக்கும் ஒரே மாதிரியாக-வெளிர் பச்சை அடிக்கும்படி 'டெண்டர்' விட்டிருந்தது அரசு. பச்சை வண்ண வாளியைத் தூக்கிக் கொண்டு ஒரு சுண்ணாம்பு அடிக்கிற ஆள் அவள் அறைக்குள் நுழைகையில் அவனைத் துரத்தி அடித்தாள் அவள். தன் சொந்தப் பணத்தில் ஆகினும் தனக்குப் பிடித்த வண்ணத்தையே தன் அறைக்கு அடிக்க வேண்டும் என்பதில் அவள் கண்டிப்பாய் இருந்தாள். அதை நிறைவேற்றவும் செய்தாள்.

வேலை செய்யும் இடம் அவள் வாழ்கிற இடம் என்று நம்பினாள். ஏனெனில் அவள் தன் பணியை நேசித்தாள். அரசாங்கம் தனி அறையும், அழகிய இருக்கைகளையும் மேசையையும், இனிய திரைச் சீலையையும், மிகச் சுத்தமான முகம் பார்க்கும் கண்ணாடியும், காரும், டிரைவரும் ஒரு வேலையாளும், அனைத்துக்கும் மேலே கை நிறையச் சம்பளமும் தருவது அவளுக்கு மிகுந்த கௌரவ உணர்வை ஏற்படுத்தவே செய்தது.

அரசு மூலமாக மக்கள் தருகிற சம்பளமே அது என்பதனையும் அவளால் உணர முடிந்தது. ஆகவே சம்பளம் தருகிற அந்த மக்களுக்கு நாணயமாகப் பணிசெய்ய வேண்டும் என்கிற உணர்வு அவளுக்கு எப்போதுமே இருந்தது.

பல நாட்கள் தாம் நேசிப்பவரைப் பிரிந்த பிறகு, ஒன்று சேரும் அந்த அரிய கணத்தைப் போல- அவள் அந்த நாற்காலியில் அமர்ந்த கணம்- இருந்தது.

அவளுக்குள்ளே ஏற்பட்டிருந்த பெருமிதத்தைத் தாண்டிக் கொண்டு அவளுக்கு கணேசனின் முகம் நினைவுக்கு வந்தது. இந்த வேலையை விட்டு விடச் சொல்லி அவன் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது வேறு எதற்காக இருக்கும் என்கிற யோசனை அவளுக்கு ஏற்பட்டது. காரணம் ஓரளவுக்கு புரியவும் செய்தது. இந்த உத்தியோகம் காரணமாக அவளுக்கு ஏற்படும், பெருமித காரணத்தால் என்பதை அவள் உணரத் தொடங்கிய அந்தக் கணத்தைப் பற்றி அவள் சந்தோஷப்பட்டுக் கொள்ளவும் செய்தாள்.

அந்த நாற்காலியை அவள் மிகவும் நேசித்தாள். ஏனெனில் அது அவளுக்குச் சுயகௌரவத்தை, உழைப்பின் சிறப்பை, யாருக்கும் பொருளாதாரத்தில் அடிமைப் படாத சந்தோஷத்தைத் தருவதாக இருந்தது. இனி மிஞ்சி இருக்கும் வாழ்நாளை, அந்த நாற்காலியின் ஆதரவினாலும், தன் ஆத்மாவின் பலத்தாலும், வாழ்ந்து விடுவது என்று தீர்மானித்தாள்.

அப்படி நினைக்கையிலேயே, அவள் கண்கள் கலங்கின. மனம் சலனமற்று, மென்மையுற்று, இன்பமுற்று இருப்பதாக அவள் நினைத்தாள். அவள் எப்போதும் அப்படிப் பணியில் தன்னை ஆழ்த்திக் கொண்டு, ஓய்வு நேரங்களைப் புத்தகத்திலும், அவளுக்குப் பிடித்த இசை காசெட்டிலுமாகக் கழித்தவள்தான். இடையில் ஏற்பட்ட கெட்ட கனவைப் போல் கணேசன் வந்து சேர்ந்தான்.

சுமதி தலையை உலுக்கிக் கொண்டாள்.

"கெட்டதை மற" என்றது மனம். இனி கெட்ட பழைய நினைவுகளுக்கு மனசைக் கொடுக்கக்கூடாது என்று திண்ணமுற நினைத்துக் கொண்டாள். மேஜையின்மேல் இருந்த அழைப்பு மணியை அடித்து, உதவியாளரை அழைத்தாள்.

ஒரு சூடான காபிக்கு ஏற்பாடு செய்து விட்டு, பார்க்கப் படாமலே கிடந்து தூசு படிந்திருந்த பைல்களை எடுத்து தூசு தட்டிப் படிக்கத் தொடங்கினாள். காலை பத்தரை மணிபோல் தன்பணியைத் தொடங்கிய அவள் பனிரெண்டரை மணி வரை பைல்களைப் படித்துக்கொண்டிருந்தாள். குளிர்ந்த நீரை வரவழைத்துக் குடித்தாள். ஜன்னல் ஓரமாக வந்து நின்று வெளியே பார்த்தாள். சுகமான ஜில்லெனும் கடற்காற்று அவள் முகத்தில் வந்து கவிந்தது.

அவள் மனம் நிறைந்தது. வாழ்க்கையைத் தனித்து நேர் நின்று சந்திக்கும் உற்சாகம் தனக்கு ஏற்பட்டிருப்பதாக அவள் நம்பினாள். அந்த நேரத்தில் அவள் அறையில் இருந்த இண்டர்காம் அவளை அழைத்தது.

அழைத்தது அவள் மேல் அதிகாரி சபேசன்தான்.

ஒரு குறிப்பிட்ட எண் பைலை எடுத்துக்கொண்டு தன்னைக் காண வரச் சொல்லி உத்தரவிட்டார் அவர். சுமதி உடன் அந்தப் பைலை எடுத்துக்கொண்டு அவர் அறையை நோக்கி நடந்தாள்.

சபேசன் என்கிற சுமார் நாற்பத்தி ஐந்து வயதான, காதோரம் நரைத்த அந்த மேல் அதிகாரி, இயல்புக்கு மாறாக அதிகமாகச் சிரித்து, அவளை வரவேற்றதோடு அவளை அமரச்சொல்லி வேண்டினார். சுமதி அமர்ந்ததும் அவர் கேட்டார்,

"என்ன சுமதி. நான் கேள்விப்பட்டது உண்மையா?"

"எது சார்?"

"கணேசனை விட்டு நீங்கள் விலகி விட்டதாகவும், விவாகரத்து வழக்குக்குப் போய் இருப்பதாகவும் கேள்விப்பட்டேனே."

"ஆமாம் சார். நீங்கள் கேட்டிருந்த பைலைக் கொண்டு வந்திருக்கிறேன் சார்."

"அது இருக்கட்டும். இப்போ தனியா இருக்கிறாயா?"

"ஆம் சார்."

"கஷ்டமாக இல்லையா?"

"புரியவில்லை சார்.... பைல் கொண்டு வந்திருக்கிறேன்."

"எப்போது 'டூர்' போகப் போகிறீர்கள்?"

"அடுத்த வாரம் சார்."

"எந்த ஊருக்கு?"

"கோவைக்கு சார்."

"அப்படியே ஊட்டி போய் வாருங்களேன்."

"அப்படி ஒரு யோசனை இருக்கு சார்."

"டூருக்கு நானும் வரலாமா?"

"வரலாம் சார். ஆனால்...."

**(தொடர்ந்து வரும்)**

---

# எவ்வளவு பெரிய தப்பு?

**ரூபாராணி**

வெட்டுப்போன பனை மரத்தை நெடுநேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் சிவகாமி. அவள் பார்வை மங்கியிருந்தது. அவளுக்கு வயது எழுபதைத் தாண்டிவிட்டது. தலையில் ஒரு முடிகூடக் கறுப்பாயில்லை.

யன்னலூடாகத் தெரிந்த அந்தப் பனை மரத்திலிருந்து அவள் பார்வையை அகற்றாமல் அடித்து வைத்த ஆணியாக அசையாமல் உட்கார்ந்திருந்தாள். இந்தப் பனை மரம் அது மரணிக்கும் வரை மனிதருக்கு எவ்வளவு பயன்பட்டிருக்கும் இப்போ அது யாருடைய கவனத்தையும் ஈர்க்கவில்லை.... என்று எண்ணியதும் சிவகாமியின் கண்கள் சிவந்தன.

படலை திறக்கும் சத்தம் கேட்டுப் பார்வையைத் திருப்பினாள் சிவகாமி. பாண் ஒரு றாத்தலைப் பையில் போட்டு நடை தளர்ந்து வந்தவர் வேறுயாருமல்ல சிவகாமியின் கணவர் நடேசன். நடேசன் எண்பது வயதை எட்டியவர். ஆஸ்துமா நோய் அவர் கூடவே பிறந்தது. அவருக்கு மூச்சு வாங்கியது. சிவகாமியின் அருகில் கிடந்த சாய்மனையில் வசதியாக நிமிர்ந்து படுத்தார்.

சிவகாமிக்குச் சட்டென்று சித்தாலெப தைலத்தின் ஞாபகம் வந்தது. அதை எடுத்து வந்து நடேசனின் மார்பிலும் முதுகிலும் நன்றாகத் தேய்த்து விட்டாள். அது அவருக்கு இதமாக இருந்தது. அவர் கண்களை மூடிக்கொண்டார் சிவகாமி கால்களை நீட்டி அவர் அருகில் உட்கார்ந்தாள்.

"இந்நேரம் குட்டிக் கண்ணன் சாப்பிட அடம் பிடிப்பான்.

பெரிய மகளுக்குப் பொறுமையே இல்லீங்க அவன அடிக்கிறாளோ என்னவோ? பாவம் அவள்தான் என்ன செய்வாள்? எல்லா வேலயும் இப்ப அவதலையில. நான் இருந்தப்போ கஷ்டமில்லைத்தான்." சிவகாமி நடேசனின் பக்கம் திரும்பினாள். அப்போதான் அவள் உணர்ந்தாள் தான் மட்டும் தனியாப் பேசிக்கொண்டிருப்பதை.

"என்னங்க நான் சொன்னதெல்லாங் கேட்டீங்களா?" சிவகாமி நடேசனை அசைத்தாள். அவர் மூடிய கண்களைத் திறந்தார்.

"எல்லாம் கேட்டேன். எனக்குக் களைப்பாயிருக்கு சிவகாமி. என்னைக் கொஞ்சம் தனியா இருக்கவிடு" என்று சொல்லிய நடேசன் நீண்டதோர் பெருமூச்சு விட்டார். அவருடைய இமைகள் தாமாகவே மூடிக் கொண்டன. சிவகாமி எழுந்து ஊறப் போட்ட உடுப்புகளைக் கழுவக் கிணற்றடிப் பக்கம் சென்றாள்.

நடேசனுக்குத் தூக்கமும் இல்லை. களைப்பும் இல்லை. சிலவாரங்களுக்கு முன் நடந்து முடிந்த சோக நாடகமொன்றை மீண்டும் அவர் மனத் திரையில் போட்டுப் பார்த்தார்.

"உன்ரை அம்மா அப்பா தனியா வீடெடுத்து இருக்கிறதுதான் நல்லது. இத மெதுவா அவங்க காதில போடு. இல்லாட்டா நான் சத்தமாய்ச் சொல்ல வேண்டி வரும்." இதைச் சொன்னது நடேசனின் மருமகன் சுதாகர்.

"உங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. இந்த வயசான காலத்தில அவங்க எப்பிடித் தனியாக இருக்க முடியும்?" பதில் கேள்வி கேட்டவள் நடேசனின் மகள் சுகன்யா.

சுதாகர் பாம்பாகச் சீறினான். "இரண்டு பேருக்கும் வயசானதாலதான் சொல்றன். இரவுபூரா உன்ர அப்பா கொல்லுக் கொல் லுன்னு இருமியபடி, தூங்கவா முடியுது? நல்லது போல கெட்டது நடந்தா இதுக்கு யார் பொறுப்பு?" சுதாகரின் குரல் அதிர்ந்தது.

சிவகாமி கல்லில் துணியை ஓங்கியடிக்கும் சத்தம் நடேசனின் நெஞ்சில் சவுக்கடியாய் விழுந்தது. மீண்டும் சுகன்யா தோன்றினாள்.

"நல்லதைப் போல் கெட்டது வந்தா நாமதானே பொறுப்பெடுக்கவேணும்?"

"நமக்கென்ன தலை விதியா?" சுதாகர் உறுமினான்.

"தலைவிதி எண்டு எப்பிடிச் சொல்லீங்க அவையின்ர வீட்டிலதான் இருக்கிறம்."

சுதாகர் ஏளனமாய்ச் சிரித்தான். "ஏய் இந்த வீடு சீதனமாய் எனக்கு எழுதியது.



எழுதிக்குடுத்தா கழுத்தைப் பிடித்துத் தள்ளு மட்டும் இருந்திடறதா?"

"சே, என்ன நன்றிகேடு" சுகன்யா அழுதாள்.

நடேசனுக்கு இந்தக் காட்சியைத் தொடர்ந்து பார்க்கப் பிடிக்கவில்லை. சொந்த பந்தங்களை அறுத்தெறிந்து விட்டு தொலைவில் உள்ள ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து வந்து விட்டார். தன்னுடைய பென்ஷன் பணத்தை நன்றியுடன் நினைத்தார் நடேசன். தான் கட்டிய வீட்டில் இருக்கப் பிராரத்தமில்லை. பேரக்குழந்தையை அள்ளி அணையக் குடுத்து வைக்கவுமில்லை. இளையமகள் லண்டனுக்குப் போய் இரண்டு வருஷம் இரண்டே ரெண்டு கடிதங்கள். இதற்குமேல் அவளிடமிருந்து எதுவுமே எதிர்பார்க்க முடியாது. நினைவுகள் நடேசனைப் பிழிந்தெடுத்தது.

சிவகாமி ஈர உடுப்புக்களைக் கொடியில் உலரப்போட்டுக் கொண்டிருந்தாள்.

"சிவகாமி இங்க கொஞ்சம் வாயேன்." நடேசனின் நடுங்கிய குரல் கேட்டு அவள் என்னவோ ஏதோவென்று ஓடிவந்தாள்.

"சிவகாமி நான் பெரிய தப்புப் பண்ணிற்றன். தப்புப் பண்ணிற்றன்." நடேசனின் நாக்குளறியது.

சிவகாமி பதறிப் போனாள். "இப்போ உங்களுக்கு என்ன வந்திற்றிது?" பரிவோடு அவர் நெற்றியில் பூத்திருந்த வியர்வைத் துளிகளை அவள் தன் முந்தானையால் ஒற்றினாள்.

நடேசன் சிவகாமியின் கைகளைச் சிக்கென்று பற்றிக் கொண்டார்.

"சிவகாமி பிள்ளைகளுக்காக நாம உள்ளதெல்லாம் கொடுத்தம். நமக்கெண்டு எதுவுமே வைக்கலியே அது எவ்வளவு பெரிய தப்பு?

பெரிய மகளுக்கு வீட்டைச் சீதன உறுதி எழுதுறப்போ சீவிய உரிமை வச்சு எழுதாதது எவ்வளவு பெரிய தப்பு?" நடேசன் குழந்தையைப் போல் அழுதார். சிவகாமியின் கண்களிலும் நீர் வடிந்தது.




படிப்பகம்

www.padippakam.com

# விடியாத பொழுதொன்றில்....

மருதூர் அலிக்கான்

**வெளியே பார்த்தான். தெரு லாம்பின் வெளிச்சத்தில் ஒரு பெரிய வாகனம் தெரிந்தது.**

அவன் இனித் தூங்க முடியாது. ஒலிபெருக்கியின் அறிவித்தல் தூக்கத்தைக் கலைத்துவிட்டது. அறையில் இன்னும் இருள் தெரிந்தது. வீதியில் நின்று கொண்டிருக்கும் வாகனம் ஒன்றின் உறுமல் மிகத் தெளிவாகக் கேட்டது. மீண்டும் ஒலிபெருக்கியின் அறிவித்தல்.

"பெண்களைத் தவிர, பதினைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் எல்லோரும் தங்கள், தங்கள் அடையாள அட்டைகளோடு பொது விளையாட்டு மைதானத்திற்கு வர வேண்டும்..... வரத் தவறும் ஆண்கள் எல்லோரும் கைது செய்யப்படுவார்கள்!"

அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மெல்ல எழுந்து சென்று ஜன்னலின் இடுக்கால் வெளியே பார்த்தான். தெரு லாம்பின் வெளிச்சத்தில் ஒரு பெரிய வாகனத்தின்



உருவம் தெரிந்தது. உள்ளே இருந்தவர்கள் கொஞ்சம் மங்கலாய்த் தெரிந்தார்கள். அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் எண்ணைக் கசிவாய் மினுங்குகின்றன. அவர்கள் சிரிப்பது கூட லேசாகக் கேட்டது.

அவனுக்குப் பயமாக இருந்தது. வீட்டுக்குள் வந்துவிடுவார்களோ என்று ஒரு பீதி மனதுள் படிந்தது. இதயம் 'திக்' திக்கென அடித்துக் கொண்டது.

மீண்டுமொருமுறை வெளியே பார்த்தான். வாகனம் உறுமிக் கொண்டு புறப்பட்டது. அதன் டீசல் மணம் நாசியின் அருகே...

அவர்கள் ஆலைமரத்துச் சந்தியைக் கடந்து ஹிஜ்ரா வீதிக்குப் போயிருக்க வேண்டும். ஒலிபெருக்கியின் சத்தம் கொஞ்சம் குறைவாகக் கேட்டது.

லைட் சுவிட்சைப்போட்டான். தூங்கிக் கொண்டிருந்த உம்மாவும், ராத்தாவும் எழுந்திருந்துகொண்டு பேந்தப், பேந்த முழிக்கிறார்கள். உம்மா சோர்ந்துபோய் இருப்பதைக் காண மனம் தளர்ந்து போயிற்று.

தம்பியை எழுப்பிக் கொண்டிருக்கும் ராத்தாவின் முகத்திலும் கவலை தெரிகிறது... கொச்சிப் பழம்போல் சிவந்திருக்கும் விழிகள் எதையோ சொல்லுகின்றன....அவன் அவர்களை தைரியப்படுத்திவிட்டு நேரத்தைப் பார்த்தான். மூன்றரையைக் கடந்துவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் நன்றாக விடிந்து விடும்.

சுற்றிவர உள்ள வீடுகளிலும் வெளிச்சம் தெரிந்தது. அவர்கள் மெதுமெதுவாக கதைக்கும் சத்தங்கள் கூட காற்றில் கலந்து வருகிறது. இப்போது அந்த தெரு பரபரப்படைந்து வருவதை உணர முடிகிறது.

பக்கத்து வீட்டுக்காறர் அவனைத் தேடி உள்ளே வந்தார்.

"எனைக்கிட்ட அடையாள அட்டை இல்லியே தம்பி... என்ன செய்யிற தெண்டே புரியலியே..." சொல்லும் போதே அழுதுவிடுவார் போலிருந்தது. அவனுக்கும் அதே நிலைதான். யார் யாருக்கு ஆலோசனை சொல்வது என்ற பேதம் இல்லாமல் இருக்கிறது. அவரை அழைத்துக் கொண்டு வீதிக்கு வந்தான்.

வானத்தில் கொஞ்சம் வெள்ளை தெரிந்தது. அங்கொன்றும், இங்கொன்றுமாய் வெள்ளிகள் கண் சிமிட்டின... ஆட்காட்டி குருவியொன்றும் கீச்சிட்டது. மனதிற்கு சோகமான கீச்சிடல்.

மீன்பிடிக்கச் சென்ற சிக்கந்தர் காக்கா வீடு திரும்பிவிட்டார். தொழிலைத் தொடர முடியாத அவலநிலை அவருக்கு...

"ஆமி ஊரைச் சுற்றி நிக்றான்கள்ரா தம்பி.... றோட்டால போக விடுறான்களில்ல..." சொல்லிவிட்டு மிக வேகமாக மறைந்து விட்டார்.

பக்கத்து வீட்டுக்காறர் எதையோ நினைத்திருக்க வேண்டும். திரும்பவும் அவருடைய வீட்டுக்குப் போனார். அவனும் உள்ளே வந்தான்.

சுபஹுக்கான பாங்கு கேட்டது. தொழப் போக வேண்டும். போவதற்கான சூழ்நிலை இல்லை. "வெளியாலபோக வேணாம்." உம்மா சொன்னா....அவனுக்கும் அது சரியாகப்பட்டது.

முன்வீட்டு றைகானா ராத்தா வந்திருக்க வேண்டும். குசினிக்குள் குரல் கேட்டது.

"ஒட்டமாவடியிலும் இப்படித் தானான்டி... ஆம்புளையெல்லாம் ஒரு வெடத்தில ஆக்கிப்போட்டு... ஆயுதங்களையும், பொடியன்களையும் தேடினவன்களாம்..." கேள்விப்பட்ட ஒரு விஷயத்தைச் சொல்லி எல்லோரையும் பீதியடைய வைத்தாள்.

"இளந்தாரிப் பிள்ளையளையெல்லாம் புடிச்சிட்டுப் போவான்களாம்..." சொல்லி விட்டு விம்மினாள். அவளை பிடரியில் பிடித்து தள்ள வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

தம்பியை வெளிக்கிடச் சொன்னான். பக்கத்து வீட்டுக்காறர் திரும்பவும் வந்தார். முன் வீதியால் சிலர் போய்க்கொண்டிருந்தார்கள்.

"என்ன தம்பி! நாங்களும் போவோமா...?" அவர் கேட்டபோது குரலில் தொய்வு தெரிந்தது.

"இன்னும் கொஞ்சம் நல்லா விடிஞ்சிரட்டுமே.... நமக்கென்ன அவசரம்?.." சொல்லிவிட்டு திரும்பவும் வீதிக்கு வந்தான். இன்னும் பலர் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களிலெல்லாம் சோகம் ஒரு கீறலாகத் தெரிந்தது. அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க வயோதிபர் கூடப் போய்க் கொண்டிருந்தார். அவனுக்கு, அவர்மேல் அனுதாபமாக இருந்தது.

படையினரின் வாகனங்கள் போவதும், வருவதுமாக இருக்கின்றன. துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் தொடர்கின்றன. சந்திக்கு சந்தி இராணுவம் நிற்பதாக சென்று கொண்டிருப்பவர்கள் சொல்லிக் கொண்டு போகின்றார்கள்.

நன்றாக விடிந்துவிட்டது. இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தாழப் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஹெலிக்கொப்டருக்கு "குட்பை" சொல்லும் பிள்ளைகளின் ஆரவாரத்தைக் காணவில்லை.

"போவோம்...." என்றான்.

"சரி..." என்றார் பக்கத்து வீட்டுக்காறர்.

தம்பியை வரச்சொல்லிவிட்டு வெளியே நடந்து கொண்டிருந்தபோது திரும்பிப் பார்த்தான். உம்மா கவலையுடன் பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. ■

# கவிதைகளும் கணை தொடுக்கும்



அ. பர்ஹானா

**"காதலிப்பதாக நடித்துவிட்டு இன்னொருத்தி பின்னால் சென்றுவிட்டான். இவள் நெய்யா உருகினாள்...."**

வினோதாவின் அறைக்குள் நுழைந்தாள் காயத்திரி. வினோதா தன்னைக் கவனியாமல் எழுதிக் கொண்டிருப்பதை பார்த்ததும் பின்புறமாகச் சென்று அவளது கண்களை இறுக மூடினாள்.

"யாரு.... யாரது? ஐயோ, வலிக்குது விடுங்களேன்" என்று வினோதா கத்த "நீ தான் பெரிய அறிவாளியாச்சே! யாருன்னு கண்டுபிடி பார்ப்போம்!" பதிலுக்கு இவள் கூறினாள். "காயத்திரி தானே?" என்றவளின் கன்னத்தைக் கிள்ளியவாறு "சாட்சாத் காயத்திரிதேவி தான், எப்படிக் கண்டு பிடிச்சே?" கேட்டுக் கொண்டே கைகளை விலக்கினாள்.

"ப்பூ... இது பெரிய விசயமா? உன் கட்டைக் குரல் தான் காட்டிக் கொடுத்துடுமே!" கேலியாகச் சொன்னாள், "உன்ன.." என்று கையை ஓங்கிக் கொண்டே சங்கீதமாய்ச் சிரித்தாள் காயத்திரி. இரு மாதங்களின் பின் சந்தித்த தோழியர் இருவரும் சந்தோசத்துடன் சம்பாஷணையில் ஈடுபட்டனர்.

"இரு காயா, நான் குடிக்க ஏதாவது கொண்டு வாறன்" வினோதா உள்ளே சென்றுவிட்டாள். அறையை நோட்டமிட்ட காயத்திரியின் கண்களை காற்றில் படபடத்தவாறு மேஜை மேல் கிடந்த காகிதங்கள் கவர்ந்திழுத்தன. எழுந்து சென்று அவற்றை எடுத்துப்பார்த்தாள். அத்தனையும் கவிதைகள் என்று பார்த்த மாத்திரத்தில் புரிந்தது. விழிகளைச் சுழல விட்டாள்.

*ஓராயிரம்*
*கருநாகங்கள்*
*ஒன்றாகத் தீண்டியதாய்*
*உந்தன்*
*நயவஞ்சகம் என்னில்*
*நஞ்சூட்டுகிறது!*

ஒன்றல்ல, இரண்டல்ல அத்தனையிலும் சோகம் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. காயத்திரி வாசித்துக் கொண்டு இருக்கும் போது வினோதா கையில் ட்ரேயுடன் வந்தாள்.

"என்ன, வினோ இது உனக்கென்ன லவ் ஃபெய்லியரா? கவிதை எல்லாம் இப்படியிருக்கு?" ஆச்சரியம் கலந்த குரலில் வினவினாள்.

"என்னடி இப்படி கேட்குறே? உனக்குத் தான் தெரியுமே இதுவரை நான் யாரையும் காதலிக்கவில்லை எண்டு?"

"அப்போ, எப்படி வினோ காதல் தோல்விய அனுபவிச்சி எழுதின மாதிரி இத்தன உருக்கமா எழுதியிருக்கிறே?" ஆவலுடன் கேட்டாள்.

"இதெல்லாம் என் ஃப்ரெண்ட் ஒருத்திக்காக எழுதினது காயா. அவளோட காதல் காயங்களுக்கு என்னால முடிஞ்ச கவிதைக் களிம்புகள். என்ன புரியலயா? சொல்றேன் கேளு. அவளை ஒருத்தன் ஒரு வருசமா காதலிச்சிட்டு... இல்ல, காதலிப்பதா நடிச்சிட்டு இன்னொருத்தி பின்னால போய்ட்டான். ஆனால், இவள் அவனையே நினைச்சு நெய்யா உருகுறா. என்ன சொன்னாலும் அவன மறக்க மாட்டேன்கிறா. அவளோட கண்ணீர என்னால துடைக்க முடியல. அதனால, அந்தக் கண்ணீருக்கு காரணமானவன என் எழுத்தால துடிக்க வைக்க முடிவு செஞ்சேன்." உணர்ச்சிவசப்பட்டு பேசினாள் வினோதா.

"வினோ, உன் ஆத்திரம் எனக்குப் புரியுது. ஆனால் எங்கேயோ இருக்கிற அவனிட்ட உன் எழுத்துக்கள் சென்று அடையுமெண்டு நம்புறியா?" காயத்திரி வினாவரைந்தாள்.

"ஏன் முடியாது காயா? இந்தக் கவிதைகள் எல்லாம் பேப்பருக்கு அனுப்புறதுக்குத்தான். அவன் பார்க்கிறானோ இல்லையோ அவனப் போன்ற ஆயிரமாயிரம் துரோகிகள் பார்த்து தாங்களும் இப்படியொரு துரோகத்தை செய்ததை நினைச்சு பார்த்தாங்கன்னா அந்த நினைவுகளே அவனையும் தண்டிச்ச மாதிரித்தான் காயா. இதுக்காகத்தான் நான் எழுதுகிறேன்." சற்று நிறுத்தினாள். அவள் விழிகள் கண்ணீரில் நனைந்திருந்தன.

"யூ ஆர் க்ரேட் வினோ, உன்ன என் ப்ரெண்டுன்னு சொல்லிக் கொள்றதுல நான் பெருமைப்படுறேன்; உன் நோக்கம் நிறைவேற என் வாழ்த்துக்கள்" என்றவாறு அவளைக் கட்டிக் கொண்டாள் காயத்திரி. ■

# தவறிய தங்க மோதிரம்

மடவளை கலீல்

**ஒரு சில பயணிகளும் மன்மதக் குஞ்சுகளும் அவளை பின்தொடர்ந்தனர்.**

"பஸ்ஸை நிறுத்துங்கள்!"

"நிறுத்துங்கள்!" என்று பரபரப்புடன் அடித்தொண்டையால் சப்தமிட்டாள் அந்த இளம் யுவதி!

நல்ல உயரம், சிவந்த நிறம், சுருண்ட முடி, குவிந்த குமுத மலர் போன்ற செவ்விதழ்கள். சிவப்பு வண்ண கவுண் அணிந்து, குதிரை வால் கொண்டையுடன், அழகாய் காட்சி தந்தவளை, பஸ்வண்டியில் இருந்த பயணிகள் யாவரும், விழிகளை விரித்து ஆச்சர்யமாய்ப் பார்த்தார்கள்!

பிரேக் போட்டதுடன், அந்த மஞ்சள்



நிற பஸ், துள்ளிக் குதித்து பாதையருகில் நின்றது.

அவளது நெஞ்சு 'பட பட' வென அடித்துக் கொண்டது. வியர்த்துக் கொட்டியது.

கைக்குட்டையால், முகத்தை துடைத்துக் கொண்டவள், ஒரு கணம், வார்த்தைகள் வாயில் வராது திக்கு முக்காடிப் போனாள்.

'ஆயிரத்தி இரு நூறு ரூபாய்க்கு மேல் பெறுமதியானது. சும்மா விட்டு விடவும் முடியாதே!' என்று அவள் மனம் சொல்லியது.

இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "எனது தங்க மோதிரம் விழுந்து விட்டது. சற்றுப் பொறுங்கள். ஒரு நிமிடத்தில் தேடி எடுத்து வருகிறேன்," என்றாள் படபடப்புடன்.

பஸ்ஸில் இருக்கும் பயணிகள் வியப்புடன் தன்னை அவதானிப்பதை உணர்ந்ததும். அவள் முகத்தில் முத்துக்கள் போல் வியர்வைத் துளிகள் அரும்பின.

மிதி பலகையில் இருந்த பயணிகள், கீழ் இறங்கி, வழி விட்டதும், வேகமாய் இறங்கியவள் பஸ் வந்த திசையை நோக்கி ஓடினாள்.

ஒரு சில பயணிகளும், மன்மதக் குஞ்சுகளும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

பாதை அருகில் புல் வெளியில் புற்களை நீக்கி, நீக்கி... மிகவும் அவதானமாகத் தேடலானாள்.

புல் வெளியில் உள்ள பனித்துளிகள் அவள் கைகளை நனைத்தன.

அப்போது ஓர் இளைஞன் அனுதாபத்துடன் "எத்தனை பவுண் இருக்கும்?" என்று வினா தொடுத்தான், இனிய குரலில்.

அவளுக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. உள்ளம் பட படவென அடித்துக் கொண்டது.

நடுத்தர வயது மதிக்கத்தக்க இன்னொருத்தர் புருவங்களை உயர்த்தியவாறு "எவ்வாறு விழுந்தது?" என்று விபரம் கேட்டார், கம்பீரமான குரலில், மிக ஆவலுடன்.

பலர் இவ்வாறு கேள்விக் கணைகளைத் தொடுத்தபோது, பயந்த மான் மிரள்வதைப் போல, தவித்துப் போனாள்.

இருந்தாலும் சமாளித்துக் கொண்டு முகத்தில் விழுந்த கூந்தலை, கையால் ஒதுக்கியவாறு "அரைப் பவுண் இருக்கும். எச்சில் துப்ப யன்னலை திறக்கும்போது கை தவறிவிழுந்துவிட்டது." அவளது கவலை தோய்ந்த குரலிலும் இனிமை தெரிந்தது.

'இவ்விளம் யுவதி பஸ்ஸிற்குள் வைத்து என்னைப் பார்த்து மனிதாபிமானத்துடன், முத்துப்பற்கள் மின்ன அழகாய்ச் சிரித்தவள், பறித்துப் போட்ட தாமரை போல கூம்பி விட்டாளே! பாவம்!' என்று ஒரு இளைஞனின் மனம் எண்ணியது. அவளை பல முறை கள்ளத்தனமாக பார்த்துக் கொண்டான்.

தேடியது கிடைத்துவிட்டது.

அந்த யுவதி இப்போது பஸ்ஸில் வந்து ஏறிக்கொண்டாள். அவள் தலை குனிந்திருந்தது. வெட்கத்திலும் சங்கடத்திலும் அவள் கூனிக்குறுகி அமர்ந்து கொண்டாள்.

பிரயாணத்தில் வந்த ஒரு வயோதிபமாது "என்ன தம்பி நகை கிடைத்துவிட்டதா?" என ஒருவரிடம் கேட்டார்.

"ஆம் கிடைத்துவிட்டது!

"ஆனால்....விழுந்தது நகையில்லையாம்!"

"அப்போ என்னவாம்"

"யுவதியின் பொய்ப்பல்லு" என்றார் புன் முறுவலுடன்

"குமரிகளும் பொய்ப்பல்லு போடுகிறார்கள் போலும்.... முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதை மாதிரியல்லவோ இது இருக்கிறது!" பொக்கு வாயால் முரசு தெரிய தன்னை மறந்து சிரித்தார் வயோதிபமாது. ■

# ஈரம்



சக்தி அபிநயா

ராகவன் தன் இரண்டரை வயது குழந்தையைத் தூக்கிக் கொண்டு கடை வீதிக்குச் சென்றான். வீடு திரும்பும் போதுதான் மழை பிடித்துக் கொண்டது.

வழியில் வாங்கிய இரவல் குடையை மீறி சாரல் அவனை நனைத்தது; குழந்தையைத் தொட்டுப் பார்த்தது.

பிள்ளை நனைகிறதே. மனம் பதைத்தது. தங்கிப் போகலாம் என்றால் பால் தரும் நேரம், பசி வந்தால் அழுகை நிற்காது.

வீடு வந்தது.

பிள்ளையின் சட்டையைக் கழட்டி, துண்டால் நன்கு துவட்டி விட்டான். அருகில் வந்த மனைவி துண்டை வாங்கி, குழந்தையின் தலை முடியில் ஈரம் இல்லாதவாறு மென்மையாகத் துவட்டத் தொடங்கினாள்.

குழந்தை ஒரு தும்மல் தும்ம, துடித்தான், மழையைத் திட்டினான். குழந்தைக்கு ஏதும் ஆகாமல் இருக்க வேண்டும். 'கோடை மழை தடிமன் காத்திருக்குமாம்' அம்மா அடிக்கடி சொல்லுவாள்.

"ஏய்... அப்படியே சாம்பிராணி புகையைப் போட்டு, விபூதியைத் தலையில் வச்சுத் தேச்சுடு." மனைவிக்குக் கட்டளை போட்டான்.

அவள் உள்ளே செல்ல,

"ராகவா..."

திரும்பினான். அம்மா நின்றிருந்தாள்.

"என்னம்மா?"

"ராகவா! நீயும் நல்லா துவட்டிக்கோ. கோடை மழை ஒத்துக்காது. தடிமன் காத்திருக்கும்!" என்றவாறு ராகவனின் தாய் துண்டால் அவன் தலைமுடியைப் பாசத்துடன் நன்கு துவட்டி விட்டாள்.

குழந்தை பாட்டியைப் பார்த்துச் சிரித்தது.



படிப்பகம்

“நெஞ்சு பொறுக்குதில்லையே, கோழிக்
குஞ்சு தவிப்பதைப் போல எந்தன்
நெஞ்சு துடிக்கிறதே கிளியே!
பஞ்சு பஞ்சாய் மேகம் வானை
கொஞ்சி உரசுதல் போல்- என்
நெஞ்சும் உன்மேலே தாவித் தவிக்குதடி!”

எண்ணி மூன்றேநாள் என்றுசொல்லி
பொன்னி போய்விட்டாள் தாய்வீடு!

“மஞ்சம் இருந்தென்ன,- என்
கொஞ்சும் கிளியின்றி!
பட்டு விரிப்பு இருந்தென்ன,- கை
தொட்டுத் தழுவ ஆளின்றி!
தலையணைகள் கிடந்தென்ன- என்
கலையணையாய் அவளின்றி!

புரண்டு படுத்தாலும் அடியே
திரண்டு வரும் உன் நினைப்பு
உருண்டு மூன்றுநாள் என் கொதிப்பால்
மருண்டு போகாதோ?

உள்ளத்தில் இனிமை இல்லை-பிரிவு
வெள்ளத்தில் மீளத் துரும்புமில்லை.
உடலிலும் துள்ளும் துடிப்புமில்லை-பிரிவுக்
கடலிலே விழுந்த பின்னர்!”

தனிமையில் கிடந்த துணைவன்-இன்ப
வறுமையில் புலம்பலுற்றான்.

“தேனிதழால் தேகமெங்கும்
தேக சுகம் தருவாள்
நானுமவள் மேனியெல்லாம்
இரண்டிதழால் நடப்பேன்.

கட்டவிழத் தொட்டு விளையாடி
முத்தம் கொட்டிக் கொடுத்தாட
வட்டவிழி கொட்டிக் கொட்டி
சித்தம் கிறங்கியவள் மகிழ்வாள்!

தேய்கின்ற இதழ்களிலே
மோதல் சத்தம் கிளம்பும்!
தோய்கின்ற இன்பத்திலே
சித்தம் எல்லாம் கிறங்கும்!

ஆறுபோல இன்ப வெள்ளம்
பெருகியே ஓட
கூறுபோட முடியாமல்
இருதேகமும் சேர
ஊறு இன்றி விடியும்வரை
உருகியன்றோ தேய்ந்தோம்!

பூவினக் காடென்று
ஆயின தேகம்
புள்ளிமான் போலென்று
ஆயின விழிகள்
மேவின குன்றென்று
ஆயின எழில்கள்
கூவின குயிலென
ஆயின மொழிகள்

# இலக்கிய நயம்



மேயின மேயின
என் விழியிரண்டும்
தூவின தூவின
மோகன விதைகள்
பாயின பாயின
உன் விழிவேல்கள்
மாயின மாயின
உடல் உயிரெல்லாம்.

தோண்டத் தோண்ட
கிடைப்பது சுகமே
மாண்டது துயரெல்லாம்
இன்ப உலகை படைத்ததினாலே!
தூண்டத் தூண்ட
தொடரட்டும் பயணம்!”
கூண்டுக் குயிலாய் தவித்தமனது
மீண்ட நினைவில் கிடந்தது மொய்த்தது!

பொன்னி மட்டும்
தாய் வீட்டில் எப்படி இருப்பாள்?
எண்ணிக் கொண்டேதான் இருந்தாள்
மூன்று நாள் என்று போனவள்
கள்ளி இரண்டாம் நாளே
வந்துவிட்டாள் துள்ளி!

போனவளை நினைத்து
புலம்பிக் கொண்டிருந்தவன்
தானவளை நினைக்காதது
போலொரு பாவனை செய்தான்.

உள்ளம் கூத்தாட
உதடு மட்டும் பொய்யுரைத்தது!
“மூன்றுநாள் என்றாயே
ஏன் ஒருநாள் முன்னேவந்தாய்?”
பொய்யாக தொடுத்த வினா
முள்ளாக தைத்தது அவளை!

முல்லைப்பூ முகத்தில்
புன்னகை வாடி உதிர்ந்தது.

“ஏங்கிப்போய் தவிப்பீர்
என வந்தேன்-நீரோ
நிம்மதியாய் தூங்கிக் கிடந்தீரோ?”

சுந்தர இதழ்களில்
சூடு பறக்கும் வினா கிளர்ந்தது!

“தாய்வீடு பெரிதென்று
பாய்ந்து நீ போனாயே

வாய் வீரம் காட்டாதே
சேய் அல்ல நானென்றும்!”

“யாருக்கு வாய்?- ஒரு
பேருக்க கூட சொல்லாதீர்
நேருக்க நேர் பார்த்துச் சொல்லும்
யாருக்கு வாய் நீளம்?”

முறைப்புடன் கேட்டாள்
முழுமதியைப் பழிக்கும் முகத்தாள்!

“புன்னகை பூத்த முகத்தில்
பூ நாகம் படமெடுக்கலாமா?
என்னவளே! என் மன்னவளே
ஒற்றுகின்ற இதழால் கொத்தாதே!”

சமரச வார்த்தைகளை
சரமாய் தொடுத்தான்.

“போதும் பொய் வீசல்
கூறும் யார் வாய் நீளம்?”

“கூறத்தான் வேண்டுமா?
கூறினால் கூசுமன்றோ!”

“கூசாது, பொய் பூசாமல்
வீசும் மெய் உரையை!”

“செவ்வாய்தான் நீளம்
அள்ளவும், மெள்ளவும்- உதவும்
செவ்வாய்தான் நீளம்.
பெறவும், தரவும், திறக்கும்
செவ்வாய்தான் நீளம்!

தருவது ரசிகன்

ஒற்றவும், உரசவும் சிறக்கும்
செவ்வாய்தான் நீளம்!
பேசவும், அமுது வீசவும் தெரிந்த
செவ்வாய்தான் நீளம்!
உண்ணவும், ஊறவும் உதவும்
செவ்வாய்தான் நீளம்!”

நாணத்தால் நயனம் மூடி
செவ்வானத்தை முகத்தில்
காட்டினாள்.

“செவ்வாயடி செவ்வாய்
கொய்வாயடி கொய்வாய்
என் உயிரைத்தான் கொய்வாய்

# வாழ்வும் வாளும்

செவ்வாயடி செவ்வாய்
வித்தைகள் பல நீ செய்வாய்!”

சொன்னவன் அவள்
மடியில் தலைவைத்து தவழ்ந்தான்.
மடியில் தவழ்ந்த தலையினை வருடி
கொடுத்தாள் இதழ் அமுதினை பருக!

பிரிந்தவர் கூடினால்
மஞ்சம்தான் அஞ்சும்
பிரிந்தவர் கூடினால்
பஞ்சம்தான் வெட்கம்!
பிரிந்தவர் கூடினால்



கொஞ்சல்தான் கீதம்!
பிரிந்தவர் கூடினால்
கண்கள்தான் கெஞ்சும்!

அணிகலன் அணிந்தவளை
அணியாய் அணிந்தவனாய்
ஏந்தினான், நீந்தினான்
ஏணியாய் மாற்றினான்!
இறுதியாய் ஒரு உண்மை
உள்ளத்தில் எந்தினான்.

“கூடும்போது இவள்
உயிராய் இருக்கிறாள்
பிரியும் போது
உயிரை அறுக்கிறாள்!
வாழ்வும் இவளே- பிரிவில் கொல்லும்
வாளும் இவளே!”

“வாழ்தல் உயிர்க்கன்னள்
ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்குமிடத்து”
குறள்: 1124 அதிகாரம்: 113

---

(ஸ்போர்ட்ஸ்)

# தேர்வாளர்கள் சரியாக இல்லை!

## இந்திய முன்னாள் வீரர் சாடுகிறார்

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் மொகிந்தர் அமர்நாத் இந்திய கிரிக்கெட் அணியின் இன்றைய நிலை குறித்து அளித்துள்ள பேட்டி இது.

**கேள்வி: இலங்கையில் விளையாடும் இந்திய அணி குறித்து உங்கள் கருத்து என்ன?**

மொஹிந்தர்: நான் புதிதாகச் சொல்ல என்ன இருக்கிறது? கப்டன் சச்சினே, தமக்கு இரண்டாம் தர அணிதான் தரப்பட்டுள்ளது என்று சொன்ன பிறகு நான் என்ன சொல்லுவது?

**கே: இந்திய அணியின் பந்து வீச்சு சரியில்லை என்று நினைக்கிறீர்களா? அணியில் ஸ்ரீநாத் இடம்பெறாதது ஒரு புறமிருக்க, கும்ப்ளேயும் சரியாகப் பந்து வீசவில்லை என்றுபடுகிறதே?**

மொ: எல்லோரும் இந்திய அணியின் பந்து வீச்சு சரியில்லை என்று தான் கருதுகின்றனர். ஆனால் துடுப்பாட்டத்தில்தான் பலமாக இருக்கிறோமே? சச்சின், கங்குலி, ராகுல், அஸார் ஆகியோர் தவிர, கடைநிலை ஆட்டக்காரர்களும் எல்லாப் போட்டிகளிலுமே ரன்களை அடிக்கின்றனர். உலகிலேயே நீண்ட கடைநிலை ஆட்டக்காரர்கள் உள்ள அணி இந்தியாவாகத்தான் இருக்கும். பந்துவீச்சில் சரியில்லையென்றாலும் துடுப்பாட்டத்தின் மூலம் அதை ஈடுகட்டலாமே. இலங்கை அணியினர் பந்துவீச்சைவிடத் துடுப்பாட்டத்தில்தான் சிறந்து விளங்குகிறார்கள். அந்த அணியில் உள்ள ஏழு துடுப்பாட்ட வீரர்களில் இருவர் அல்லது மூன்று பேர் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் மற்றவர்கள் அதை ஈடு செய்கின்றனர். என் கருத்துப்படி இலங்கை அணியினர் தமது துடுப்பாட்டத்தினாலும், களத்தடுப்பினாலும்தான் பந்துவீச்சை ஈடுசெய்கின்றனர்.

**கே: இந்திய அணித்தேர்வு சரியாக இல்லை என்று மதன்லால் ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் கூறியது பற்றி...?**

மொ: சரியான பேத்தல். ஒரு தொடர் பாதி நடக்கும் போது அந்த அணியின் மனேஜரே இப்படிக் கூறுவது சுத்த பைத்தியக்காரத்தனம். வீரர்களைத் தெரிவு செய்யும்போது மதனும் கூடவே இருந்துதானே அணியைத் தேர்வு செய்தார்? அப்போது என்ன செய்தார் இவர்? அப்படியிருக்க, இப்படியா சச்சின் முதல் கும்ப்ளே வரை ஒவ்வொருவரைப் பற்றிக் குறை கூறுவது? இனிமேல் இந்த வீரர்கள் மதன்லாலை எப்படி மதிப்பார்கள்? மனேஜர் என்பவர் வீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும்கொடுத்து, அவர்களது துடுப்பாட்டத்தையோ, பந்து வீச்சையோ திருத்தி நடத்த வேண்டியவர். இப்படிப் பத்திரிகை மூலம் குறை சொன்னால் நன்றாகவா உள்ளது. ஆனால் இதுவும் நன்மைக்கே. ஏனெனில், இலங்கைத் தொடர் முடிந்தவுடன் முதல் பலி மதன்லால்தான்.

**கே: வேறு யார் நீக்கப்படுவார் என எதிர்பார்க்கிறீர்கள்?**

மொ: சச்சின் சரியாக விளையாடாத பட்சத்தில், அணி மோசமாகத் தோற்க நேர்ந்தால், அவர் நிச்சயம் கப்டன் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார் என எதிர்பார்க்கிறேன்.

**கே: அப்போ அடுத்த கப்டன் யார்?**

மொ: அஸார்தான்.

**கே: சரி நீங்கள் முன்பு 'BENCH OF JOKERS' என்று தேர்வுக்குழுவினரைக் கூறினீர்களே. இன்று அதில் ஏதும் மாற்றம் உண்டா?**

மொ: நான் ஏன் மாற்றம் செய்ய வேண்டும்? தேர்வுக்குழுவினர் ஒழுங்காகத் தங்கள் பணியைச் செய்கிறார்களா என்ன? அவர்களது நிலைதான் எல்லாரும் விமர்சனம் செய்யும்படி வந்துவிட்டதே? இப்போதும் அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் இதை விட மோசமான, தகுதியான வார்த்தைகள் அகராதியில் இல்லை. (சிரிக்கிறார்)

**கே: தேர்வுக் குழுவினரையே அனைவரும் குறை கூறுகின்றனர். அவர்கள் எப்படி வீரர்களைத் தேர்வு செய்கின்றனர் என நீங்கள் கூறமுடியுமா?**

மொ: வெளியில் இருந்து பார்க்கத்தான் தேர்வு கஷ்டம் போல தோன்றும். ஆனால் இவர்கள் மிகவும் சுலபமாகத் தேர்வு செய்கின்றனர். இருக்கும் 5 தேர்வாளர்களும் தங்களுக்கு வேண்டிய 5 வீரர்களை முதலில் சொல்லிவிடுவர். பின்பு பேச்சுவார்த்தையில் ஒரு தேர்வாளருக்கு மூவர் எனத் தேர்வு செய்யப்படுகின்றனர். கப்டனின் விருப்பப்படி 16வது வீரர் தேர்வு செய்யப்படுவார். உதாரணமாக சச்சின், வினோத் காம்ப்ளியையும், அஸார், வெங்கடபதிராஜுவையும் தேர்ந்தெடுத்தனர்.

**கே: உங்களது கோச்சிங் பணி பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

மொ: மிகவும் மகிழ்ச்சியாக, நிம்மதியாக இந்த கோச்சிங் பணியில் ஈடுபட்டுள்ளேன். நான் முதன் முதலில் சொல்லிக் கொடுத்த பங்களாதேஷ் அணிக்கு இன்று சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அங்கீகாரம் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சி. அந்த அணியும் ஆசியக்கோப்பைக்காக இலங்கையில் நன்கு விளையாடினார்கள். அதே போல இப்போது கோச்சிங் கொடுக்கும் கென்யாவும் இன்னும் ஐந்து வருடங்களில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் தங்கள் திறமையைக் காட்டுவார்கள் என்பது நிச்சயம்.

**இவர்கள் தான் அவர்கள்**

1. கார்த்திக்ராஜா, பவதாரிணி, யுவன் சங்கர்ராஜா, 2. ஏ. ஆர். ரகுமான், 3. கே. பாக்யராஜ், 4. தேவா.

---

# சிந்தியா பதில்கள்



* “தீர்வுத்திட்டத்தை ஆதரித்து பிரசாரம் செய்யமாட்டோம்!” என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளாரே?

ஜி. காளிதாஸ், நுவரெலியா.

எதிர்ப்பிரசாரம் செய்யப்போவதாகவும் கூறவில்லையே! இன்னொன்று, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தீர்வு யோசனைகளில் மலையக மக்களின் அபிலாசைகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்று இ.தொ.கா. உரத்துப் பேசியதாகவும் தெரியவில்லையே!

■ ■

* புலிகளை புறக்கணிக்கமுடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கூறிவருகிறாரே?

சி. தங்கராஜா, கொழும்பு-11.

காலம் கடந்த ஞானம். எதிர்காலத்தில் பதவி வந்தபின் இதுவும் காணாமல் போகாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

■ ■

* சந்தனக் கடத்தல் வீரப்பனின் நிபந்தனைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஆர். உஸ்மான், புத்தளம்.

சந்தனக் கடத்தல் வீரப்பனின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு, சங்கிலித் திருடனை பிடிக்க முடியாது போனால் அவர்களது நிபந்தனைகளுக்கும் கட்டுப்படவேண்டி ஏற்படலாம்.

■ ■

* டியர் சிந்தியா! இலங்கை-இந்திய அணிகளுக்கிடையிலான- அந்த முதலாவது ஒரு நாள் போட்டி நடக்கும்போது என்ன நினைத்தீர்கள்?

எஸ். சந்திரமோகன், கொழும்பு-09.

எப்போதாவது ஒருமுறைதான் இந்திய அணிக்கு போராடும் வேகம் கிளர்ந்துவரும். அன்றும் அப்படித்தான். ஆனாலும் அசார், ஜடேஜா தவிர ஏனையோருக்கு பதற்றம் இருந்தளவுக்கு பதம் தெரியவில்லை. அவசரப்பட்டு சொதப்பிவிட்டார்கள். அசாரும், ஜடேஜாவும் நெல்லுக்கிறைத்த நீரை, மொங்கியாவும், சௌகானும் புல்லுக்கிறைத்துவிட்டார்கள். கடைசிவரை போராடிய இலங்கை அணியை பாராட்டலாம்!

■ ■

* சிந்தியா! சனத் ஜெயசூரியா சாதனைக் குவிப்பதின் இரகசியம் என்னவோ?

செல்வி கி. ஜெயகௌரி, சிலாபம்.

தனது சொந்தப் பட்டியலில் அரைச் சதங்கள், சதங்கள் என்று நிரப்புவதைவிட, தனது அணிக்கு வெற்றிதேடித்தர வேண்டும் என்ற எண்ணம்தான் அந்த இரகசியம்!

■ ■

* டியர் சிந்தியா! இன்றைய கிரிக்கெட் அணிகளில் உங்களுக்குப் பிடித்த அணி எது?

ஈ. சர்மிளா, கல்முனை.

இலங்கை அணியேதான்! நாட்டுப் பற்றென்று நினைத்துவிடாதீர்கள்! இலங்கை அணியின் போராடும் உத்வேகம், கூட்டு முயற்சி, தன்னம்பிக்கை, குறைந்த வசதிகளோடு தாமாக உருவாக்கிக்கொண்ட நிறைவான திறமை... என்று மனம் திறந்து பாராட்ட எத்தனையோ சமாச்சாரங்களை வைத்திருக்கிறார்கள்!

கிரிக்கெட்டில் மட்டுமல்ல பொதுவாகவும் இது பொருந்தும் சர்மிளா!

■ ■

* டியர் சிந்தியா! ஜாலியான ஜோக் ஒன்று சொல்ல முடியுமா?

உ. காந்திக், இரத்மலானை.

ஒரு மேல்நாட்டுத் தந்தை தன் இளம் வயது மகளுக்கு திருமணத்தைப் பற்றிச் சொன்ன ஆலோசனை இது:

“மகளே! நீ ஓர் இராணுவ வீரனைக் கல்யாணம் செய்துகொள். அவன் தான் முகாம்களில் பழகி, படுக்கையைத் தட்டிப் போடவும், துணிகளைத் தைக்கவும் பயிற்சி பெற்றிருப்பான். எல்லாவற்றுக்கும் மேலாக உத்தரவுகளுக்கு கண்ணை மூடிக்கொண்டு கீழ்ப்படிபவனாக இருப்பான்.”

■ ■

* நடிகர்களில் கமல் மட்டும்தான் கலகலப்பாக பேட்டி கொடுக்கக்கூடியவரா?

செல்வி பதுறுனிஸா, குருநாகல்.

தமிழக ‘தினமணி’ பத்திரிகையில் சத்யராஜ் கொடுத்த பேட்டியை ‘சினிவிசிட்’டில் பிரசுரித்திருக்கிறோம். பார்த்துவிட்டு சொல்லுங்கள்!

■ ■

* நேரகாலம் தெரியாமல் அறுவைப் பேச்சு நடத்துகிறவர்களை என்ன செய்யலாம்?

எம். அமுதா, திருக்கோணமலை.

சாக்ரட்டிஸின் நண்பர் ஒருவர் அவரிடம் வந்தார்.

“நான் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதைப்பற்றி உங்களிடம் பேச வேண்டும்.” என்றார்.

உடனே சாக்ரட்டிஸ், “நண்பனே! நீ பேச வந்த விஷயத்தை மூன்று சல்லடைகளில் போட்டு சலித்துப்பார்த்தாயா?” என்று கேட்டார்.

நண்பருக்கு ஆச்சரியம். “மூன்று சல்லடைகளா?” என்று கேட்டார்.

“ஆம், முதல் சல்லடை, உண்மையில்லாத செய்திகளைத் தடுத்துவிடும். நாம் நேரடியாக உண்மை என்று அறிந்தவற்றைப் பேச அது உதவும்.

இரண்டாவது சல்லடை, கெட்ட செய்திகளைத் தவிர்த்துவிடும். நல்ல செய்திகளை மட்டுமே பேச அது உதவும்.

மூன்றாவது சல்லடை: மற்றவர்களுக்கு நன்மை தராத செய்திகளை ஒதுக்கிவிடும்.” என்றார் சாக்ரட்டிஸ்.

■ ■

* ‘எய்ட்ஸ்’தான் உலகில் கொடிய வியாதியா? அதனைவிட கொடிய வியாதி கிடையாதா?

ஆ. ரகுநாதன், மட்டக்களப்பு.

உண்டே ஐயா உண்டே. நம் நாட்டில் உண்டே! புரிந்துகொள்ளுங்களேன் பார்ப்போம்.

■ ■

* பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மூன்றாண்டு சாதனைகள் சொல்லிக் கொள்ளும்படியாக உள்ளனவா?

சி. இமாம், நிட்டம்புவ.

நாம் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லையென்பதால்தானே தாமே சொல்லிக் கொள்கிறார்கள்.

■ ■

* அடிக்கடி கடன் கேட்பவர்களை என்ன செய்யலாம்?

ஆர். ரம்ஸின், கலஹா.

பொய் என்று தெரிய பொய் சொல்லுங்கள். புரியாதுவிட்டால் இந்தக் கதையைக் கேளுங்கள்:

ஒரு சமயம் முல்லா தன் வீட்டுக்குப் பின்னால் துணிகளைக் காயப்போடுவதற்காக ஓர் உறுதியான கயிற்றைக் கட்டி வைத்திருந்தார்.

பக்கத்துவீட்டுக்காரர் முல்லாவிடம் வந்து “முல்லா! உங்கள் வீட்டில் கட்டி வைத்திருக்கிறீர்களே துணிகளைக் காயப்போடும் கயிறு, அதனைக் கொஞ்சம் இரவல் தாருங்கள்! இன்று மாலையே கொண்டுவந்து தந்துவிடுகிறேன்.” என்றார்.

உடனே முல்லா; “நான் கொடியில் கோதுமை காயப்போட்டிருக்கிறேன். அதனால் கொடியை இரவல் தரமுடியாது” என்றார்.

“கொடியில் எப்படிக் கோதுமையைக் காயப்போட முடியும்?” என்று அவர் கேட்டார்.

முல்லா சொன்ன பதில்;

“ஒருவருக்கு இரவல் கொடுக்க மனமில்லாதபோது, எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இதில் தர்க்கம் செய்ய ஒன்றுமில்லை.”

■ ■

* டியர் சிந்தியா! தமிழ் சினிமாவில் கவர்ச்சி புயல்கள் ஓயவே ஓயாதா?

இ. தமயந்தி, பசறை.

ஓங்கிக்கொண்டுதான் இருக்கிறது. ‘பகைவன்’ படத்தில் அஞ்சலா என்றொரு புதுமுகம் வருகிறார். அவர் முகத்தைப் பார்க்க எங்கே விடுகிறார்கள்!

* புத்திக்கூர்மை உள்ளவர்கள் ஆண்களா? பெண்களா?

பா. மகேந்திரா, திருமலை.

பெண்கள்தான்! இந்தியாவின் பிரபல நரம்பியல் டாக்டர் பி. ராமமூர்த்தி சொல்வதைக் கேளுங்கள்:

“ஆண்களைவிடப் பெண்கள் ரொம்பப் புத்திசாலிகள்தான். காரணம் பெண்கள் மூளை ‘இன்டியூடிவ் பவர்’ அதாவது உள்ளுணர்வு அதிகம். அவர்களுக்கு வலதுபக்க மூளை வேலைசெய்வதால், இதுபோல உள்ளுணர்வு, அழகியல் உணர்ச்சி எல்லாமே அதிகம். ஆண்களுக்கு இடதுபக்க மூளை அதிகமாக வேலை செய்யும். அது எதையுமே கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் ஏற்றுக் கொள்ளும். அதனால்தான் ஒரு ஆம்பிளை பல விஷயங்களை யோசிச்சு, கணக்குப் போட்டுப்பார்த்து சொல்லும் ஒரு பதிலை, போற போக்கில் ஒரு பொம்பிளை உணர்வு பூர்வமாக முடிவெடுத்துச் சொல்லிவிட்டு போயிடறா! அதுக்காக ஆணுக்கு வலது பக்க மூளையே வேலை செய்யவில்லை என்று அர்த்தமில்லை. அது நாப்பது, இது அறுபதுன்னு ஒரு சின்ன விகிதத்தில்தான் வித்தியாசம்!”

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 97

## "இன்றுபோய் நாளை வாராய்!"



இராஜகுமாரன்

இராமபிரான்-போர்க்களத்தில் தன் தம்பியான இலக்குவன் செயலற்று நின்றதைக் கண்டு சற்று அதிர்ச்சியடைந்தார். தானே நேரடியாகச் சென்று இராவணனுடன் பொருத வேண்டிய வேளை வந்துவிட்டது என்பதை உணர்ந்தார். தன் இரு கண்களையும் மூடியவாறு சில நொடிகள் தியானித்தார். அந்தச் சில நொடிகளில் ஆஞ்சநேயர் இராவணன் முன்னால்,திடீரென எழுந்து நின்ற மாமலைபோல் தோன்றியதைக் கண்டார்.

இராவணனுடன் ஆஞ்சநேயர் உரையாடியதையும் கண்டார். அவர்கள் இருவரும் என்ன பேசினார்கள் என்பதைப் புரியாவிட்டாலும், இராவணன் ஆயுதங்கள் எதனையும் எடுத்துக்கொள்ளாமல் நிராயுதபாணியாக இரதத்தை விட்டுக்கீழே குதித்ததைக்கண்டார். இருவரையும் சூழ்ந்து நின்ற இரு தரப்புப் படையினரும் கூட தத்தமது ஆயுதங்களையும் நழுவ விட்டவர்களாக நின்றதையும் கண்டார். இத்தகைய தோற்றத்தைக் கண்ட இராமபிரான், இராவணனும் ஆஞ்சநேயரும் மல்யுத்தம் புரியப் போகிறார்கள் என்பதனையும் உணர்ந்து கொண்டார்.

இராவணனுடைய மார்பில் ஆஞ்சநேயர் தனது கைகளால் குத்தியபோது இராவணன் தடுமாறியதையும் இராமபிரானால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதேபோல் இராவணன் ஆஞ்சநேயர் மார்பில் குத்திய போது அவர் சற்று நேரம் நிலைகுலைந்ததனையும் கண்டார். இருவரும் சமபலமுடையவர்களே என்பதை- இராமபிரானுக்கும், இக்குத்துச் சண்டை- பார்த்துக் கொண்டிருந்த அனைவருக்குமே உணர்த்தியது.

ஆஞ்சநேயர் செயலற்று நின்றதையும் அதனால் வெகுண்டெழுந்த வானர வீரர்கள் பெரும் மலைகளைப் பெயர்த்துவந்து இராவணன் மீது வீசியதையும் அவற்றை இராவணன் பல நூறு பாணங்களை ஏவிப் பொடிப் பொடியாக்கியதனையும் இராமபிரான் காணக்கூடியதாக இருந்தது.

### மலைமழை பொழிந்தது

வானர சேனை வீசிய பல்லாயிரம் மலைகளும் இராவணன் ஏவிய கணைகள் பட்டு ஒவ்வொன்றும் பல்லாயிரம் துண்டுகளாக வானிலிருந்து மலை மழை பொழிவது போல் பொழிந்தன இம்மலைத் துகள்கள் வீழ்ந்தமையினால் ஆயிரக்கணக்கில் அரக்கர் படையினரே அழிந்தனர்.

வானரங்கள் வீசிய மலைகளை தானே கணைகளை ஏவி அழிக்க நேர்ந்தமையினாலும் தன்னைச் சார்ந்த அரக்கர் படை பேரழிவினைக் கண்டமையினாலும் இராவணனின் சினம் பன்மடங்காகியது. 'இந்த வானரப் படையினை முதலில் முற்றாக அழித்து விட்டு அந்த அயோத்தி நகர் நரர்களை பின்னர் ஒழித்துக் கட்டுவேன்!' என்று சினம் கொண்டெழுந்த இராவணன் சரமாரியாக வானரப்படைகள் மீது அம்புகளைத் தொடுத்தான். கொடிய சூறாவளி போல் எண்ணற்ற அம்புகள் சுழன்று வந்து வானரப் படைகளைத் தாக்கின. வானர வீரர்களின் உடல்கள் மீது அம்புகள் பட்டு பல காயங்களை ஏற்படுத்தின. தமதணியினர் வேரற்ற மரம்போல் வீழ்ந்து மடிவதைக்கண்ட ஏனைய வானரங்களும் ஓடத் தலைப்பட்டன.

இலக்குவன் அப்போதுதான் தனது களைப்பு நீங்கி எழுந்தார். அறுந்து வீழ்ந்து கிடந்த அம்பறாத் தூணியைச் சீர் செய்து அம்புகளையும் வரிசைப்படி அடுக்கி எடுத்து அணிந்து கொண்டார். பயந்து ஓடிக் கொண்டிருந்த வானரர்களை சைகை செய்து ஒன்று கூட்டினார். அதுவரை செயலற்றிருந்த தமது தலைவர் மீண்டும் போராடுவதற்கு ஆயத்தமாகிவிட்டதைக் கண்டு மகிழ்ச்சிப் பேரார்வம் கொண்டனர். "இராமஜெயம், இராமஜெயம்" என்று கோஷம் எழுப்பிய வண்ணம் இராவணன் இரதம் நின்ற பக்கம் அணிவகுத்துச் சென்றனர்.

இலக்குவன் ஒரு நொடிப் பொழுதைத் தானும் வீணாக்காமல் நூற்றுக்கணக்கில் பாணங்களைச் செலுத்தலானார். அரக்கர் படையினர் எவரும் ஆயுதங்களை எடுக்க முடியாமல் இலக்குவனின் அம்புகள் அவர்களைச் சாடின. இலக்குவனின் கணைகளுக்கு இணையாக இலங்காதிபனும் அம்புகளைத் தொடுத்தான். இராவணனின் விற்களிலிருந்து அம்பு புறப்படுவதற்கு முன்னமே இலக்குவனின் பாணங்கள் அவற்றை அழித்துவிட்டன. தொடர்ந்து வந்த அம்புகள் இராவணனின் கைகளிலிருந்த பத்து விற்களையும் உடைத்தெறிந்தன.

### "நன்று நின் போராற்றல்!"

இலக்குவனின் விற்போர் இராவணனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது, எத்தனையோ போர்க்களங்களில் விற்போர் புரிந்த மாபெரும் வீரர்களை இராவணன் கண்டிருக்கிறான். ஆனால் இராமன் தம்பி இலக்குவனுக்கு நிகரானதொரு வில் வீரனை இதுவரை கண்டதில்லை என தன் மனதாரப் பாராட்டினான்.

எத்தகைய எதிரியாக இருந்த போதிலும் அவர்களிடத்தில் காணப்படும் திறமையைப் பாராட்ட அவர்கள் தவறியதே இல்லை, அக்காலப் போர்ப் பண்பு அத்தகு உயர் நிலையினையுடையதாக இருந்திருக்கிறது என்பதற்கு கவிச் சக்கரவர்த்தி தரும் சான்று இது:

**நன்று போர் வலி நன்று போர் ஆள் வலி வீரம்**
**நன்று நோக்கமும் நன்று கைக் கடுமையும் நன்று**
**நன்று கல்வியும் நன்று நின் திண்மையும் நலனும்**
**என்று கைம்மறித்து இராவணன் ஒருவன் நீ என்றான்.**

(யுத்த காண்டம்-1160)

பொருள்:

*"உன்னுடைய போர்புரியும் ஆற்றலும், போரைக் கையாளும் தன்மையும், வீரம் பொருந்திய உனது பார்வையும், பாணங்களைத் தொடுத்து ஏவும் முறைமையும், வேகமும் நன்றாகவே உள்ளன. விற்போர்ப் பயிற்சியையும் நன்றாகவே பெற்றிருக்கிறாய். உன் ஆண்மையும் சிறப்புப் பொருந்தியதே! நீ ஈடிணையற்றவன்," என்று இலக்குவனை நோக்கிக் கூறியவாறு தன் கையை அசைத்து இராவணன் சொன்னான்.*

இவ்வாறு மனதார இலக்குவனை இராவணன் பாராட்டினான். இருப்பினும் இலக்குவனை எவ்வகையிலும் வீழ்த்த வேண்டும் என்று கங்கணம் பூண்டவனான இராவணன், 'வில்லால் இவனை வீழ்த்துவது முடியாத காரியம்; இவனை வீழ்த்துவதானால், நான்முகன் எனக்களித்த வேலாயுதத்தைப் பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை,' என்று கருதினான். உடனே அவ்வேலை எடுத்து உரிய மந்திரத்தை உச்சாடனம் பண்ணி இலக்குவனை நோக்கி வீசினான்

பிரம்மதேவனால் வழங்கப்பட்ட அந்த வேல் மகத்தான சக்தி படைத்தது. அது விரைந்து சென்றது. இலக்குவன் அதுவரை வீசிய பாணங்களனைத்தையும் வெட்டிச் சாய்த்த வண்ணம் அவ்வேல் சென்று இலக்குவனின் மார்பில் பாய்ந்தது. அதன் சக்தியைத் தாங்காது இலக்குவன் மயங்கித் தரையில் சாய்ந்தார். தன்னை வந்து தாக்கியது பிரம்மாஸ்திரமே என்பதை உணர்ந்த வராகையால் தன் பிராணன் போகாதவாறு மயக்க நிலையில் இருந்தார்.

தான் வீசிய வேல் பட்டு இலக்குவன் சாய்ந்தாலும் அவர் உயிர் பிரியவில்லை என்பதனை இராவணனும் உணர்வான். மயங்கிக் கிடக்கும் வேளையிலேயே இலக்குவனைச் சிறைப் பிடிக்கலாம் என்று கருதியவனாக இராவணன் விரைந்தான். தனது கைகளால் இலக்குவனைத் தூக்க முயன்றான். கைலாய பர்வதத்தையே பெயர்த்தெடுக்க முயன்றவனான இலங்கையர்கோனால் அப்போது இலக்குவனைத் தூக்க முடியாமற் போய்விட்டது. தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து முயன்றும் முடியாமற் போயிற்று.

### கோதண்டராமர் களம் புகுந்தார்

இலக்குவனைத் தூக்கிச் செல்ல இராவணன் முயன்றதை அவதானித்த ஆஞ்சநேயர் தனது சோர்வினை அகற்றியவராக ஓடி வந்து, ஒரு தாய்க்குரங்கு தனது குட்டியைச் சுலபமாகத் தூக்கிச் செல்வதைப் போன்று தூக்கிக் கொண்டு பர்ணசாலையை அடைந்தார். அப்போது அவருடைய மயக்கமும் தெளிந்தது. இன்னும் கொஞ்ச நேரம் இலக்குவன் ஓய்வாக இருக்க வேண்டும் என்பதற்கேற்ற சைகை செய்த ஆஞ்சநேயர் இராமபிரான் அருகில் போய் நின்றார். இராமபிரான் போர் முகம் செல்லப் புறப்பட்டு விட்டதைக் கண்ட ஆஞ்சநேயர் தன் தலைவனின் தாள் தொட்டு வணங்கியவாறு, "ஐயனே தாங்கள் போர்முனை செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்நிலையில் எனது தாழ்மையான வேண்டுகோளை ஏற்றருள வேண்டும்," என்று வினயமாகக் கேட்டுக் கொண்டார், இராமபிரானும் அவ்வேண்டுகோளைச் செவிமடுக்கலானார்.

"ஐயனே! இலங்கையர்கோன் நால்வகைச் சேனைகளுடனும் வந்திருக்கிறான். அவன் ஏறி வரும் இரதம் பல வெண் புரவிகளால் இழுத்து வரப்படுகிறது. தாங்கள் தர்மம் தழைக்க நடத்தும் இப்போர் நிச்சயம் எமக்கே வெற்றியைத் தரும் என்பதில் ஐயமில்லை, இருப்பினும் அரசகுமாரராகிய தாங்கள் கால்நடையாகப் போரிடச் செல்வது இகழ்ச்சிக்குரியது. தங்களைச் சுமந்து செல்லும் பாக்கியத்தை அடியேனுக்குத் தந்தருள வேண்டுகிறேன்!" என்றவாறு ஆஞ்சநேயர் இரு கைகளையும் சிரமேல் குவித்து வணங்கி நின்றார்.

ஆஞ்சநேயர் அன்பும் பக்தியும் ஒருசேர வேண்டி நின்ற தன்மையால் இராமபிரான் நெகிழ்ந்து போனார். மறுத்தாலும் ஆஞ்சநேயர் விடப்போவதில்லை; தானாகவே தூக்கித் தன் தோள்மீது வைத்து விடக்கூடும் என்றும் இராமபிரான் கருதியமையினால் அனுமனின் கோரிக்கையை ஏற்று அவருடைய தோள் மீது ஏறிக்கொண்டார்.

இராமபிரானைச் சுமந்த வண்ணம் ஆஞ்சநேயர் அங்கும் இங்குமாகத் தாவிப் பாய்ந்து எதிரிகளின் பாணங்கள் எவையும் இராமபிரான் மீதும் தன்மீதும் படாமல் நடமாடினார். இராவணன் எய்த அம்புகள் எல்லாவற்றையும் இராமபிரான் தனது கணைகளால் உடைத்தெறிந்தார். ஒன்றன்பின் ஒன்றாக இராவணன் கைகளில் வந்து ஏறிய விற்கள் எல்லாம் அவ்வப்போதே முறிந்தழிந்தன. வேறு எந்த ஆயுதத்தை இராவணன் கையிலெடுத்தாலும் அவை உடனடியாகவே உடைந்து போகும் அளவுக்கு இராமபிரானின் கோதண்டத்திலிருந்து கிளம்பிய கணைகள் செயற்பட்டன. இராவணனின் தேர்களும் உடைந்தன. குதிரைகள் உடலறுந்து வீழ்ந்தன. அரக்கர் படையிலும் பேரழிவு ஏற்பட்டு தலையற்ற முண்டங்கள் மலைகள் போல் குவிந்தன.

இராமபிரான் எய்த கூரிய கணைகளில் ஒன்று இராவணன் தேரின் மேலிருந்த வெண் கொற்றைக்குடையை வீழ்த்தியது. மற்றுமொரு பாணம் அவனுடைய வீணைக் கொடியையும் வீழ்த்தியது. அடுத்தகணை இராவணனின் பத்துச் சிரசுங்களையும் அணி செய்த பொன்மணி முடிகளையும் தட்டி உருட்டியது. எல்லாவற்றையும் இழந்த நிலையில் தரையில் கண்களைப் பரப்பி வெட்கி நின்ற இராவணனை இராமபிரான், "மூவுலகையும் வென்ற மா வீரனே! இன்று எல்லாவற்றையும் இழந்து நிற்கிறாய்! ஆகவே இன்று போய், உன் ஆயுதங்களுடனும் படைகளுடனும் நாளை வாராய்!" என்று கூறினார்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி:95

**சரியானவிடை:-** அம்பு, கணை, சரம், பாணம்.

1. நிலாந்தி சார்ல்ஸ், ட்றூப் எஸ்டேட், தலவாக்கல.
2. க. சசிகாந்தன், ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம், உடப்பு.
3. செல்வி மதிவதனி சிவலிங்கம், நாலந்தா புரம், சீனன்குடா.
4. செல்வி ஃபீர்தொசியா ஹசன், சென் யெஹ்யா மாவத்தை, மாத்தறை.
5. பே. குமுதன், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்று.

**போட்டி இல. 97** கேள்வி:- இலக்குவனை மயக்கமடைய வைத்த ஆயுதம் இராவணனுக்கு யாரால் கொடுக்கப்பட்டது?

ஆகஸ்ட் 30 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.97, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# நவீன அரசியல் விஞ்ஞானம் வினா விடைக் கொத்து

தயாரிப்பு: காதிலை பூ கந்தசாமி

இன்றைய அரசியல் கட்சித் தலைவர்களின் வழிகாட்டலுடன் இந்த வினா விடைக் கொத்து திறம்பட தயாரிக்கப்பட்டுள்ளது. அரசியல் பரீட்சையில் தேறும் எதிர்கால சிப்பிகளுக்கும், சுண்ணாம்புகளுக்கும், களிமண்ணுகளுக்கும் ஏற்றதொரு கைநூல் இது எனலாம்.

**1. அரசியல் என்றால் என்ன?**
திருவாளர் பொதுஜனத்துக்கு அல்வா கொடுப்பது.

**2. அன்றைய அரசியலுக்கும் இன்றைய அரசியலுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை குறிப்பிடுக?**
பல பத்து வருடங்களுக்கு முன்னர் ஓரளவு நாகரிகமான துறையாக இருந்தது. இன்று மிக நாறிய துறைகளில் ஒன்றாக முதலிடம் வகிக்கிறது.

**3. அரசியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஒன்று கூறுக?**
முன்னர் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடமாக இருந்தது. இப்போது அவர்களின் முதல் புகலிடமாக விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது.

**4. அரசியல் கட்சிகள் என்றால் என்ன?**
வர்த்தகத் துறையில் தொழில் நிறுவனங்கள் உள்ளதுபோல அரசியல் துறையில் காணப்படும் தொழில் நிறுவனங்கள் எனலாம்.

**5. அரசியலில் முன்னேற அவசியத் தேவை ஒன்று கூறுக?**
அடுத்தவர் தோள்.

**6. அரசியலில் முன்னேற அவசியமில்லாத ஒன்று கூறுக?**
முலதனம்!

**7. பல கட்சிகள் இருப்பதன் காரணம்?**
பல தலைவர்கள் இருப்பதால்!

**8. அரசியல் கட்சிகளுக்குள் பொதுவாகக் காணப்படும் குணாம்சம் என்ன?**
சொல்வதை செய்வதில்லை என்பதில் அசைக்கமுடியாத உறுதி. பிழையெனத் தெரிந்தாலும் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லிக்கொண்டே இருப்பதில் உடைந்த ரெக்கோட் போன்ற திறமை. இப்படிப் பல உண்டு.

**9. அரசியல் தலைவர்களின் பொதுவான குணாம்சம் யாது?**
அடுத்தவர் மீதான விமர்சனங்களை ரசிப்பர். தம்மீதான விமர்சனங்களை நசிப்பர். எட்டாத பழம் எனில் புளிக்கும் என்பர். அது எட்டிவிட்டாலோ இனிக்கும் என சுவைப்பர்.இப்படியாகப்பட்ட அரும் பெரும் பொதுக் குணங்கள் பல உண்டு.

**10. இன்றைய அரசியல் கட்சிகளுக்கு பிடிக்காத கொள்கைகள் யாது?**
தம்மால் எதுவெல்லாம் முடியாதோ அதுவெல்லாம் பிடிக்காத கொள்கைகள். தம்மால் எதுவெல்லாம் முடியுமோ அதுவெல்லாம் பிடித்த கொள்கைகள்.

**11. இன்றைய அரசியல் கட்சிகளின் பிரதான பலம்?**
மக்களின் அமோகமான ஞாபக மறதி.

### கீழ்வரும் வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையின் மேல் (✓) கீறிடுக.

**1. இன்றைய அரசியல் தலைவர்கள் ஊக்குவிப்பது:**
1. தியாகம் 2. துரோகம் ✓ 3. பொதுநலம்.

**2. கீழ்வருவோரில் தலைவராகத் தகுதியுடையோர் யார்?**
1. நற்கருத்துக்கள் கேட்காத மாணவன். ✓ 2. ஆசிரியருக்கு அடங்கிய மாணவன் 3. மற்றவர் கூறும் கருத்தை மதிப்பவர்.

**3. இன்றைய அரசியல் கட்சிகளால் விரும்பி உபயோகிக்கப்படுவது:**
1. மெய் 2. வாய் 3. பொய். ✓

**4. இன்றைய அரசியல் கட்சித் தலைவர்களால் அதிகம் பயன்படுத்தப்படுவது?**
1. மெய் 2. வாய் ✓ 3. பொய்.

**5. இன்றைய தலைவர்களுக்கு புளிப்பானது:**
1. புளிப்பான பழம் 2. எட்டாத பழம் ✓ 3. கூடாத பழம்

**6. அரசியல்வாதிகளுக்குப் பிடித்த இசைக் கருவி?**
1. வீணை 2. ஜால்ரா ✓ 3. பியானோ

**7. பிடித்தமான பொன்மொழி**
1. ஏமாற்றாதே ஏமாறாதே 2. உள் ஒன்று வைத்து புறமொன்று பேசாதே 3. நம்ப நட நம்பி நடவாதே. ✓

**8. மிகப் பிடித்த பொருள்.**
1. நாற்காலி ✓ 2. ஏணி 3. கட்டில்

**9. அரசியலில் அநாதரவாகிவிட்டது இதில் எது?**
1. நேர்மை 2. உண்மை 3. மனச்சாட்சி. ✓

**10. அரசியலில் விலைமதிக்க முடியாதது?**
1. பதவி ✓ 2. வாக்குறுதி 3. மக்களின் நலன்.

### பின்வரும் தலைவர்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.



**1. மகாத்மா காந்தி.**


பாவம் பிழைக்கத் தெரியாத மனிதர். சுதந்திரம் வாங்கிக் கொடுத்தேன் பேர் வழி என்று சுகபோகங்களை அனுபவிக்கத் தெரியாதவர். இவருக்கு அரிச்சந்திரனை தெரிந்தளவுக்கு அரசியல் தெரியாது. இல்லாவிட்டால் கந்தையோடு ஏன் அலைய வேண்டும்? சுத்தை கத்தையாக சம்பாதித்திருக்கலாம்.

இந்த பிழைக்கத் தெரியாத மனிதரின் பெயரைச் சொல்லியே இந்தியாவிலும், இலங்கையிலும் பலர் பிழைப்பு நடத்தியிருக்கிறார்கள்.



**2. சுபாஸ் சந்திரபோஸ்.**


நம்நாட்டு பழம்பெரும் தமிழ் அரசியல்வாதிகள் தாம் 'இளமைத் துடிப்பில்' இருந்த காலத்தில் இவரைப் பற்றி மேடைகளில் பேசியிருக்கிறார்கள். தற்போதைய காலகட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு பிடிக்காத வெளிநாட்டு தலைவர்களில் ஒருவர்.



**3. மகாகவி பாரதியார்.**


'கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே
நாளில் மறப்பாரடி' என்று இவர் எழுதிய பாடல் 'அவதூறு' என்று கொள்ளத்தக்கதாகும். வாய்ச் சொல்லில் வீரர் என்று அரசியல்வாதிகளை சாடியது மூலம் 'தீயசக்தி' என்ற பட்டியலில் அவரையும் சேர்த்துவிடலாம்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இன்றுள்ள எந்தவொரு அரசியல் கட்சியின் மேடையிலும் இந்த மகாகவியின் பாடல் ஒலிபரப்ப முடியாதது என்ற பெருமையைப் பெறுகிறது.



**4. தந்தை செல்வநாயகம்.**

நூற்றாண்டுவிழாவில் மீண்டுமொரு முறை இவரைக் கொன்றுவிட்டார்கள். அவர் ஆரம்பத்தில் சொன்னதை மட்டுமே அவர் கொள்கையாகக் கூறி, அவர் அனுபவத்தில் சொன்னதையெல்லாம் புதைத்து விட்டதால் மறுபடியும் அந்த மனிதரை சாகடித்துவிட்டார்கள். இன்றைய அரசியலில் சாணக்கியம் என்பதில் அந்த சாகடிப்பும் அடங்கும்.



**5.தியாகி சிவகுமாரன்.**

முன்னாள் பழம்பெரும் கட்சியாலும், இந்நாள் தமிழ்க் கட்சிகளாலும் மறக்கப்பட்ட ஒருவர். அந்நாளில் இவரை தங்கக் கம்பி என்றார்கள். இன்று கேட்டால் துருப்பிடித்த கம்பி என்பார்கள்.



படிப்பகம்




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# வித்தியாச ரகம்



பார்த்ததும், என்ன இது? என்று புருவம் உயர்கிறதா? இதைப் படியுங்கள்.

பிறவியிலேயே கை கால்கள் வளங்காமலோ அல்லது இயற்கைக்கு முரணாக மூன்று கால்கள் ஒரே கையில் ஆறு விரல்களுடனோ மனிதர்கள் பிறப்பதுண்டு. கோழி, குருவி மற்றும் ஆடு மாடு போன்ற மிருகங்களில் கூட இத்தகைய இயற்கைக்கு முரணான அங்க அமைப்புகள் காணப்படுகின்றன.

அமெரிக்காவிலுள்ள மின்னகோட்டா மாணவர்கள் சிலர் தங்கள் இயற்கையியல் ஆய்வுகளின் போது இந்த மாறுபட்ட தவளையைக் கண்டு அதிசயித்தனர்.

இதன் வயிற்றிலிருந்து-தவளைகளுக்கு உரித்தில்லாத இரு மாறுபட்ட கால்கள் முளைத்திருப்பதனை அம்மாணவர்கள் கண்டனர்.

மின்னகோட்டா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரொபட் மக்கின்னல் என்ற ஆய்வாளர், தவளைக்கு இத்தகைய கால்கள் தோன்றக் காரணம் என்ன என்று ஆராயமுற்பட்டுள்ளார்.

எப்படியோ வித்தியாசக் கால்களின் உபயத்தில் உலகப் பிரபலம் பெற்றுவிட்டது இந்த தவளை. இது கிணற்றுத் தவளையல்ல. கின்னஸ் தவளை.





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# லவ்ருடே





கடந்த வாரம் நாரைக் கொக்குகளின் காதல் இரகசியங்கள் பற்றி அலசினோம். இந்த வாரம் கிளிகளின் காதல் கோட்டைக்குள் உங்களை அழைத்துச் செல்கிறோம்.

கிளிகள் பொதுவாக ஒரு முறை சோடி சேர்ந்தால் அவை இணைபிரிவதேயில்லை. தனக்குரிய இணையைத் தேடிக் கொள்வதிலும் பல ஒழுங்கு முறைகளை இவை கடைப்பிடிக்கின்றன. சோடி சேர வேண்டும் என்ற எண்ணமோ தூண்டுதலோ ஏற்படும்வரை ஆணோ பெண்ணோ தனியாகவே வாழ்கின்றன.

தனக்குரிய சோடி கிடைத்த பின்னர் பல மாதங்கள் ஒன்றாகப் பழகும்; ஆனால் உடனடியாக காதல் விவகாரங்களில் ஈடுபடமாட்டா. தனக்குரிய சோடி கிடைத்ததன் பின் நெருக்கமாக உட்கார்ந்து அவற்றுக்குரிய சைகை முறைகளில் கருத்துப் பரிமாறிக்கொள்கின்றன. ஒன்றைவிட்டு மற்றொன்று எவ்வகையிலும் பிரிவதில்லை என்பதை உறுதி செய்த பின்னர்தான் தனது அலகுகளால் அடுத்ததன் அலகுகளைக் கவ்வி முத்தம் கொடுக்க அனுமதிக்கின்றன.

'தென் அமெரிக்க இராணுவக் கிளி' என்று அழைக்கப்படும் இவ்விரு பறவைகளும் பல மாதங்கள் காதலித்து இப்போதுதான் ஒன்றின்மீது மற்றொன்று நம்பிக்கை வைத்து, தொடர்ந்து இணையாக வாழ முடிவெடுத்துவிட்டன. அதுதான் இத்தனை நெருக்கம்.

# உறுதி



முழங்காலுக்கு கீழே பொய்க்கால்கள். ஆனால் மெய்க்கால்களுடன் நாம்கூட இப்படி தாவி ஏறமாட்டோம். இந்த சாதனை வீரனின் கதையைக் கேளுங்கள்.

வட அமெரிக்காவில் வாஷிங்டன் (அமெ.தலை நகரல்ல) மாநிலத்தில் நியூஹாம்ஷயர் மலைத்தொடர் கரடு முரடான செங்குத்துப் பாறைகளைக் கொண்டது. 17 வயதான ஹியுக் ஹெர் இம்மலைகளில் தாவிக் குதித்து விளையாடுவதைப் பொழுது போக்காகக் கொண்டவன். 1982ல் இம்மலையில் கடும்பனி கொட்டியது. ஹெர்குடன் மற்றும் ஒரு நண்பரும் பனிபடர்ந்த மலைச் சிகரங்களில் பாய்ந்து திரிந்தான். காலநிலை படுமோசமானமையினால் இருவரும் பனி மழைக்குள் அகப்பட்டுவிட்டனர். மூன்று நாட்களின் பின்னர் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

உறை பனியுள் கால்கள் புதைந்து கிடந்தமையினால் ஹெர்ரின் இருகால்களும் மரத்துப் போய் செயலிழந்துவிட்டன. மருத்துவர்கள் ஹெர்ரின் முழங்காலுக்கு 4 அங்குலத்துக்குக் கீழ் வெட்டிவிட்டனர்.

பல மாதங்கள் படுக்கையில் கிடந்தான். கால்போனதைவிட, தனது விருப்பமான மலை ஏற்ற விளையாட்டைத் தொடரமுடியவில்லையே என்ற ஏக்கம் தான் அவனை வாட்டியது. செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டு- நடக்க மட்டுமே முடியும் என்று மருத்துவர்கள் எச்சரித்தனர். தனது தம்பி ரோனியின் உதவியுடனும் செயற்கை கால்களின் உதவியுடனும் அயலிலுள்ளவர்களின் வீட்டு மதில்களில் தாவி ஏறிக்குதிக்கலானான். தெருக்களால் நடந்து போவதைவிட மதில்களின் மேல் ஏறிப் பாய்ந்து திரிவதே அவனுக்கு சௌகரியமாக இருந்தது.

ஹெர் தன் மூளையைப் பாவித்து தனக்கென இரு பொய்க்கால்களை வடிவமைத்தான். இதன் உதவியுடன் செங்குத்தான பாதைகளில் ஏறி-இறங்கவும் இறுதியாக- தன் கனவான செங்குத்தான மலை தொடரில் ஏறவும் தொடங்கிவிட்டான். ஹியுக் ஹெர் நியூயோர்க்கிலுள்ள ஷவன் கங்க் மலைகளில் தாவி ஏறுவதை இப்படத்தில் காணலாம். தன்னம்பிக்கை இருந்தால் சாதிக்கலாம் என்பதற்கு அதிசயிக்கத்தக்க உதாரணம் ஹெர்.

# படிக்கட்டில்

சவுரவ் கங்குலி, இந்திய கிரிக்கெட் அணியின் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்ட வீரர். கடந்த ஆண்டு ஜூன் மாதம்தான் இந்திய அணியில் சேர்க்கப்பட்டார். ஒரு வருட காலத்துக்குள் தனது இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். இப்போது 24 வயது.

கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்த இந்திய அணியில் கங்குலி இடம்பெற்றதை இந்தியாவின் முன்னாள் ஆட்டக்காரர்கள் சிலர்கூட விமர்சித்தனர். செல்வாக்கான சிபாரிசால் இடம்பிடித்திருக்கிறார் என்றார்கள். இங்கிலாந்துடன் தோல்வியை தழுவ இருந்த டெஸ்ட் போட்டியில் அபாரமாக சதம் அடித்து போட்டியை வெற்றி தோல்வியின்றி கங்குலி முடித்துவைத்தபோது விமர்சித்தவர்கள் வாயடைத்துப் போனார்கள். இங்கிலாந்துக்கு எதிராக தொடர்ந்து இரு சதங்கள் போட்டு பிரமிக்கச் செய்தார்.அது மட்டுமல்ல, இங்கிலாந்தில் 96 கோடைகாலத் தொடரில் நூறுவருட கால சாதனை ஒன்றையும் முறியடித்தார் கங்குலி. இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகளில் அதுவரை எந்தவொரு இந்திய கிரிக்கெட் வீரரும் சராசரியாக 70 ஓட்டங்களையே பெற்றிருந்தனர். கங்குலி 95.5 ஓட்ட எண்ணிக்கை சராசரியாக பெற்ற வீரர் என்ற பெருமையை பெற்றுக்கொண்டார். 96 கோடைகாலத் தொடரில் டெஸ்ட் போட்டிகள், மற்றும் அங்கு நடைபெற்ற ஒரு முதல் தரப் போட்டி ஆகியவற்றில் விளையாடி மொத்தம் மூன்று சதங்களையும், நாலு அரைச் சதங்களையும் பெற்றிருந்தார்.



இலங்கையில் சமீபத்தில் நடந்து முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் கங்குலியின் பங்கு பெறுமதியானது. ஒரு சதம் போட்டதுடன், பந்துவீச்சு மூலம் விக்கெட்டுக்களையும் சாய்த்திருந்தார். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறும் வாய்ப்பு இருந்தும் தோல்வியை நோக்கி செல்லும் அபாயம் இந்திய அணிக்கு ஏற்பட்டது. அப்போது அசாருதீனுடன் இணைந்து பொறுப்பாக ஆடி போட்டியை வெற்றி தோல்வி இன்றி முடித்து அணியின் மானத்தைக் காப்பாற்றினார் கங்குலி.

இலங்கையில் சமீபத்தில் நடந்த ஏசியாக் கிண்ணப் போட்டியிலும் இறுதிப் போட்டிக்கு இந்தியாவை தகுதிபெறச் செய்வதிலும் கங்குலியின் விளாசல் கைகொடுத்தது. 15 ஓவருக்குள் விரைவாக அரைச்சதம் பெற்றதுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென்று உயரவும் காரணமாக இருந்தார் இந்த கல்கத்தா வீரர்.

ஒருநாள் போட்டிகளில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக இறங்குமளவுக்கு கங்குலியின் வளர்ச்சி படிப்படியாக உயர்ந்திருக்கிறது. "இந்திய அணிக்கு தேவை சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்கள்தான். விளாசவும் வேண்டும். விக்கெட்டுக்களை சாய்க்கவும் வேண்டும். வில்லாகப் பாய்ந்து பந்தை தடுக்கவும் வேண்டும்." என்பது கப்டன் டெண்டுல்கரின் எதிர்பார்ப்பு. அதனை கங்குலி நிறைவேற்றுகிறார்.

இன்னமும் கங்குலி பல படிக்கட்டுக்களை கடந்து புகழேணியில் ஏறுவதற்கு வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன.

# பெருந்தீனி




அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது இந்த கடற்பருந்துக்கு பொருந்தாது. தன்வாய்க்குள் கொள்ளாத அளவு இரையை கப்பென்று கவ்விவைத்திருக்கிறது பாருங்கள்.

கடற்கரை ஓரங்களில் சாதாரணமாகக் காணப்படும் கடற்பருந்துகள் தங்கள் வாய் கொள்ளும் அளவான இரையைத் தான் பிடித்து உண்ணும். ஆனால் மத்திய கலிபோனியக் கடற்கரையை ஒட்டி வாழும் கடற்பருந்துகள் வாய்க்குள் நுழைய முடியாத அளவுள்ளவற்றையே மென்று விழுங்கிவிடும் வல்லமை படைத்தவை. இதோ படத்தில் காணப்படும் இக்கடற்பருந்து ஒரு நட்சத்திர மீனையே பிடித்து பாதியை விழுங்கிவிட்டது.

இப்பறவைகளுக்கு எப்போதும் அகோரப்பசி. இவை 30 அங்குல நீளம்வரை வளரும். பூச்சி, புழு, தன்னினத்தைச் சேர்ந்த வேறு கடற்பருந்துகள் இடும் முட்டைகள், கரையோரமாகச் செத்துக்கிடக்கும் மிருகங்கள், பறவைகள் ஆகியவைதவிர தாவரவர்க்கங்களையும் தானியங்களையும் பழவகைகளையும்கூட விட்டு வைக்காமல் சகலவற்றையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடுமாம். இவற்றை 'கடற்கரை சுத்திகரிப்புத் தொழிலாளி' என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

கலிபோனியக் கடற்கரையில் ஆய்வில் ஈடுபட்டிருந்த ஆய்வாளர்கள் தற்செயலாக ஒரு கடற்புறா ஓரடி நீளமுள்ள மற்றுமொரு கடற்பறவை ஒன்றை பிடித்து விழுங்கியதைக் கண்டனர். அதே பருந்தை ஆய்வாளர்கள் பிடித்து ஆராய்ந்ததில் அதன் வயிற்றில் பின்னர் விழுங்கிய அதே அளவுள்ள மற்றொரு கடற்பறவை விழுங்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிசயித்தனர். குண்டோதரப் பருந்து.